REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK
2023 மார்ச் 3 வெள்ளிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்
1932 - 2022
வரு. 91 இல. 53 | Friday 03, March, 2023 | 16 பக்கங்கள் | 50/-

## உரத்தை தட்டுப்பாடின்றி வழங்க அரசு நடவடிக்கை

### அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

சிறு போகத்திற்குத் தேவையான உரத்தை எவ்வித தட்டுப்பாடுமின்றி, உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு வழங்கும் வேலைத்திட்டத்தை மேற்கொண்டுள்ளதாக கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

06

### அவசியமான தரப்பு இலகுவாக பெறும் வகையில்

## முதலீட்டு தகவல்களை டிஜிட்டல் மயப்படுத்த ஜனாதிபதி ஆலோசனை

### முதலீட்டு வாய்ப்புகளை ஊக்குவிக்குமென தெரிவிப்பு



அவசியமான எந்தவொரு தரப்பினரும் இலகுவாகவும் விரைவாகவும் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் முதலீட்டுத் தகவல்களை, டிஜிட்டல் மயமாக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் (01) நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, ஜனாதிபதி இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகளை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தலே இதன் நோக்கம் எனவும், இதன் மூலம் முதலீட்டாளர்கள் புதிய

06

## கச்சதீவு ஆலய திருவிழா இன்று ஆரம்பமாகிறது

### இந்தியாவிலிருந்து 2,500 பக்தர்கள் வருகை

(யாழ். விசேட நிருபர்)



கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட

06

## இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வலுவடைந்தது

### கொள்வனவு 343.97; விற்பனை 356.73



அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி மேலும் வலுவடைந்துள்ளது. இதன் படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 343 ரூபா 97 சதமாகவும், விற்பனை விலை 356 ரூபா 73 சதமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தின தரவுகளுக்கமைய, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 351 ரூபா 72 சதமாகவும், விற்பனை விலை 362 ரூபா 95 சதமாகவும் காணப்படுவதாக இலங்கை மத்திய வங்கி தெரிவிக்கின்றது.

06

# ஏற்றுமதி வருமானம் ஜனவரியில் 1,000 மில். டொலராக அதிகரிப்பு

### ஆடை உற்பத்தி, தேயிலை, இறப்பரில் அதிகளவு அந்நியச் செலாவணி

### சர்வதேச சந்தைகளை இலக்கு வைக்கவும் புதிய திட்டங்கள்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஏற்றுமதி வருமானத்தை நிலையான மட்டத்துக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதால், இவ்வருட முதல் மாதத்தில் ஏற்றுமதி வருமானம் 1,000 மில்லியன் டொலரை விட அதிகரித்துள்ளது. இதனை, சுங்கத் திணைக்களத்தின் தரவுகள் உறுதிப்படுத்தியுள்ளன. இதன் பிரகாரம் இவ்வருட ஜனவரியில், வர்த்தக பொருட்களின் ஏற்றுமதி வருமானம் 1,000.9 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளதென்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது. கடந்த 2022 ஆம் ஆண்டு ஜனவரியில் ஏற்றுமதி வருமானமாக 1,100.9 டொலரைப் பெற முடிந்தது. மேலும், இவ்வருட ஜனவரியில், இவ்வருமானம் 8.98 வீதத்தால் குறைந்துள்ளதாகவும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது. எவ்வாறெனினும், 2021 ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில், இவ்வருடத்தின் வர்த்தகப் பொருட்கள் ஏற்றுமதி வருமானம் 6.97 வீதமாக உயர்வடைந்துள்ளதாக அச்சபை தெரிவித்துள்ளது.

ஆடை உற்பத்தித் துறை மூலமாகவே அதிக ஏற்றுமதி வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது. ஆடை ஏற்றுமதியால் 423.13 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானமாக கிடைத்துள்ளது. அத்துடன் 99.56 மில்லியன் அமெரிக்க டொலர் தேயிலை ஏற்றுமதி மூலமும், 75.89 மில்லியன் அமெரிக்க டொலர் இறப்பர் உற்பத்திப்பொருட்கள் சார்ந்த ஏற்றுமதி மூலமும் கிடைத்துள்ளன.

கடந்த ஜனவரி மாதத்தைவிட அதிக ஏற்றுமதி அமெரிக்காவுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பெறுமதி 254.78 மில்லியனாகும். அத்துடன் ஐக்கிய இராச்சியத்திற்கான ஏற்றுமதி வருமானம் 77.42 மில்லியன் அமெரிக்க டொலராகவும்,

06

## பசுமை வலுசக்தி பொருளாதாரத்துக்கு விரைவாக மாற வேண்டியது அவசியம்

### மின்சார வாகன உற்பத்தி தொழிற்சாலை திறப்பு நிகழ்வில் ஜனாதிபதி வலியுறுத்து



பசுமை வலுசக்தி பொருளாதாரம் மூலம் அடுத்த ஐந்து ஆண்டுகளில் இலங்கையின் பொருளாதாரத்தை சர்வதேச மட்டத்துக்கு உயர்த்தக் கூடிய அடித்தளத்தை உருவாக்கவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

06




## யாழ். மாநகர சபைக்கு மீண்டும் புதிய முதல்வர்

### வர்த்தமானி வெளியானது, 10 இல், சபை அமர்வு

03

## தேர்தலுக்கு தடையாகவுள்ள அரச அதிகாரிகள் யார்?

### விசாரணை நடத்தக் கோரி உயர்நீதிமன்றில் மனு



உள்ளூராட்சித் தேர்தலை நடத்த ஒத்துழைப்பு வழங்காமல், தடையை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்த அரச நிறுவனங்களின் அதிகாரிகளின் செயற்பாடுகள் தொடர்பில், உடன் விசாரணை நடத்துமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு, தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் இந்த

06

## உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் இன்று விசேட கலந்துரையாடல்

### அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆணைக்குழு ஆராயும்

உள்ளூராட்சித் தேர்தலுக்கான திகதியை தீர்மானிப்பது உள்ளிட்ட தேர்தலுக்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக தேர்தல்கள் ஆணைக்குழு இன்று (03) கூடுகிறது.

இதனிடையே, உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் எழுந்துள்ள சிக்கல்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் மற்றும் ஆணைக்குழுவுக்கிடையில் (28) விசேட கலந்துரையாடலொன்று நடைபெற்றதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

06

## பெரிய வெங்காயம், கிழங்கு விலைகளில் மேலும் வீழ்ச்சி

### இறக்குமதியாளர் சங்கம் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



கொழும்பு புறக்கோட்டை மொத்த வர்த்தக சந்தையில் பெரிய வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கின் விலைகள் நேற்று மேலும் குறைவடைந்துள்ளதாக அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்

06

### கொரோனாவுக்கு பின்னர் முதலாவது

## சீன சுற்றுலா பயணிகள் குழு இலங்கை வருகை



(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டுக்கு வருகைதரும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை இவ்வருடத்தின் கடந்த இரண்டு மாதங்களில் வேகமாக அதிகரித்துள்ளது. இக்காலப்பகுதிகளுக்குள் 2,10,184

06

## இலங்கையின் கடனுதவிகளுக்கு ஆதரவளிப்பதாக சீனா மீண்டும் உறுதி



சர்வதேச நாணய நிதியத்துக்கான இலங்கையின் கடன் விண்ணப்பத்துக்கு, ஆரவளிக்கவுள்ளதாக மீண்டும் சீனா, உறுதியளித்துள்ளது.

இது தொடர்பான ஆவணங்களை, சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கி, நிதி அமைச்சிடம் கையளித்துள்ளதாக சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மாவோ நிங் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பான விசாரணைக்கு பதிலளித்த

06

## படுகொலை குற்றவாளிகள் நால்வருக்கு மரண தண்டனை

### கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று தீர்ப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



கூரிய ஆயுதத்தால் தாக்கி, நபரொருவரை படுகொலை செய்த சம்பவத்தில் குற்றவாளிகளாக காணப்பட்டுள்ள நான்கு பேருக்கு, கொழும்பு மேல் நீதிமன்றம் மரணதண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது.

கொழும்பு கொட்டாஞ்சேனை

06

## இந்திய மீனவர்களை பாதுகாக்க ஏற்பாடு

### அண்ணாமலைக்கு ஜெய்சங்கர் பதில் கடிதம்



இந்திய மீனவர்களைப் பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர், கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

தமிழக பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் குப்புசாமி அண்ணாமலைக்கு, வெளியுறவுத் துறை அமைச்சர் அனுப்பி வைத்துள்ள பதில் கடிதத்தில் இந்த விடயம்

06



## பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டால் மரண தண்டனை

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் எச்சரிக்கை

03



## சகோதரர்கள் மூவருக்கு கனடாவில் கிடைத்த அதிர்ஷ்டம்

### லொட்டோ ஜாக்பொட் பரிசாக பல மில். டொலர்

03



## மக்களுக்கு தற்போதைய சூழலில் நிவாரணமே தேவை

### தேர்தல் அவசியமற்றதொன்று - டயானா கமகே

03

## போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை

### பொலிஸாருக்கு அமைச்சர் டக்ளஸ் பணிப்பு

(யாழ்., பருத்தித்துறை விசேட நிருபர்கள்)




யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை பிரச்சினைக்கு உடனடி நடவடிக்கை வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொலிஸாரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக்

06

## கல்முனை மாநகர சபை வரிப்பணத்தில் சிலர் மோசடி

### கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - ஹரீஸ் எம்.பி



கல்முனை மாநகர சபையின் வரிப் பணத்தை மோசடி செய்தவர்களுக்கு எதிராக, தயவு தாட்சண்யமின்றி கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேசியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர்

06

# வடக்கின் உதயம்

## நல்லூர் வாள்வெட்டு சம்பவம் பிரதான சந்தேகநபர் கைது

யாழ்.விசேட நிருபர்

சிவராத்திரி தினத்தன்று நல்லூர் பின் வீதியில் இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரதான சந்தேகநபர் 27 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 18ஆம் திகதி மகாசிவராத்திரி தினத்தன்று அதிகாலை வேளை நல்லூர் பின் வீதியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் தலைமறைவாகியிருந்த நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட வாளும் மீட்கப்பட்டுள்ளது.

வாள்வெட்டு சம்பவம் தொடர்பில் ஏற்கனவே மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் பிரதான சந்தேகநபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

## தமிழக மீனவர்களின் படகுகளை அரசுடைமையாக்குமாறு உத்தரவு

யாழ்.விசேட நிருபர்

தமிழக கடற்றொழிலாளர்களின் 8 படகுகளை அரசுடைமையாக்குமாறு ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக கடற்றொழிலாளர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகுகளுக்கான உரிமை கோரும் வழக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

முன்னதாக எட்டு படகுகள் தொடர்பிலான விசாரணைகள் நடைபெற்றன. இதன்போது நான்கு படகுகள் விடுவிக்கப்பட்டன. மூன்று படகுகளின் உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகாது தமது சார்பில் வேறு நபர்களை அனுப்பி வைத்தமையால், மூன்று படகுகளும் அரசுடைமையாக்கப்பட்டது.

அதேவேளை ஒரு படகுக்கான உரிமை கோரல் விசாரணைக்காக மே மாதம் திகதியிடப்பட்டுள்ளது.

அடுத்ததாக, மேலும் ஒரு படகு தொடர்பிலான விசாரணை நடைபெற்று, அந்த படகுக்கான விசாரணைகள் நேற்றைய தினம் முடிவுக்கு வந்தது. அது தொடர்பான உத்தரவு மே மாதம் 5ஆம் திகதி நீதிமன்றத்தால் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதனைதொடர்ந்து நடைபெற்ற மேலுமொரு படகு வழக்கில் 5 படகுகள் அரசுடைமையாக்கப்பட்டன.

மேலுமொரு படகுக்கான கட்டளைக்காக எதிர்வரும் 24ஆம் திகதி திகதியிடப்பட்டுள்ளது.

அதேவேளை மற்றுமொரு படகுக்கான உத்தரவு மே மாதம் 8ஆம் திகதி வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டது.

## நுணாவில் நகர் பூங்கா பணிகளுக்கு நலன்விரும்பிகளை உதவுமாறு கோரிக்கை

சாவகச்சேரி விசேட நிருபர்

சாவகச்சேரி நகரசபையினால் நுணாவிலில் அமைக்கப்பட்டு வருகின்ற நகர் பூங்கா பணிகளை பூரணப்படுத்த நலன்விரும்பிகள் முன்வர வேண்டுமென சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் கோரிக்கை விடுத்துள்ளார்.

சாவகச்சேரி நகரசபையின் தீர்மானத்திற்கு அமைவாக நுணாவில் பகுதியில் காணி கொள்வனவு செய்து பூங்கா அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முதற்கட்டமாக சுற்றுமதில் அமைக்கப்பட்டு பூங்காவிற்கான பிரதான விளையாட்டு உபகரணமும் பொருத்தப்பட்டுள்ளது.

இருப்பினும் இச்செயற்பாடுகளை நகரசபை நிதி வளத்தை மாத்திரம் பயன்படுத்தி பூரணப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.

எனவே நலன் விரும்பிகள் யாரேனும் குழந்தைகளின் பிறந்த நாள் அன்பளிப்பாக நகர்ப்பூங்காவில் ஏதேனும் வேலைத்திட்டங்களை பொறுப்பெடுத்து உதவிட முடியும்.

## பூநகரி பள்ளிக்குடா இறங்குதுறையை அபிவிருத்தி செய்து தருமாறு கோரிக்கை

பரந்தன் குறூப் நிருபர்

கிளிநொச்சி பூநகரி பள்ளிக்குடா இறங்குதுறையை அபிவிருத்தி செய்து தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி பூநகரி பள்ளிக்குடா இறங்குதுறை அபிவிருத்தி செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றது. இதனால் கடற்றொழிலுக்காக செல்லும் மீனவர்கள் தமது படகுகளை கடலுக்கு கொண்டு செல்வதிலும் படகுகளை கரைசேர்ப்பதிலும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே இப்பகுதியிலுள்ள இறங்குதுறையை அபிவிருத்தி செய்து தருமாறு இப்பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அதாவது கடலிருந்து கரையை வந்தடைவதற்கு அமைக்கப்பட்ட ஆழமான வாய்க்கால் பகுதி மண் நிரம்பி காணப்படுகின்றது. இதனை ஆழமாக்கி தருமாறும் இப்பகுதி கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 11 சந்தை வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

### யாழில் திடீர் சோதனை

யாழ்.விசேட நிருபர்



யாழ்ப்பாணத்தில் முத்திரை பதிக்கப்படாத நிறுக்கும் கருவிகளை (தராசுகள்) பயன்படுத்திய 11 வியாபாரிகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவின் உத்தியோகத்தர்களால் நேற்று முன்தினம் புதன்கிழமை பண்ணை மீன் சந்தை, நாவாந்துறை மீன்சந்தை, காக்கைதீவு மீன்சந்தை மற்றும் சின்னக்கடை மீன்சந்தை ஆகிய இடங்களில் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது இச்சந்தை தொகுதிகளில் காணப்படும் இறைச்சி, மீன் விற்பனை நிலையங்களிலும் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவின் உத்தியோகத்தர்களால் சோதனை மேற்கொள்ளப்பட்டன. அவ்வேளையில் வியாபாரிகளால் பயன்படுத்தப்பட்ட நிறுக்கும் கருவிகளை பரிசோதித்த போது அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்படாத மற்றும் நடப்பாண்டில் முத்திரை பதிக்கப்படாத நிறுக்கும் கருவிகளை பயன்படுத்திய 11 வியாபாரிகள் இனங்காணப்பட்டு அவர்களுக்க எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் இனிவரும் காலங்களில் நிறுவை அல்லது அளவை. நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணங்களைப் வியாபார நோக்கத்திற்காக பயன்படுத்தும் வியாபார நிலையங்களையும் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்படுமென அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவினர் தெரிவித்தனர்.

## உலக நீர் தின சுவரொட்டிப் போட்டி

கிளிநொச்சி குறூப் நிருபர்

உலகநீர் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையேயான சுவரொட்டிப் போட்டியொன்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் நடாத்தப்படவுள்ளது.

'நீர் மற்றும் சுகாதார நெருக்கடியை தீர்ப்பதற்கான மாற்றத்தை துரிதப்படுத்துவது என்ற கருப்பொருளுக்கமைவாக ஆக்கங்களை மாணவர்கள் தயாரிக்க வேண்டும்.

இப்போட்டிகள் பிரிவு 01: தரம் 03 தொடக்கம் 05 வரையும், பிரிவு 02: தரம் 06 தொடக்கம் 09 வரையும், பிரிவு 03: தரம் 10 தொடக்கம் 11 வரையும், பிரிவு 04: உயர் தரத்திற்கும் என பிரிக்கப்பட்டுள்ளன.

சுவரொட்டிகள் A 4 அளவுத்திட்டத்தில் தயாரிக்கப்படவேண்டும். கைகளால் தயாரிக்கப்படவேண்டும் (கணினி சார் தொழில்நுட்பங்கள் பாவிக்கப்பட்ட முடியாது) மாணவர்களின் ஆக்கமானது அதிபரினால் அல்லது பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களால் உறுதிப்படுத்தப்படுவதோடு மாணவர் பெயர், தரம், பாடசாலை என்பன தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்கள் பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசில் வழங்கப்படுவதோடு தெரிவு செய்யப்படும் அனைத்து சுவரொட்டிகளும் நிகழ்வில் காட்சிப்படுத்தப்படும் ஆக்கங்கள் அனைத்தும் 15.03.2023 ற்கு முன்னராக பிரதிப் பொதுமுகாமையாளர் அலுவலகம், பிராந்திய சேவைகள் நிலையம் வடக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை வவுனியா அல்லது அல்லது உங்களது பிரதேசத்திலுள்ள தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையில் நேரடியாகவோ அல்லது dgm.section@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்க முடியும்.

## மருமகன் தாக்கி மாமியார் பலி, மனைவி கவலைக்கிடம்

### வவுனியாவில் பயங்கரம்

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா பெரியஉலுக்குளம் பகுதியில் மருமகனின் தாக்குதலுக்குள்ளாகி மாமியார் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், மனைவி படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று (02) காலை இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

நேற்றையதினம் காலை கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது. ஒருகட்டத்தில் வாக்குவாதம் முற்றி வீட்டிலிருந்த கோடாரி மற்றும் கத்தியை கொண்டு கணவன், மனைவி மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

இதனை தடுக்க சென்ற மனைவியின் தாயார் மீதும் கடுமையான தாக்குதலை மேற்கொண்டுள்ளார். இதனால் தலையில் பலத்த காயமடைந்த மனைவியின் தாயார் சம்பவ இடத்திலேயே பலியானார். படுகாயமடைந்த மனைவி கவலைக்கிடமான நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் பெரிய உலுக்குளம் பகுதியைச் சேர்ந்த டி.பி அமராவதி (வயது60), என்ற பெண் பலியானதுடன் அவரது மகளான துலிகா ரத்தினசிறி என்ற பெண் (வயது37) படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு இரு பிள்ளைகள் உள்ளனர்.

தாக்குதலை முன்னெடுத்த நபரை பொதுமக்கள் மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக உலுக்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## நகர்வலம்

## அப்சராஸ் நிறுவனத்தின் தலைவர் மறைவுக்கு ஆனந்தகுமார் இரங்கல்



கண்டி திகன அப்சராஸ் நிறுவனத்தின் தலைவரும் கண்டி வர்த்தக சங்கத்தின் தலைவருமான ஆர். அன்பழகன் நேற்று காலமான தகவல் மிகுந்த வேதனையை அளிக்கிறது என இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ். ஆனந்தகுமார் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

அன்னாரின் பிரிவு அவருடைய குடும்பத்துக்கு மாத்திரமல்ல அவர் சார்ந்த அனைவருக்கும், நண்பர்களுக்கும் பெரிய இழப்பாகும். அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தாருக்கு உறவினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதாகவும் அவர் தமது அனுதாப செய்தியில் கூறியுள்ளார்.

## வலம்புரி கவிதா வட்ட 85 ஆவது கவியரங்கு



வலம்புரி கவிதா வட்டத்தின் 85 ஆவது கவியரங்கு எதிர்வரும் 06ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு கொழும்பு, வாழைத்தோட்டம் அல் ஹிக்மா கல்லூரியில் நடைபெறும்.

கவிஞர் கலாபூஷணம் யாழ். அஸீம் தலைமையில் கவியரங்கு இடம்பெறும். நான்கு நிமிடங்களுக்கு உட்பட்ட கவிதை பாட விரும்புவோர் நஜ்முல் ஹுசைன் (தலைவர்) 074 143 8447 அல்லது இளநெஞ்சன் முர்ஷிதீன் (செயலாளர்) 077 738 8149 அல்லது ஈழகணேஷ் (பொருளாளர்) 071 756 3646 உடன் தொடர்பு கொள்ளவும்.

## சுற்றாடல் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு உதவுமாறு அமைச்சர் நஸீர் அஹமட் கோரிக்கை



இலங்கை முன்னெடுக்கும் சுற்றாடல் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குமாறு இலங்கைக்கு உதவி வழங்கும் முகவர் நிலையங்களை சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் வலியுறுத்தியுள்ளார். நிதியுதவி வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் நடாத்தப்பட்ட சந்திப்பிலே, அமைச்சர் இந்த வேண்டுகோளை விடுத்தார். அமைச்சின் கேட்போர் கூடத்தில் (28) இக்கூட்டம் நடைபெற்றது.

அமைச்சரின் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க,UNDP, INCU, UN Environment Programme, UNIDO, GGGI, Food and Agriculture Organization, EU and ICRA கலந்து கொண்டனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர், சுற்றாடல் திட்டங்களுக்கான நிதியைப் பெறும் இலக்குகள் நோக்கி இலங்கை நகர வேண்டியுள்ளது. இது குறித்து அதிக கவனம் செலுத்துவதுடன், பயிற்சியிலும் ஈடுபடுவது அவசியம். இதனால், கிடைக்கும் அனுபவங்கள், எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தவுள்ள சுற்றாடல் திட்டங்களுக்கு பலம் சேர்க்கும்.

சுற்றாடலை அபிவிருத்தி செய்வதற்கான உண்மையான இலக்குகளை கண்டறிவதுதான் இச்செயற்றிட்டத்தின் நோக்கம். இதனால், இதற்குத் தேவையான நிதிகள், இச்செயற்பாடுகளில் எதிர்கொள்ளும் பாதிப்புக்களில் கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது.

இக்கூட்டத்தில் பங்கேற்ற சுற்றாடலை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் பங்காளர்கள் தங்களது அனுபவங்கள், இத்திட்டத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை முன்வைத்தனர்.

இதைக் கவனத்தில் கொண்ட அமைச்சர், இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நடத்தப்படும் கூட்டங்களில் அவசியம் கலந்து கொள்ளுமாறும் பணிப்புரை விடுத்தார். மேலும், இவ்வாறான திட்டங்களுக்கு உதவியளித்த முகவர் நிறுவனங்களுக்கும் அமைச்சர் நன்றி தெரிவித்தார்.

## கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்தும் அற்றைத் திங்கள்



ஈழத்தின் மூத்த படைப்பாளிகளும், தகைசால் ஆளுமைகளும், தத்தமது வாழ்வியல் செல்நெறிகள், கலை இலக்கிய நட்பு எழுகைகள், பண்பாட்டுத் தாக்கங்கள், படைப்பு முயற்சிகள் பற்றிய அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் தனித்துவமான “அற்றைத் திங்கள்” நிகழ்வு கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தலைமையில் எதிர்வரும் 06ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு உரை நிகழ்த்தவுள்ளார்.

## ஆளுமையின் அடையாளம் நூல் வெளியீட்டு விழா

எழுத்தாளர் ரவூப்டீன் எழுதிய ஆளுமையின் அடையாளம் என்ற நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வரக்காப்பொல பாபுல் ஹஸன் மத்திய கல்லூரியில் ஓய்வுபெற்ற காதி நீதிபதி எம்.எம்.எம். ஆமிர் தலைமையில் நடைபெறவுள்ளது.

சுவடுகள் பதிப்பகம் வெளியிடவுள்ள இந்நூல் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகரும் டவர் நிதியப் பணிப்பாளர் சபை உறுப்பினரும் புரவலர் புத்தகப் பூங்கா ஸ்தாபகருமான புரவலர் ஹாஷிம் உமர், சிறப்பு அதிதியாக மனித வள அபிவிருத்தி ஸ்தாபனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பீ.பீ. சிவப்பிரகாசம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## பஹமுனே தொழிற் பயிற்சி நிறுவன பட்டமளிப்பு விழா கொழும்பில்





ருஸைக் பாரூக்

பஹமுனே தொழிற்பயிற்சி நிறுவனம் மற்றும் தேசமானிய ஏ.எம்.எம். சஹாப்தீன் டிரஸ்ட் அறக்கட்டளை இணைந்த ஏற்பாடு செய்திருந்த முதல் பட்டமளிப்பு விழா அண்மையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி சலீம் மர்சூப் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இதில் ஓட்டோ எலக்ட்ரிக்கல், இலக்ட்ரிக் பவர், ஓட்டோ மொபைல், Micro Soft Office மற்றும் ஏசி மற்றும் குளிர்சாதனப் பெட்டிகள் என பல்வேறு துறைகளைச் சேர்ந்த பாடநெறியை பூர்த்திசெய்த 90 மாணவர்கள் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டனர்.

மிகவும் விடாமுயற்சியுடன் செயல்பட்ட மாணவர்களான எஸ். பைஸூர் ரஹ்மான் மற்றும் எம்.ஆர். மொஹமட் அலி ஆகியோர் பிரதம அதிதிகளிடமிருந்து ஷஹாப்தீன் விருதுகளை பெற்றுக்கொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசி, மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழு பணிப்பாளர் டி.செந்தூரன், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தின் உதவி விரிவுரையாளர் திருமதி. சண்முகம் மகாலக்ஷ்மி, ஏ.எம். எம். சஹாப்தீன் அறக்கட்டளையின் தலைவர் ரிஸ்வான் சஹாப்தீன், ரெயின்கோ நிறுவனர் தலைவர் எஸ். எல்.எம். பௌஸ், தொழிற்பயிற்சி நிலைய முகாமையாளர் எம்.எல்.எம். இஸ்மாயில், சஹாப்தீன் அறக்கட்டளையின் ஒருங்கிணைப்புச் செயலாளர் ஷேக் ஹஸ்மத்துல்லா, சஹாப்தீன் அறக்கட்டளை பணிப்பாளர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## வக்பு சபையின் புதிய தலைவர் நியமனம்

மொறட்டுவை மத்திய விசேட நிருபர்



வக்பு சபையின் புதிய தலைவராக மொஹிடீன் ஹுசைன், புத்தசாசன மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவினால் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் காதி நீதிபதிகளின் உயர் பீடமான காதிச் சபையின் அங்கத்தவராக நீண்டகாலம் பணியாற்றியுள்ளார்.

ஆரம்பத்தில் வக்பு சபையில் கூட 2007 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை அங்கத்தவராக செயல்பட்ட அனுபவம் கொண்டவர். இச்சபையின் பதில் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

## தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு விற்பனை சந்தை

தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டு, உயிர்த்த ஞாயிறு தினங்களை முன்னிட்டு இலங்கை தமிழ் மகளிர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள பல்வேறு உற்பத்திப் பொருட்களின் விற்பனை சந்தை, நாளை சனிக்கிழமை (04) காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை கொழும்பு 07, கிள்பேர்ட் கிரசன்ட் மகளிர் சர்வதேச கழகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பல்வேறு வகையான உணவுப் பொருட்கள், ஆடை வகைகள், அணிகலன்கள் ஆகியவற்றின் விற்பனை நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

சமூகத்துக்கு பல்வேறு வழிகளிலும் உதவும் நோக்கில் இந்த விற்பனை நடத்தப்படுவதாகவும் தொழில் முனைவோர் தங்களின் தயாரிப்புகள், உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்கும் வகையில் ஊக்குவிப்பதற்கான ஒரு முயற்சி எனவும் ஏற்பாட்டாளர்கள் மேலும் தெரிவித்தனர்.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 மார்ச் 3 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්




**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 05.08 |
| லுஹர் | 12.24 |
| அஸர் | 03.42 |
| மஃரிப் | 06.22 |
| இஷா | 07.32 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் மாசி 19

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

## தவக்கால சிந்தனை



### உறவுகளை பலப்படுத்துவோம்

**வெள்ளி – மத்தேயு 5: 20 – 26**

தவக்காலத்தின் முதல் வாரத்தில் பயணிக்கின்றோம்.

அந்த வகையில் தவக்காலத்தில் வெள்ளிக்கிழமைகள் சிறப்பு பெறுகின்றன. தவக்கால முதலாம் வார வெள்ளிக்கிழமையானது சினத்தினை சிதைத்து நல்லுறவினைக் கட்டியெழுப்பிட எமக்கு அழைப்பு விடுக்கின்றது.

கோபப்படாதீர்கள், எரிந்து விழாதீர்கள், சினங் கொள்ளாதீர்கள் இவையாவும் நேரிய வாழ்விற்கான அன்றாடத் தேவைகளாகும்.

இதனைக் குறித்தே இயேசுகிறிஸ்து நற்செய்தியில் "பரிசேயர், மறைநூல் அறிஞர்கள் இவர்களைவிட உங்களது நெறி சிறந்தாக இருக்கட்டும்"என்று அழைப்பு விடுக்கிறார்.

அவ்வாறு அழைப்பு விடுப்பதன் வாயிலாக உன்னதமான வாழ்க்கைக்கு கிறிஸ்தவ நம்பிக்கையாளர்களை அவர் அழைக்கின்றார்.

அந்த அழைப்பின் சிறப்பு யாதெனில் வாழ்வில் வன்சொற்களைத் தவிர்த்து இனிமை ததும்பும் வார்த்தைகளைப் பயன்படுத்தி அடுத்தவர்களுடன் நல்லுறவில் வாழ்கின்ற வாழ்க்கை முறையாகும்.

திருத்தூதர் பவுல் கூறுமாற்போல்: "பொழுது சாய்வதற்கு முன் உங்களது கோபம் தணியட்டும்" என்பதே சீரான வாழ்வின் தாரக மந்திரமாக இருக்க வேண்டும்.

தவக்காலத்தில் உங்களது உறவுகளுடன் உறவுநிலை சீராற்றதாக இருப்பதாக உணர்ந்தாலோ அல்லது பகைமை காணப்பட்டாலோ அவர்களை நாடித்தேடி முதலில் உறவுகளைச் சரிசெய்து கொள்ளுங்கள்.

அதன்பின்பு உங்கள் பலிகளைச் செலுத்திப் பாருங்கள் எவ்வளவு பெரிய மகிழ்வினை வாழ்வில் உணருவீர்கள். அன்புநெறி வாழ்வின் நெறி என்பதனை மறவாதிருங்கள்.

அருட்தந்தை நவாஜி...

## சகோதரர்கள் மூவருக்கு கனடாவில் அடித்த அதிர்ஷ்டம்

### லொட்டோ ஜாக்பொட் பரிசாக பல மில். டொலர்



கனடா, ஒன்றாரியோவைச் சேர்ந்த மூன்று சகோதரர்கள் லொட்டோ சீட்டிழுப்பில் பெருந்தொகையை வென்று பெரும் செல்வந்தர்களாக மாறியுள்ளனர். அண்மையில் நடைபெற்ற லொத்தர் சீட்டிழுப்பில் இரு சகோதரர்களும், ஒரு சகோதரியும் பெருந்தொகை பணத்துடன் வெற்றியை ஈட்டியுள்ளனர். இந்த சீட்டிழுப்பில் ஐந்து மில்லியன் டொலர்களை இவர்கள் வென்றுள்ளனர். யோகராஜ் பொன்னுத்துரை, தவராஜா பொன்னுத்துரை மற்றும்

06

## மக்களுக்கு தற்போதைய சூழலில் நிவாரணமே தேவை தேர்தல் அவசியமற்றது

வரவுசெலவு திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துமாறு, வரவு செலவு திட்டத்துக்கு எதிராக வாக்களித்த எதிர்க்கட்சிகள் குரல் எழுப்புவது கேலிக்கூத்தாக இருப்பதாக இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்துள்ளார்.

06

## பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டால் மரண தண்டனை

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் எச்சரிக்கை

உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அநாதரவாக்கப்பட்டுள்ளன. இத்தாக்குதலில் ஈடுபட்ட அனைவரும் சட்டத்தின் முன்நிறுத்தப்படுவரெனக் கூறப்பட்டாலும், சகலதும் மூடி மறைக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பைக் காரணம் காட்டி, சில விசாரணை அறிக்கைகள் வெளியிடப்படவில்லையென்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

இதனால், உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் ஈடுபட்ட சகலரையும் சட்டத்தின் முன் நிறுத்தும் வேலைத் திட்டத்தை வலுப்படுத்த, ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதற்கென,உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பாதுகாப்பு முகவராண்மை அமைப்புகள் ஈடுபடுத்தப்படும் என்றார்.

மரணதண்டனை வழங்குவது லிபரல்வாத கொள்கைக்கு எதிரானது என்று சிலர்,கூறுகின்றனர்.

பாடசாலை மாணவர்கள் கூட போதைப் பொருளுக்கு பலியாகி விட்டதாக இவர்களிடம் கூற வேண்டியுள்ளது.

எனவே, சிங்கப்பூரில் தற்போதுள்ள சட்டங்கள் கொண்டு வரப்பட்டு போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்கள் இல்லாதொழிக்கப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

முன்பிருந்த தலைவர்களைப் போல் இலத்திரனியல் திரைகளைப் பார்த்து பேசுவது, ஒருவரின் மேற்பார்வையில் பேசுவது, பேச்சுக்குப் பிறகு பேச்சைத் திருத்தி, மறுவடிவமைத்தல் போன்ற செயற்பாடுகள் தன்னிடம் இல்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

வத்தளை, ஜாஎல, கட்டான, நீர்கொழும்பு போன்ற பிரதேச எல்லைகளில் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களை வலுக்கட்டாயமாக உரித்தாக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபை விரும்பியது. இவ்வேளையில், கர்தினால் ஆண்டகையும் ஐக்கிய மக்கள் சக்தியுமே எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## யாழ். மாநகர சபைக்கு மீண்டும் புதிய முதல்வர்

### வர்த்தமானி வெளியானது, 10 இல், சபை அமர்வு

யாழ். மாநகர சபையின் எஞ்சியுள்ள ஆட்சிக் காலத்துக்குப் புதிய முதல்வர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் எதிர்வரும் (10) காலை 10:00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தல், வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம்,

யாழ். மாநகர சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட வாக்கெடுப் அங்கீகரிக்கப்படாததால், முதல்வராகவிருந்த சட்டத்தரணி வி.மணிவண்ணன் பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

இதனையடுத்து, கடந்த ஜனவரி (20) இடம்பெற்ற முதல்வர் தெரிவில் இ. ஆர்னோல்ட் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

அவரது நியமனம் தொடர்பில் கடும் சர்ச்சைகள் எழுந்தன. இந்நிலையில், 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தை கடந்த (14 ) அவர், சமர்ப்பிப்பித்திருந்தார். இதுவும் வாக்கெடுப்பில் தோற்கடிக்கப்பட்டது. இதையடுத்து, இரண்டாவது வாக்கெடுப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதிலும் ஆர்னோல்ட் சமர்ப்பித்த வரவு செலவு திட்டம் 06 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது. அதனையடுத்து அவர் பதவி விலகினார்.

நாட்டிலுள்ள சகல உள்ளூராட்சி சபைகளினதும் பதவிக் காலம் 2022 மார்ச் மாதம் (18) நிறைவுக்கு வந்த நிலையில், உள்ளூராட்சி சபைகள் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிசபைகள் அமைச்சருக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்பிரகாரம், மேலும் ஒரு வருட காலத்துக்கு அதாவது மார்ச் (19) வரை நீடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விலைமனுக்கோரல்களுக்கான அழைத்தல்

### அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் காகிதாதி அம்சங்களை உள்ளடக்கியுள்ள பரிசுப் பொதிகளை வழங்கல்

**LPA/04/2023**

2023 மார்ச் 02ம் திகதிய தினகரன் நாளிதழின் 15ஆம் பக்கத்தில் பிரசுரமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது 'பூர்த்தி செய்யப்பட்ட பொதிகளை 2023 ஏப்ரல் 12 அல்லது அதற்கு முன் ஒப்படைத்தல் வேண்டும்' என்று திருத்தப்படல் வேண்டும் என்பதை தயவு கூர்ந்து கவனிக்கவும். முன்பு பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்படும் ஏனைய சகல விபரங்களும் மாற்றமின்றி காணப்படும்.

**பெறுகைத் தலைவர்,**
**த அஸோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட்,**
**இல.: 35, லேக் ஹவுஸ், டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு-10.**

LAKE HOUSE

**விபரங்களுக்கு பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் வழியாக தொடர்பு கொள்ளவும்.**
**தொலைபேசி: 011-2429422, 2429451, 2429629.**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

### திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2023 மார்ச் 08ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 85,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09123F099 | LKA18223I082 | LKA36424C087 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 45,000 | 20,000 | 20,000 | 85,000 |

| | | |
|---|---|---|
| ஏல விற்பனைத் திகதி | : | 2023 மார்ச் 08 |
| தீர்ப்பனவுத் திகதி | : | 2023 மார்ச் 10 |
| வழங்கப்படும் திகதி | : | 2023 மார்ச் 10 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : | 2023 மார்ச் 08, புதன்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்கள் |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***

**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

## Eastern University, Sri Lanka

### Invitation for Bids (IFB)

### National Competitive Bidding (NCB)

The Chairman, Department Procurement Committee on behalf of Eastern University, Sri Lanka will receive sealed bids from interested eligible and qualified bidders for the work mentioned below and receiving will be closed at **2.30 p.m. on 24.03.2023.** Bidding documents shall be obtained from the **Deputy Registrar, Capital Works and Planning** up to **23.03.2023** at **Capital Works and Planning Division, Eastern University, Sri Lanka.**

| No. | Name of Work | Required CIDA Grade & Specialty | Construction Cost Excluding VAT (LKR) | Contract Period (Days) | Non-refundable Fee. (LKR) | Bid Validity Period | Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Amount (LKR) | Validity from the closing date |
| 01 | **Rehabilitation and Extension of Pavilion at Eastern University, Sri Lanka (Phase I)** | C6, C5 and C4 (Buildings) | 42,369,821.48 | 120 | 12,000.00 | 91 Days up to (22.06. 2023) | 424,000.00 | 119 Days up to (20.07. 2023) |

1. Bidding will be conducted through National Competitive Bidding **single stage-single envelope** system. Since the total cost of estimate of this procurement is below Rs.50 Mn, regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No.04/2016(ii) dated 08.05.2019.
2. To be eligible for Contract award the successful bidder shall not have been blacklisted and shall have the required valid CIDA registration as mentioned above in the table.
3. Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka in terms of the Public Contracts Act No. 02 of 1987. The original certificate of registration (PCA 03) shall be submitted with the bid. The contract shall not be awarded to any bidder unless such bidder has submitted the PCA 03 certificate.
4. A completed set of bidding documents in duplicate in English Language may be purchased by interested bidders on submission of a written application by bidder himself or by bidder's representative to the Deputy Registrar / Capital Works and Planning and upon payment of a non-refundable fee as stated in the above table, from **9.00 a.m. to 2.30 p.m. up to 23.03.2023.** The payment shall be in favour of "Bursar, Eastern University, Sri Lanka" to the People's Bank Account No. 227100140000024 or via http://pay.esn.ac.lk/.
5. Bidders can also collect the Bidding Document by sending an email to dr_capitalworks@esn.ac.lk before the deadline to collect the Bidding Documents after paying the non-refundable tender fee.
6. Bid must be accompanied by a Bid Security obtained from a commercial bank operating in Sri Lanka approved by the Central Bank of Sri Lanka, as mentioned in the table in favour of the Vice Chancellor, Eastern University, Sri Lanka.
7. Bids marked **"Rehabilitation and Extension of Pavilion at Eastern University, Sri Lanka (Phase I)"** on the top left-hand corner, in two copies indicating Original and Duplicate, must be delivered to the address below at or **before 14.30 hours on 24.03.2023.** Late bids will be rejected.
8. Bids will be opened immediately at the Boardroom of the Eastern University, Sri Lanka soon after the closing time. Bidders or their authorized representatives are requested to be present at the opening of bids.
9. Pre-Bid meeting will be held on **17.03.2023 at 10.00 a.m.** at the Boardroom of the Eastern University, Sri Lanka.
10. Interested bidders may obtain further information from the Deputy Registrar / Capital Works and Planning of the Eastern University, Sri Lanka or Provincial Director, Department of Buildings on any working day during office hours from 09.00hrs to 15.00hrs. [Provincial Director: 026 2222630, Deputy Registrar 065 2240589, E-mail: dr_capitalworks@esn.ac.lk]
11. Any changes will be published on the University website : www.esn.ac.lk.
12. The decision of the Department Procurement Committee is final and conclusive.

**The Chairman**
**Department Procurement Committee**
**Vice Chancellor,**
**Eastern University, Sri Lanka**
**Vantharumoolai**
**Chenkalady**
03.03.2023

## பெறுகை அறிவித்தல்

### தேசிய கண் வைத்தியசாலை கொழும்பு – 10

### 2023/2024 ஆண்டிற்காக மின் பராமரிப்பு மற்றும் சேவை நடவடிக்கைகளிற்காக ஒப்பந்தக்காரரொருவரை நியமித்தல்

01. 2023/2024 ஆண்டிற்காக மின் பராமரிப்பு மற்றும் சேவை நடவடிக்கைகளிற்கான சேவை ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவதற்காக விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

**தேவையான தகைமைகள்:-**

i. ICTAD நிறுவனத்தில் EM04 வகுதியின் கீழ் மின் பராமரிப்பு மற்றும் சேவை ஒப்பந்தக் காரரொருவராகப் பதிவு செய்யப் பெற்றிருத்தல்
ii. ஏனைய வைத்தியசாலையொன்றில் அல்லது நிகரான நிறுவனமொன்றில் மின் பராமரிப்பு நடவடிக்கை தொடர்பாக 03 வருடங்களிற்குக் குறையாத ஒப்பந்தக்காரரொருவராக அனுபவம்
iii. தினசரி இருபத்திநான்கு (24) மணித்தியாலமும் வதிவிட சேவைகளை வழங்குவதற்கான கடப்பாடுகளைப் பெற்றிருத்தல்
iv. போக்குவரத்து வசதிகள் மற்றும் தேவையான உபகரணங்களைத் தம்வசம் வைத்திருத்தல்

02. வைத்தியசாலையினால் வழங்கப்படும் வடிவங்களில் மாத்திரம் இதற்கான கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. பெறுகைக்கான ஆவணங்கள் மூலப்பிரதி உட்பட இரண்டு (2) பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
04. 2023.03.04 முதல் 2023.03.25 வரை பிரதான அலுவலகத்தில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.00 இற்கு இடைப்பட்ட காலத்தில் இதற்கான கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
05. 2023.03.25 அன்று மு.ப. 10.00 இற்கு கேள்விகள் மூடப்பட்டு உடனடியாக தேசிய கண் வைத்தியசாலையின் பிரதான அலுவலகத்தில் அவை திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரரின் பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.
06. அனைத்துக் கேள்விகளையும் அல்லது அதன் பகுதி ஒன்றை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை வைத்தியசாலையின் பெறுகைக் குழுத் தலைவருக்கு உரித்தாகும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு.**
**தேசிய கண் வைத்தியசாலை,**
**கொழும்பு-10.**

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் மாசி மாதம் 19ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஷஃபான் பிறை 10



### குறள் தரும் சிந்தனை

இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம் அதனை
மிக்லூக்கின் ஊக்குமாம் கேடு

மனத்தில் தோன்றும் மாறுபாட்டை எதிர்கொண்டு நீக்கிக் கொண்டால் நன்மையும், அதற்கு மாறாக அதனை மிகுதியாக ஊக்கப்படுத்தி வளர்த்துக் கொண்டால் தீமையும் விளையும்.

# முட்டைக்கு வழங்கப்படும் சலுகை மக்களைச் சென்றடைய வேண்டும்

நாடு கடந்த வருடம் முகம்கொடுத்த பொருளாதார நெருக்கடியின் விளைவாக பல தொழில் துறைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. அவற்றில் கோழி வளர்ப்பு தொழில்துறை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அந்நிய செலாவணிப் பற்றாக்குறையை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்ற இப்பொருளாதார நெருக்கடியோடு சேர்த்து அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்து பொருட்களதும் விலைகள் பெரிதும் அதிகரித்தன.

அந்த வகையில் கோழித்தீவனத்தை உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருட்களது விலைகள் மாத்திரமல்லாமல் கோழித்தீவனத்தினதும் கோழி வளர்ப்புக்கு தேவையான மருந்துப்பொருட்கள் உள்ளிட்ட ஏனைய வசதிகளதும் விலைகளிலும் பெரிதும் அதிகரிப்பு ஏற்பட்டது.

இதன் விளைவாக, கோழி இறைச்சி மற்றும் முட்டைகளின் விலைகளை பெரிதும் அதிகரிப்பதற்கு இத்தொழில்துறையைச் சேர்ந்த சிலர் முயற்சி செய்தனர். ஆனால் மக்களைப் பாதிக்கும் வகையில் அவற்றின் விலைகளை அதிகரிப்பதற்கு அரசாங்கம் இடமளிக்கவில்லை. இதன் நிமித்தம் விலையை நிர்ணயித்து வர்த்தமானி அறிவித்தலும் விடுக்கப்பட்டது.

இந்நிலையில் கோழி வளர்ப்பை முன்னெடுப்பதில் பலவித அசௌகரியங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் இத்தொழில்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் முகம்கொடுக்கும் நிலைமை ஏற்பட்டது. இதன் விளைவாக பலர் இத்தொழில் துறையைக் கைவிட்டுள்ளனர். சிலர் வாழ்வாதார வருமானத்தின் நிமித்தம் இத்தொழில் துறையில் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில் நாட்டில் கோழி முட்டைக்கு தட்டுப்பாடு நிலவும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்நாட்டில் வழமையாகவே கோழி முட்டைக்கு அதிக கேள்வி நிலவுவது வழமையே. கோழி முட்டை நுகர்வும் பாவனையும் இந்நாட்டில் அதிகரித்துக் காணப்படுவதே அதற்கான காரணமாகும். ஏனெனில் அது இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதும் மனிதனுக்கு தேவையான புரதத் தேவையை நிறைவேற்றக் கூடியதுமான ஒன்றாக உள்ளது.

இந்நிலையில் முட்டையை நேரடியாக சமைத்து உண்பதோடல்லாமல் பேக்கரி திண்பண்டங்கள் உள்ளிட்ட பல்வேறு உணவுப் பொருட்களின் உற்பத்திக்கும் அவை பயன்படுத்தப்படுகின்றன. அத்தோடு உல்லாச பயணத்துறையிலும் முட்டை பயன்பாடு மிக அதிகமாகும்.

பொருளாதார நெருக்கடியின் விளைவாக உள்நாட்டு கோழி வளர்ப்புத் துறையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும் அதற்காக நிலவும் கேள்வியை நிறைவேற்றுவது மிகவும் அவசியமானது. இது தவிர்க்க முடியாத விடயமாகும். இத்தேவையை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் உல்லாசப் பயணத்துறை உள்ளிட்ட பல துறைகளிலும் தாக்கங்களும் பாதிப்புகளும் ஏற்படவே செய்யும்.

இந்நிலைமையைக் கருத்தில் கொண்டு நாட்டின் முட்டைத் தேவையை நிறைவேற்றி வைக்கும் வகையில் வெளிநாட்டில் இருந்து அதனை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது. அந்த வகையில் இருபது இலட்சம் முட்டைகள் வெளிநாட்டில் இருந்து தற்போது இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. என்றாலும் இந்த முட்டைகள் சந்தையில் விற்பனை விடப்பட மாட்டாது என்று அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

தற்போது இறக்குமதி செய்யப்பட்டுள்ள முட்டைகள் உணவகங்களுக்கும் பேக்கரிகளுக்கும் வழங்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. முப்பது ரூபாவுக்கு இம்முட்டைகள் பெற்றுக் கொடுக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

சந்தையில் முட்டை ஒன்றின் விலை ஐம்பது ரூபாவுக்கு மேல் காணப்படுகின்ற போது அதனை 30 ரூபாவுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது பெரிதும் வரவேற்கப்பட வேண்டிய விடயமாகும். அதேநேரம் அதன் பிரதிபலன்கள் மக்களை சென்றடையவும் தவறலாகாது. மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தியே இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் பேக்கரிகள் மற்றும் உணவகங்களுக்கு முப்பது ரூபாவுக்கு முட்டைகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற போதிலும் அதன் பிரதிபலன்கள் மக்களைச் சென்றடைய ஆரம்பித்திருப்பதாகத் தெரியவில்லை என்று மக்கள் தெரிவிக்கின்றனர். உணவகங்கள் மற்றும் பேக்கரி உற்பத்திகளின் விலைகள் தொடர்ந்தும் அதிகரித்த நிலையில்தான் காணப்படுகின்றன. இது தொடர்பில் மக்கள் தங்கள் ஆதங்கங்களையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

அதன் காரணத்தினால் பாவனையாளர் அதிகார சபையினரும் சம்பந்தப்பட்ட ஏனைய தரப்பினரும் இது தொடர்பில் உரிய கவனம் செலுத்த வேண்டும். முட்டைக்காக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள சலுகையின் பிரதிபலன்கள் மக்களை சென்றடைவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் மானிய விலையில் முட்டை பெற்றுக் கொடுக்கப்பட்டும் அதன் பிரதிபலன்கள் மக்களை சென்றடையாத நிலைமையே ஏற்படும்.

ஆகவே கோழி முட்டைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள சலுகைககள் மற்றும் நிவாரணங்களின் பிரதிபலன்கள் மக்களை சென்றடைய வேண்டும். பொருளாதார நெருக்கடியின் விளைவாக ஏற்பட்டுள்ள அழுத்தங்கள், தாக்கங்களில் இருந்து மக்கள் நிவாரணம் பெற்றுக் கொள்ள அது வழிவகுக்கும். மக்களின் எதிர்பார்ப்பும் அதுவேயாகும்.

editor.tkn@lakehouse.lk

# செவிப்புலன் குறைபாடு தோன்றாமல் மிகுந்த அவதானம் பேணுவோம்!

செவிப்புலன் குறைபாடு காரணமாக மக்களுக்கு ஏற்படும் சிரமங்களைத் தவிர்ப்பதற்காக உலக சுகாதார அமைப்பு ஒவ்வொரு வருடமும் மார்ச் 3 ஆம் திகதியை உலக செவிப்புலன் தினமாக அனுஷ்டித்து வருகின்றது.

காது கேட்பதன் முக்கியத்துவத்தையும், காதுகேளாத் தன்மையை எவ்வாறு தவிர்ப்பது என்றும் மக்களுக்கு உணர்த்துவதற்கான காலத்தின் தேவை தற்போது எழுந்துள்ளது. உலக சனத்தொகையில் 10 வீதமானோர் காது கேளாமைக்கு(சிறு குறைபாடுகள் உட்பட) ஆளாகியுள்ளனர்.

இன்று உலக செவிப்புலன் தினத்தை முன்னிட்டு மக்களை தெளிவுபடுத்தும் நோக்கில் உலகம் முழுவதிலும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

இதற்கமைய இன்று உலக செவிப்புலன் தினத்தை முன்னிட்டு இலங்கையிலும் தொண்டை, காது, மூக்கு (ENT) சம்பந்தப்பட்ட விழிப்புணர்வை மக்கள் மத்தியில் உருவாக்கும் நோக்கில் நிகழ்வுகள் நடைபெறுகின்றன.




செவிப்புலன் குறைபாடு காரணமாக தகவல் தொடர்பு சிக்கல்கள் ஏற்படுகின்றன. தொடர்ச்சியான காதுகேளாமை காரணமாக நினைவாற்றல் இழக்க வழியேற்படுகின்றது. அத்துடன் இன்று மக்கள் செவி அரிப்புக்காக காதுகளில் பல்வேறு பொருட்களை விடுகின்றனர். அவை காதுக்கு சேதத்தை ஏற்படுத்தும் என்று ENT அறுவைசிகிச்சை வைத்தியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும், அதிக சத்தத்திலிருந்து காதுகளை பாதுகாப்பது முக்கியம் என்று மருத்துவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். ஒரு குழந்தை பிறந்ததிலிருந்து அக்குழந்தையின் செவிப்புலனில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். அத்துடன் தொழிற்சாலை போன்ற அதிக இரைச்சல் கூடிய இடங்களில் ஒருவர் கடமையில் இருந்தால் காதுகளை பாதுகாக்க வேண்டும்.

காதுக்குள் தண்ணீர் போகாதவாறு பாதுகாக்க வேண்டும். ஏதேனும் ஒரு பொருள் காதில் சிக்கிக் கொண்டால் உடனே உரிய மருத்துவர் ஒருவரை நாடி அதனை அகற்றுவது மேலானது என்று இங்கு மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர்.

# மாத்தளை வடிவேலனின் நூல் வெளியீட்டு விழா

மாத்தளை வடிவேலனின் நூல் வெளியீட்டு விழா இன்று மாத்தளையில் (03.03.2023) நடைபெறுகின்றது. மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிமக பஞ்சஇரத பவனியை முன்னிட்டு 'மலையகம் 200 இலங்கை இந்திய வம்சாவளி தமிழர் வரலாற்றில் முதல்சாசனம் மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்' என்னும் நூல் அம்பாளின் சந்நிதியில் படைத்து அர்ச்சித்து இன்று 03.03.2023 வெளியிடப்படுகிறது.




ஆலய பரிபாலனசபைத் தலைவர் சேதுராமன் சர்வானந்தா முன்னிலையில் நடைபெறும் இந்நிகழ்வில் பேராதனை பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இரா. ரமேஷ் சிறப்பு அதிதியாக கலந்து கொள்கிறார்.

அறங்காவலர் சபையின் உறுப்பினர்கள், இந்து சமய நிறுவனங்களின் பிரதிநிதிகள், அறநெறி பாடசாலை அதிபர்கள், 'சுபீட்சம்' கல்வி சமூக அபிவிருத்தி அமைப்பின் தலைவர், மகாத்மா காந்தி சபைத் தலைவர் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக் கொள்கின்றனர்.

மலையகத் தமிழரின் பூர்வீக குடியேற்ற வரலாற்றை எடுத்தியம்பும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் மொழிகளிலான கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

வீரகேசரி முகாமைத்துவப் பணிப்பாளர் குமார் நடேசனின் வாழ்த்துரையுடனும், பதிப்பாளரும் வெளியீட்டாளருமான எச். எச். விக்கிரமசிங்க அவர்களின் அணிந்துரையுடன் இந்நூல் வெளிவருகிறது.




# முழுமையான திறன் வகுப்பறைகள் கொண்ட யாழ். சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயம்

யாழ். சித்தங்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் கடந்த புதன் கிழமை மு.ப. 09 மணியளவில் இரண்டு நவீன திறன் வகுப்பறைகள் திறந்து வைக்கப்பட்டன. இவை இப்பாடசாலையில் அமைக்கப்பட்ட ஐந்தாவது ஆறாவது திறன்வகுப்பறைகள் ஆகும். பாடசாலை அதிபர் பா. பாலசுப்பிரமணியம் தலைமையில் இத்திறப்பு விழா நடைபெற்றது.

வட மாகாண கல்வித் திணைக்களத்தின் ஊடாக Right To Read நிறுவனத்தால் வழங்கப்பட்ட ஐந்தாவது திறன் வகுப்பறையினை சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட சங்கானை கோட்டக்கல்விப் பணிப்பாளர் சூ.நோபேட் உதய குமார் திறந்து வைத்தார.

இப்பாடசாலையின் பழைய மாணவர்களான பிரம்மஸ்ரீ கணநாத சர்மா_ஸ்ரீமதி ஷாருஹா (லண்டன்) தம்பதியினரின் முழுமையான நிதிப்பங்களிப்பில் அமைக்கப்பட்ட ஆறாவது நவீன திறன் வகுப்பறையானது ((Smart Panel)) பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரனால் திறந்து வைக்கப்பட்டது.



ஆறாவது திறன் வகுப்பறையின் நினைவுப் பலகையை கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட வித்தியாலயத்தின் பழைய மாணவரும் லண்டன் கற்பக விநாயகர் ஆலயத்தின் பிரதமகுருவுமாகிய சிவஸ்ரீ ச.லம்போதரகுமாரா சாமி குருக்கள் அதனை அமைத்துக் கொடுத்தவர்களின் சார்பில் திரைநீக்கம் செய்து வைத்து வைபவ ரீதியாக இயக்கியும் வைத்தார். அத்துடன் இத்திறன் வகுப்பறைக்குரிய உள்ளக வசதிகளையும் அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்.

எச்.எச்.விக்ரமசிங்க...

இங்கு கருத்துத் தெரிவித்த பிரதம விருந்தினர், எமது வலயத்தில் சகல வகுப்புக்களும் திறன் வகுப்பறைகளாக அமையப் பெற்ற முதலாவது திறன் பாடசாலையாக இப்பாடசாலை திகழ்கின்றது எனக் கூறியதோடு இப்பாடசாலைச் சமூகம் கல்வி உலகிற்கு ஒரு எடுத்துக் காட்டு எனவும் கூறினார்.

வித்தியாலய அதிபர் தனது தலைமையுரையில், யாழ். மாவட்டத்தில் முழுமையான முதலாவது திறன் பாடசாலையாக இப்பாடசாலை மாற வேண்டும் என்ற நீண்ட நாள் கனவு இன்று நிறைவேறியுள்ளதாகவும் இச்செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கிய பழைய மாணவர்கள் உள்ளிட்ட பாடசாலைச் சமூகத்திற்கும் கல்வி அதிகாரிகளுக்கும் நன்றி கூறுவதாகவும் குறிப்பிட்டார்.

உலகில் ஏற்பட்டுள்ள நவீன மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் மாணவர்களுக்குத் தேவையான நவீன தொழிநுட்பத்துடன் கூடிய கல்வியை மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்றும் அப்பொழுதுதான் எதிர்கால உலகிற்கு ஏற்ற மாணவர்களை உருவாக்க முடியும் எனவும் அவர் கூறினார்.





இந்நிகழ்வில் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், அயல் பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பணம் அச்சிடல் தொடர்பான கட்டுக்கதைகள்

(நேற்றைய தொடர்)

2020இல் ஏற்பட்ட கொவிட்19 நோய்ப்பரவல் மற்றும் அதன் விளைவாக மேற்கொள்ளப்பட்ட கட்டுப்படுத்தல் வழிமுறைகள் என்பன தாழ்ந்தளவிலான பணவீக்கச் சூழலொன்றில் 2020இல் பொருளாதாரத்தின் மீட்சிக்கு ஆதரவளிக்கும் பொருட்டு மிகவும் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாடொன்றினை மத்திய வங்கி நடைமுறைப்படுத்த வேண்டியிருந்தது. இவ்வுலகளாவிய நோய்த்தொற்றுக் காலப் பகுதியில், குறிப்பாக அரசாங்கத்திற்கான புதிய வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களின் கடுமையான பற்றாக்குறையொன்று காணப்பட்டமையினால், நாட்டின் வெளிநாட்டுச் செலாவணியைப் பயன்படுத்தி வெளிநாட்டுச் செலாவணியுடன் தொடர்புடைய அநேகமாக சகல கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

இதன் விளைவாக, மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்ததுடன் 2021 ஓகஸ்ட் தொடக்கம் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் தொடர்ந்தும் எதிர்மறையான நிலைமையினைக் கொண்டிருந்தன. அதேவேளை, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியைத் தேடிக்கொள்வது கடினமாக இருந்தமையினால், அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில், அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்யும் பொருட்டு மத்திய வங்கி அதன் வரையறுக்கப்பட்ட திரவ ஒதுக்குகளைப் பயன்படுத்தி வெளிநாட்டுச் செலாவணியைச் சந்தைக்கு வழங்கியது.

நாட்டிற்கான தரமிடல் குறைக்கப்பட்டமைக்கு மத்தியில் அரசாங்கத்திற்கான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களின் பற்றாக்குறையானது மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் வீழ்ச்சியை மேலும் மோசமடையச் செய்ததுடன் அரசாங்கத்தின் முதிர்ச்சியடைகின்ற படுகடன் கடப்பாடுகளைப் பூரணப்படுத்துவதற்கு மத்திய வங்கி தொடர்ந்தும் வெளிநாட்டுச் செலாவணியை வழங்கியது. அதேவேளை, உலகளாவிய நோய்த்தொற்றின் விளைவுகளைத் தணிப்பதற்கான அதிகரித்த செலவினங்களுக்கு மத்தியில், 2019இன் பிற்பகுதியிலும் 2020இன் முற்பகுதியிலும் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட வரிக் குறைப்புகளுடன் அரசிறை சடுதியாக வீழ்ச்சியடைந்தது.

கிரமமான கொடுப்பனவுகளைக் குறிப்பாக, வெளிநாட்டுப் படுகடனின் நிதியிடல் உள்ளடங்கலாக படுகடன் பணிக்கொடுப்பனவுக் கடப்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு, வெளிநாட்டுச் செலாவணியைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான இலங்கை ரூபாவும் அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில், மத்திய வங்கியினால் திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்வதன் வாயிலாக மத்திய வங்கியிலிருந்து அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டதுடன் அதன்மூலம் பொருளாதாரத்திற்குப் புதிய பணம் வழங்கப்பட்டது. மத்திய வங்கியினால் திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் உருவாக்கப்பட்ட அப்புதிய பணம் அரசாங்கத்தின் படுகடன் கடப்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டு அரசாங்கத்தினால் வெளிநாட்டுச் செலாவணியைக் கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டதுடன் அதன்மூலம் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் குறைக்கப்பட்டு, ஒதுக்குப் பணத்தின் தரத்தினைப் பாதித்தது.

இதற்கமைய, மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் குறைவடைதலினைத் தொடர்ந்து மத்திய வங்கியின் உள்நாட்டு சொத்துக்களின் விரிவாக்கத்தின் காரணமாக ஒதுக்குப் பணத்தின் மீதான தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டது. ஆதலால், எந்தவொரு பகுப்பாய்வும் பொருளாதாரத்திற்குப் புதிய பணத்தை வழங்குவதிலுள்ள ஒரு பக்கத்தினை மாத்திரம் பகுப்பாய்வு செய்வதனைப் பார்க்க பணம் அச்சிடல் பற்றிய கருத்தொன்றினைப் பெறுவதற்கு மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட மொத்தப் பணத்தைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

இலங்கை தற்போது தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் எதிர்மறையான நிலைமையினைக் கொண்டுள்ள தீவிரமானதொரு சூழ்நிலையில் உள்ளதுடன் நாடுகள் எதிர்மறையான தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களைக் கொண்டிருப்பதானது மிகவும் அசாதாரணமானதாகக் காணப்படுவதுடன் இது பண இருப்பானது வெளிநாட்டுச் சொத்துக்களினால் பிணையிடப்படாதுள்ள வேளையில் உள்நாட்டுச் சொத்துக்களினால் முழுமையாக பிணையிடப்பட்டுள்ளமையைக் குறிக்கின்றது.

(நாளை மிகுதி)



ஜனக எதிரிசிங்ஹ
பணம் மற்றும் வங்கித்தொழில் பிரிவின் தலைவர்/சிரேஷ்ட பொருளியலாளர்
பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

# ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# இறையருள் நிறைந்த ரமழான்

பாவத்தின் சிறகுகள் உடைக்கப்பட்டு, நன்மையின் சிறகுகள் விரிக்கப்பட்டு, மனிதனை அநியாயத்தின் பக்கமும், அழிச்சாட்டியத்தின் பக்கமும் அழைத்துச் செல்கின்ற சைத்தான்கள் எல்லாம் விலங்கிலிடப்பட்டு, ஆன்மீக நறுமணம் வீசச் செய்யும் புனித ரமழான் இன்னும் சொற்ப நாட்களில் எம்மை வந்து சேர இருக்கின்றது இன்ஷா அல்லாஹ்.

முஸ்லிம் உலகில் ஒரு மாபெரும் ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தும் இப்புனித மாதம் எங்களால் எப்படி பார்க்கப்படுகின்றது? இதன் மாண்புகளும் கீர்த்தியும், இது சுமந்து வருகின்ற அருட்பாக்கியங்களும் எங்களால் முறையாக புரியப்பட்டிருக்கின்றதா? அல்லது வழமை போன்று எல்லோருடனும் சேர்ந்து ரமழான் மாதத்தினுள் பிரவேசித்து 29 அல்லது 30 நாட்களை கழித்து விட்டு வெளியேறப் போகின்றோமா? என்பது போன்ற கேள்விகள் எங்களை நோக்கி கேட்பது இன்றியமையாத ஒன்றாக பார்க்கப்படுகிறது. காரணம், வாழ்க்கையில் பல ரமழான்களை சந்தித்து பல நூறு நோன்புகளை நோற்றிருந்தாலும் ரமழானின் ஊடாக நாம் அடைய வேண்டிய அடைவுகளையும் மாற்றங்களையும் பெற்றுக் கொண்டோமா என்ற நியாயமான கேள்விக்கு திருப்திகரமான பதிலை யாரிடமிருந்தும் எதிர்பார்க்க முடியாது என்பதுதான் உண்மை.

இப்புனித ரமழான் மாதத்தின் வருகையை எதிர்பார்த்து ஆவலோடு காத்திருப்பதும், அது தன்னை அடைந்து கொள்ள வேண்டும் என்ற வேட்கையை வெளிப்படுத்துவதும் நபி வழியாகும். ரமழான் மாதம் வருவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பிருந்தே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'யா அல்லாஹ் எங்களுக்கு ரஜப், ஷைபான் மாதங்களில் பரக்கத் செய்வாயாக, ரமழான் மாதத்தை அடைந்து கொள்ளும் பாக்கியத்தை தந்தருள்வாயாக என்று பிரார்த்தனை செய்வார்கள்'.

(ஆதாரம் அல்பைஹகி)

மேலும் ரமழான் மாதத்திற்கு முன்னைய மாதமாகிய ஷஃபான் மாதத்தின் தலைப்பிறையை நபி (ஸல்) அவர்கள் மிக உன்னிப்பாக தேடுவார்கள். ரமழான் மாதத்தின் தலைப்பிறையை முறையாக அடைந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே அன்னார் அவ்வாறு தேடலானார்கள்.பதினோரு மாத காலமாகப் பிரிந்திருந்த இடைவெளியின் பின்பு தரிசனம் தரும் நெஞ்சம் கவர்ந்த கௌரவமான ஒரு அதிதியின் விஜயம் போன்றுதான் அதன் வருகையை நபி (ஸல்) அவர்கள் எதிர்பார்த்து காத்திருந்திருக்கிறார்கள்.

இத்தீராத வேட்க்கையின் பின்புலத்தில் மறைந்திருக்கும் தாற்பரியமும், தத்துவமும் என்ன என்பதனை ரமழானின் சிறப்புகளை அறிந்து கொண்ட ஒவ்வொரு மனிதனும் எளிதாகப் புரிந்து கொள்ளலாம்.

ரமழான் புனித அல் குர்ஆன் அருளப்பட்ட மாதம், பாவங்கள் மன்னிக்கப்படுகின்ற மாதம், ஷைத்தான்களுக்கு விலங்கிடப்படுகின்ற மாதம், சுவனத்தின் வாயில்கள் திறக்கப்படுகின்ற மாதம், நரக விடுதலையை பெற்றுத் தருகின்ற மாதம், ஆயிரம் மாதங்களை விட சிறந்த அருள்மிகு லைலத்துல் கத்ரை தன்னகத்தே கொண்ட மாதம், துஆக்கள் அங்கீகரிக்கப்படுகின்ற மாதம், முஸ்லிம் சமூகத்திற்கு பல்வேறு வகையான வெற்றிகளை கொண்டு வந்த மாதம், குறிப்பாக அற்ப ஆசைகளாலும் கீழ்த்தரமான எண்ணங்களாலும் பொய்யான மாயைகளாலும் நிறைந்து போயிருக்கின்ற மனித உள்ளங்களுக்கு நோன்பு என்னும் இறை கடிவாளமிட்டு புத்துயிர் பெறச் செய்யும் உன்னதமான பயிற்சிக்காலமே ரமழான் ஆகும்.

இமாம் ஹசனுல் பிஸ்றி (ரஹ்) அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்: 'மூர்க்கத்தனமான மிருகம் கடிவாளம் இன்றி விடப்படுவதை விட மனித ஆசைகள் கடிவாளமின்றி விடப்படுவது ஆபத்தானது. எனவே, அடங்காத மிருகத்தையும் விட மனித ஆசைகளுக்கே கடிவாளம் மிகவும் அவசியமாகிறது' (ஆதாரம் தப்சீறு ஹசநுல் பிஸ்றி).

மோசமான பண்புகளாலும் அசுத்தமான எண்ணங்களாலும் ஆளப்படுகின்ற மனிதன், நோன்பு என்னும் தெய்வீகக் கடிவாளமிடப்பட்டு நெறிப்படுத்தப்படும் போது ஆத்மார்த்தமான அமைதியையும் இன்பத்தையும் அடைந்து கொள்கிறான். அவனது வாழ்வில் ஆன்மீக மலர்ச்சியும், தெய்வீக ஆசிர்வாதங்களும் திண்ணமாகி விடுகின்றன. மாற்றமாக அவன் கடிவாளம் இன்றி விடப்பட்டால் இக்கொடிய பண்புகளும் எண்ணங்களுமே அவனது வாழ்வின் மொத்த அழிவிற்கும் அடித்தளமாகிவிடும். எனவே இவ்வுயர்ந்த பாக்கியங்களோடும், வரப்பிரசாதங்களோடும் எம்மை நோக்கி வருகின்ற ரமழானை நாம் சாதாரணமாக எதிர்கொள்ள முடியாது. அதற்கான முழுமையான ஒரு திட்டமிடலும், தயார்நிலையும் இன்றியமையாத ஒரு அம்சமாக பார்க்கப்படுகின்றது. அதை வெளிப்படுத்தும் முகமாகவே நாயகம் (ஸல்) அவர்கள் இரண்டு மாதங்களுக்கு முன்பே அதற்காக தன்னை தயார் செய்து கொண்டார்கள். அதனுள் நுழைந்து 30 நாட்களை கழித்து விட்டு வெளியில் வருகின்ற ஒரு மனிதன் மாற்றங்களுக்கு உட்பட்டிருக்க வேண்டும். புதிய நடத்தைகளையும் புதிய மனப்பாங்குகளையும் வளர்த்துக் கொண்டவனாக இருக்க வேண்டும்.

இவ்வாறான மாற்றங்களை சந்திப்பதற்கான எல்லா காரணிகளையும் கொண்டதாக ரமழான் அமைந்திருக்கின்றது. இதனை நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள், 'ரமழான் மாதம் வந்துவிட்டால் சுவர்க்கத்தின் கதவுகள் திறக்கப்படும், அதில் எந்த ஒரு வாசலும் மூடப்பட மாட்டாது. நரகத்தின் வாசல்கள் மூடப்படும். அதில் எந்த ஒரு வாசலும் திறக்கப்பட மாட்டாது. சைத்தான்களும் கட்டுக்கடங்காத ஜின்களும் விலங்கிடப்படுகின்றன. மேலும் நன்மை செய்ய நாடுபவனே முன்னோக்கி வா, தீமை செய்ய நாடுபவனே தூரமாகி விடுவாயாக என்பதாக ஒரு அழைப்பாளர் அழைப்பு விடுப்பார். ஒவ்வொரு இரவிலும் அல்லாஹ் நரகிலிருந்து விடுதலை வழங்கிக் கொண்டே இருப்பான். (ஆதாரம் திர்மிதி)

இவ்வாறு ரமழான் மாற்றத்திற்கான காரணிகளைக் கொண்டிருந்தாலும் வெறுமனே பசித்தும் தாகித்தும் இருந்து, இன்னும் சில அமல்களையும் செய்து விடுவதனால் மாத்திரம் மாற்றங்களை அடைந்து கொள்ள முடியாது. மாறாக ரமழானின் ஊடாக நாம் அடைய விரும்பும் மாற்றங்களை இலக்குகளாக கொண்ட செயல்திட்டம் ஒன்றினை வகுத்து, ரமழான் காலங்களில் அதனை நடைமுறைப்படுத்துவதன் ஊடாகவே நாம் விரும்புகின்ற மாற்றங்களை அடைந்து கொள்ளலாம்.

ஆகவே ரமழானை மாற்றத்திற்கான சந்தர்ப்பமாகப் பயன்படுத்துவதற்குரிய வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்டு இலக்குகளுடன் கூடிய செயல் திட்டத்தின் ஊடாக நாம் விரும்புகின்ற மாற்றங்களையும், ரமழான் சுமந்து வருகின்ற அனைத்து வகையான ஈருலக நன்மைகளையும் பெற்றுக் கொள்வதற்கு எம் அனைவருக்கும் அல்லாஹ் அருள்புரியட்டும்.

கலாநிதி அல் ஹாபிழ்
எம்.ஐ.எம். சித்தீக்...
(அல் – ஈன்ஆமி) B.A.Hons,
(Al Azhar university, Egypt) M.A.& PhD
(International Islamic university, Malaysia)

# அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவோம்!

ஒரு தடவை நபி(ஸல்) அவர்கள், 'ஒரு மனிதர் காட்டு வழியாக நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது வான்வழியே குரலொன்று கேட்டது. 'மேகங்களே... குறிப்பிட்ட நபரின் வயல்வெளிக்கு நீர் பாய்ச்சுங்கள்' என்பதே அக்குரலாகும். உடனே மேகங்கள் குறிப்பிட்ட திசை நோக்கி நகர்ந்து குறித்த பகுதியில் மழை பொழிந்தன. அம்மழை நீர் வாய்க்காலாக வடிவமெடுத்து சலசலவென்று பாய்ந்தோடியது.

அவ்வதிசயத்தைக் கண்ட அம் மனிதர் திகைத்து நின்றார். வாய்க்கால் வழியே சென்ற நீர் முழுவதும் குறிப்பிட்ட மனிதரின் தோட்டத்தைச் சென்றடைவதையும் குறித்த தோட்டக்காரர் அந்நீர் முழுவதையும் தனது தோப்புக்குள் பாய்ச்சிக் கொண்டிருப்பதையும் அந்நபர் அவதானித்தார். இந்நிலையில் தோட்டக்காரரை அணுகி அவரது பெயரைக் கேட்டார் அந்நபர். அப்போது தோட்டக்காரர் பெயரைக் கூறிய போது சற்று முன்னர் வான்வழியே கேட்கப்பட்ட பெயராகவே இருந்ததை அவர் அறிந்து கொண்டார்.

அப்போது தோட்டக்காரர், 'எனது பெயரைக் கேட்டதன் காரணமென்ன? என அந்நபரிடம் வினவ, அந்நபர் 'மேகங்கள் திரண்டு வந்து மழையாகப் பொழிந்த சங்கதியைச் சொல்லிவிட்டு தோட்டக்காரரே... நீர் விசேடமாக ஏதாவது நற்செயல் புரிகிறீரா? எனக் கேட்டதோடு 'அல்லாஹ்வே உமது தோட்டத்திற்கு நீர் பாய்ச்சுகிறானே...' என்றார்.

அதற்கு தோட்டக்காரர், 'இத்தோட்டத்திலிருந்து எனக்கு கிடைக்கப்பெறுகின்ற வருமானத்தை மூன்று பகுதிகளாக பிரிக்கிறேன். ஒரு பகுதியை அல்லாஹ்வின் பாதையில் செலவிடுகிறேன். இன்னொரு பகுதியை குடும்பத்தாருக்காகவும் அடுத்த பகுதியை இத்தோட்டத்தின் பராமரிப்புக்காகவும் செலவிடுகிறேன்' என்று குறிப்பிட்டதாகக் கூறியுள்ளார்கள்.

(ஆதாரம்: முஸ்லிம்)

அல்லாஹ் எமக்கு அளித்துள்ள செல்வத்துக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை இச்சம்பவம் எடுத்தியம்புகிறது. அல்லாஹ்வின் புகழ்பாடி அவனுக்கு நாவால் நன்றி செலுத்தினாலும் அவன் வழங்கிய செல்வத்தை அவனுடைய விருப்பத்தின்படி செலவிடுவதும் ஏனைய மனிதர்களுக்கு வழங்குவதும் தான் உண்மையானதும் சரியானதுமான நன்றியுணர்வாகும்.

மேலும் 'அல்லாஹ் ஒரு ஊரை எடுத்துக்காட்டாக கூறுகிறான். அவ்வூர் மக்கள் அமைதியுடனும் நிம்மதியாகவும் வாழ்ந்துவந்தனர். அவர்களுக்கு எல்லாத்திசைகளிலிருந்தும் வாழ்க்கை வசதிகள் தாராளமாக கிடைத்துக்கொண்டிருந்தன. இந்நிலையில் அவர்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்தலாயினர். அப்போது அல்லாஹ் தீவினைகளின் விளைவை சுவைக்கச் செய்தான். பசி, அச்சம் எனும் துன்பங்கள் அவர்களைச் சூழ்ந்துகொண்டன. அவர்களிடம், அவர்களது சமுதாயத்திலிருந்து தூதுவர் ஒருவர் வந்தார். அவரைப் பொய்யரென அவரது சமுதாயத்தினர் கூறினர். அவர்கள் இறுதியில் அக்கிரமம் செய்பவர்களாக ஆனபோது வேதனை அவர்களை பிடித்துக்கொண்டது.

எனவே மக்களே! அல்லாஹ் உங்களுக்கு அளித்தவற்றில் தூய்மையான அனுமதிக்கப்பட்ட உணவுகளைப் புசியுங்கள். மேலும் அவனுடைய அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துங்கள். நீங்கள் உண்மையில் அல்லாஹ்வுக்கே அடிபணிந்து வாழ்பவர்களாக இருந்தால்... (அல் குர்ஆன் 16:112 - 114 )

மற்றொரு வசனத்தில், 'மேலும் எத்தனையோ ஊர்களை நாம் அழித்துள்ளோம். அந்த ஊர் மக்கள் தங்களுடைய அதிகப்படியான வாழ்க்கை வசதிகள் குறித்து கர்வம் கொண்டிருந்தார்கள் (இதோ பார்த்துக்கொள்ளுங்கள்) இவை அவர்கள் குடியிருந்த இல்லங்கள். இவற்றில் அவர்களுக்கு பின்னர் யாருமே வாரிசாகவில்லை. ஒரு சிலரைத் தவிர இறுதியில் நாமே வாரிசுகளாகிவிட்டோம். (அல் குர்ஆன் 28:58).

எனவே அல்லாஹ் எமக்கு புரிந்துள்ள அருள்களுக்காகவும் அளித்துள்ள வசதி வாய்ப்புக்களுக்காகவும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவோம்.

தொகுப்பு: ஜத்து ஹன்ழலா...

# கப்ருடைய வேதனையை விட்டும் பாதுகாவல் தேடிக் கொள்ளுங்கள்

நபி (ஸல்) அவர்கள் ஒரு தடவை மதீனாவாசி ஒருவருடைய ஜனாஸாவைப் பின்தொடர்ந்து சென்றார்கள். ஜனாஸா அடக்கம் செய்யப்பட்டதும் நபியவர்கள் கப்ருக்கருகில் அமர்ந்தார்கள். நாங்களும் அவர்களைச் சுற்றி அமர்ந்தோம். அப்போது நபி (ஸல்) அவர்கள் சிறிய கம்பு ஒன்றினால் நிலத்தைக் கீறிக் கொண்டிருந்தார்கள். திடீரென தன் தலையை உயர்த்தி, 'கப்ருடைய வேதனையை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடிக் கொள்ளுங்கள்' என்று மூன்று தடவை கூறினார்கள். பின்பு மரணத் தருவாயிலுள்ள ஒரு இறை நம்பிக்கையாளனுடைய நிலை பற்றிக் கூறினார்கள்.

'மூஃமினான ஒரு அடியான் உலகத் தொடர்புகளைத் துண்டித்து விட்டு மறுமையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் போது சூரிய ஒளிக்கு ஒப்பான பிரகாசமான முகத்துடன் வானிலிருந்து சில வானவர்கள் அவனிடம் வருவார்கள். அவர்கள் தங்களுடன் சுவர்க்கத்துத் துணிகளையும் சுவர்க்கத்தின் நறுமணங்களையும் கொண்டு வந்து அவனுடைய பார்வைக்கு எட்டும் தூரத்தில் இருப்பார்கள்.

அப்போது உயிரைக் கைப்பற்றும் வானவர் வந்து அவனருகில் அமருவார். அவனை நோக்கி, 'நல்ல ஆத்மாவே... நீ இந்த உடலிலிருந்து வெளியேறி அல்லாஹ்வின் மன்னிப்பை நோக்கியும் அவனுடைய பொருத்தத்தை நோக்கியும் செல் என்று கூறுவார். தோல் பையொன்றிலிருந்து நீர் வழிந்துவிடுவது போன்று அந்த ஆத்மா வெளியேறிவிடும். அவர் அதனை எடுத்துச் செல்வார்.

அதனை அவர் எடுத்ததும் அருகிலுள்ள மலக்குகள் உடனே சுவர்க்கத்துத் துணியிலும் நறுமணத்திலும் அதனை வைத்துவிடுவார்கள். அதிலிருந்து கஸ்தூரி வாடை வீசும். அம் மலக்குகள் அதனைச் சுமந்தவர்களாக முதலாவது வானத்தை நோக்கிச் சென்று வானத்தைத் திறந்து விடுமாறு அதிலுள்ள மலக்குகளிடம் கூறுவார்கள்.

அம்மலக்குகள் வானத்தைத் திறந்து அவ்வாத்மாவை வரவேற்பார்கள். ஒவ்வொரு வானத்திலும் இவ்விதமே நடைபெறும். ஏழாவது வானத்தைக் கடந்து சென்றதும் அல்லாஹ் ஆத்மாவைச் சுமந்து சென்ற மலக்குகளை நோக்கி, 'எனது இந்த அடியானுடைய செயல்களை இல்லியூனிலே (இறை நம்பிக்கையாளர்களின் உயிர்கள் இருக்குமிடம்) பதிவு செய்துவிட்டு பூமியிலுள்ள அவனது உடலில் அவனுடைய ஆத்மாவைச் சேர்த்து விடுங்கள்' என்று கூறுவான்.

இதேவேளை, 'இறைமறுப்பாளன் இந்த உலகத்தை விட்டுப் பிரிந்து மறுமையை நோக்கியவனாக இருக்கும் போது கருப்பு முகங்களைக் கொண்ட வானவர்கள் வானத்திலிருந்து அவனிடம் வருவார்கள். (உயிரைக் கொண்டு செல்வதற்காக) அவர்களுடன் துணிகள் இருக்கும். அவனது பார்வை எட்டும் தூரம் வரை வானவர்கள் அமர்ந்திருப்பார்கள்.

பின்பு உயிரைக் கைப்பற்றும் வானவர் வந்து அவனுடைய தலைக்கு அருகில் அமருவார். கெட்ட ஆன்மாவே! அல்லாஹ்வின் கோபத்துடனும் அதிருப்தியுடனும் நீ வெளியேறு! என்று கூறுவார். அப்போது அவன் உடலிலிருந்து உயிர் பிரித்தெடுக்கப்படும். ஈரமான கம்பளியில் உள்ள ரோமத்தை பிடுங்குபவரைப் போல் வானவர் உயிரை வாங்குவார். உயிரை வாங்கிய பிறகு கண் சிமிட்டும் நேரம் கூட தன் கையில் வைத்திருக்காமல் உடனே அந்தத் துணிகளில் உயிரைச் சேர்த்து விடுவார்.

பூமியில் இறந்து அழுகிப்போன உடலிலிருந்து வெளிவரும் துர்நாற்றத்தைப் போன்ற கெட்ட வாடை அதிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கும். இந்த (கெட்ட) உயிருடன் (வானில்) வானவர்கள் ஏறிச் செல்வார்கள். அந்த உயிருடன் வானவர் கூட்டத்தை அவர்கள் கடந்து செல்லும் போது இந்த கெட்ட ஆன்மா யாருடையது? என்று வானவர்கள் கேட்பார்கள். உலகில் அவன் அழைக்கப்பட்டுக் கொண்டிருந்த கெட்ட பெயரைக் கூறி இன்னாருடைய மகன் இன்னார் தான் என்று அவர்கள் கூறுவார்கள்.

அவன் இறுதி வானத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அவனுக்காக கதவைத் திறக்குமாறு வானவர்கள் கேட்பர். ஆனால் கதவு திறக்கப்படாது என்று கூறிய நபி(ஸல்) அவர்கள், அல் குர்ஆனின் இவ்வசனத்தை ஓதிக் காட்டினார்கள். 'நமது வசனங்களைப் பொய்யெனக் கருதி அதைப் புறக்கணிப்போருக்கு வானத்தின் வாசல்கள் திறக்கப்பட மாட்டாது. ஊசித்துவாரத்தில் ஒட்டகம் நுழையும் வரை அவர்கள் சொர்க்கத்தில் நுழைய மாட்டார்கள். இவ்வாறே குற்றவாளிகளைத் தண்டிப்போம்'. (7: 40) கடைசியில் பூமியில் உள்ள சிஜ்ஜீன் என்ற ஏட்டில் இவனது கணக்கை பதிவு செய்யுங்கள் என்று சங்கையும் மகத்துவமும் மிக்க அல்லாஹ் கூறுவான் என்றும் அன்னார் குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம் அஹ்மத்)

ஆகவே கப்ருடைய வேதனையை விட்டும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடிக்கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிடத் தறவக் கூடாது.

அபூமதீஹா...

# 'சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி' என்ற தஸ்பீஹின் சிறப்புகள்

'சுப்ஹானல்லாஹ் வபி ஹம்திஹி' என்ற தஸ்பீஹ்வின் கருத்து 'அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து துதிக்கிறேன்' என்பதாகும். அதனை யார் ஒரு நாளில் நூறு முறை மொழிகிறாரோ அவரது தவறுகள் அழிக்கப்பட்டு விடுகின்றன. அவை கடலின் நுரை போன்று (மிகுதியாக) இருந்தாலும் சரியே! என இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா(ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். (ஆதாரம் புஹாரி)

அதேநேரம் அபூதர் (ரழி) அவர்கள், ஒரு தடவை நபி (ஸல்) அவர்களிடம், '(இறைவனைத் துதிக்கும்) சொற்களில் மிகவும் சிறந்தது எது?' என்று கேட்கப்பட்ட போது அதற்கு நபிகளார், 'அல்லாஹ், தன் வானவர்களுக்காக அல்லது தன் அடியார்களுக்காக, 'சுப்ஹானல்லாஹி வபி ஹம்திஹி' (அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து அவன் தூயவன் எனத் துதிக்கிறேன்) என்பதையே தேர்ந்தெடுத்துள்ளான்' என்று பதிலளித்தார்கள்.

(ஆதாரம் முஸ்லிம்)

மற்றொரு சந்தர்ப்பத்தில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், '(என்னிடம்) அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான வார்த்தையை நான் உமக்குத் தெரிவிக்கட்டுமா?' என்று கேட்டார்கள். நான், 'அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான (அந்த) வார்த்தையை எனக்குத் தெரிவியுங்கள்' என்று கூறினேன். அதற்கு, 'அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான வார்த்தை 'சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி' என்பதாகும் என்று கூறியதாகவும் அபூதர் (ரழி) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

இதேவேளை அபூஹுரைரா (ரழி) அவர்கள், ஒரு முறை நபி (ஸல்) அவர்கள், '

இரண்டு வாக்கியங்கள் நாவுக்கு எளிதானவை. (நன்மை, தீமை நிறுக்கப்படும்) தராசில் கனதியானவை. அளவற்ற அருளாளனின் பிரியத்திற்குரிய வாக்கியங்கள் அவை. சுப்ஹானல்லாஹி வ பிஹம்திஹி சுப்ஹானல்லாஹில் அழீம். (அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து துதிசெய்கிறேன். கண்ணியமிக்க அல்லாஹ்வைத் துதிக்கிறேன்) எனக்கூறியதாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: புஹாரி)

'யார் காலையிலும் மாலையிலும் நூறு முறை, 'சுப்ஹானல்லாஹி வ பிஹம்திஹி (அல்லாஹ் தூயவன் எனப் போற்றிப் புகழ்கிறேன்) என்று சொல்கிறாரோ அவர் கொண்டு வந்த (நல்லறத்)தைவிடச் சிறந்ததை வேறெவரும் மறுமைநாளில் கொண்டு வருவதில்லை. அவர் சொன்ன அளவுக்குச் சொன்னவரையும் அல்லது அதைவிடக் கூடுதலாகச் சொன்னவரையும் தவிர.' என்றும் நபி (ஸல்) குறிப்பிட்டதாக அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

ஆகவே சுப்ஹானல்லாஹி வ பிஹம்திஹி சுப்ஹானல்லாஹில் அழீம் என்ற தஸ்பீஹ்வின் சிறப்பையும் மகத்துவத்தையும் அடைந்து கொள்ள முயற்சிப்போம்.

அப்துல்லாஹ்...

## சகோதரர்கள் மூவருக்கு... 03ஆம் பக்க தொடர்...

அருள்வதனி உதயகுமார் ஆகிய சகோதர. சகோதரிகளே இவ்வாறு லொத்தர் சீட்டிழுப்பில் ஜாக்பொட் பரிசுத் தொகையை வென்றுள்ளனர்.

பரிசுத் தொகை வென்றெடுக்கப்பட்டமை தங்களுக்கு பெரும் இன்ப அதிர்ச்சியை ஏற்படுத்தியதாக தவராஜா தெரிவித்துள்ளார். உடனடியாக தனது சகோதரிக்கு இது தொடர்பில் அறிவித்த போதிலும், அவர் அதனை நம்பவில்லையென குறிப்பிட்டுள்ளார்.

பரிசுத் தொகை வென்ற சில நாட்களுக்கு தம்மால் செயற்பட முடியவில்லையென அருள்வதனி தெரிவித்துள்ளார். தனது சகோதரர் பரிசுத் தொகை பற்றி அறிவித்த போது அழுது அதிர்ச்சியில் கீழே வீழ்ந்து விட்டதாகவும் மற்றைய சகோதரர் யோகராஜா தெரிவித்துள்ளார்.

புதிய கார் ஒன்றை கொள்வனவு செய்ய உள்ளதாகவும் பிள்ளைகளுக்கு நிதி வழங்க உள்ளதாகவும், மகனின் கல்விக்கு நிதி ஒதுக்க உள்ளதாகவும் அருள்வதனி தெரிவித்தார்.

## மக்களுக்கு தற்போதைய... 03ஆம் பக்க தொடர்...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கும் ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுக்குமிடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னரே,அவர் இதனைத் தெரிவித்தார். வரவு செலவு திட்டத்துக்கு ஆதரவாக நாங்கள் வாக்களித்தோம். எதிர்க்கட்சியிலிருந்த அனைவரும் அதற்கு எதிராக வாக்களித்தனர். அதாவது திறைசேரியிலிருந்து வரவு செலவுத் திட்டத்துக்குப் பணம் ஒதுக்குவதை இவர்கள்,எதிர்த்தனர்.

வரவு செலவு திட்டத்துக்கு எதிராக வாக்களித்தவர்கள் தேர்தலுக்கு பணம் வழங்குமாறு ஏன் கூச்சலிடுகின்றனர். அவ்வாறு செய்ய அவர்களுக்கு உரிமையில்லை என்றார்.

இந்த நாடு, வாக்கெடுப்பு நடத்தும் நிலையில் உள்ளதா? தற்போது மக்களுக்கு அவசியம் தேர்தலா? அல்லது நிவாரணங்களா? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். வாக்கெடுப்பு நடத்தப்பட்டு 8,711 உறுப்பினர்களை நியமித்து, மீண்டும் வரி செலுத்த வேண்டுமா? இந்த நேரத்தில் பதவி ஆசையில் வாக்குளை கேட்கின்றனர். தற்போது தேர்தலை நடத்தி வித்தை காட்ட முடியாது. இதில் மக்கள் தெளிவாக உள்ளனர்.



தேர்தல் கண்காணிப்பாளராகச் சென்றுள்ள இலங்கைக்கான நைஜீரிய உயர்ஸ்தானிகர் கனநாதன், நைஜீரியாவில் உள்ள வாக்குச் சாவடியில் கென்யாவின் முன்னாள் ஜனாதிபதி உகுரு கென்யாட்டாவுடன் உரையாடுவதை காணலாம். நைஜீரிய ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களுக்காக, கண்காணிப்பாளர்களாக பங்கேற்க இவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

## இலங்கை ரூபாவின் பெறுமதி...

உலக வங்கியினால் இலங்கைக்கு அறிவிக்கப்பட்டுள்ள 400 மில்லியன் அமெரிக்க டொலர் உதவித் தொகை கிடைக்கின்றமை, இறக்குமதி கட்டுப்பாடுகள், ஏற்றுமதி அதிகரிப்பு, சுற்றுலா பயணிகள் வருகையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு, வெளிநாட்டு கடன்களை மீளச் செலுத்துவது இடைநிறுத்தப்பட்டமை, பணம் அச்சிடப்படாதமை உள்ளிட்ட காரணிகளினால், இலங்கை ரூபாவின் பெறுமதி வலுவடைந்து வருவதாக பொருளியல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

## இந்திய மீனவர்களை...

குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்களைத் தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி, பாஜக தலைவர் குப்புசாமி அண்ணாமலை, அண்மையில் இந்திய வெளியுறவுத் த்துறை அமைச்சருக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

நாகை மாவட்டம் கோடியக்கரை அருகே மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர்கள் மீது, இலங்கை கடற்படை நடத்தியதாக கூறப்படும் தாக்குதலில் நால்வர் காயமடைந்ததாக அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இவ்விவகாரம் தொடர்பில், உயர்ஸ்தானிகராலயத்தினூடாக இலங்கை அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்டதாக வெளியுறவுத்துறை அமைச்சரின் பதில் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் தாக்குதல் தொடர்பான விபரங்களை இலங்கை அரசாங்கத்திடம், இந்திய உயர்ஸ்தானிகராலயம் கோரியுள்ளதாகவும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர், கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் தமது பதில் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## முதலீட்டு தகவல்களை டிஜிட்டல்...

முதலீட்டு வாய்ப்புகளை இலகுவாக இனங்காண, வாய்ப்பு கிட்டுமெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

முதலீட்டு ஊக்குவிப்புக்காக முன்வைக்கப்பட்டுள்ள 2023 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் நிலத்தை செயற்றிறனுடன் பயன்படுத்துவது தொடர்பான 2023 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளைஅமுல்படுத்துவதன் முன்னேற்றம் குறித்து மீளாய்வு செய்வதற்காக இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களால் பயன்படுத்தப்படாமல் உள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளின் அளவுகளை விரைவாகக் கண்டறிந்து, அடையாளம் காணப்பட்ட காணிகள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய தரவு வங்கியொன்றை நிறுவ வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

## போதைப்பொருள் பாவனையை...

குழுவின் முன்னாயத்த கூட்டம் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.


இனத்போதே பொலிஸாரிடம் அமைச்சர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்படும் விடயங்களை அமைச்சரவையின் கவனத்துக்கு உடனடியாக எடுத்துச் சென்று, விரைவில் தீர்வுகாண நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இங்கு உறுதியளித்தார்.

அத்தோடு போதைப் பொருள் பாவனைப் பரவலைக் கட்டுப்படுத்த பொலிஸாருடன் சிவில் பாதுகாப்புக் குழுக்களைப் பலப்படுத்தி பிரதேச ரீதியாக நடவடிக்கை எடுப்பதென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், சட்ட விரோத கடற்றொழில் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நோக்கில் தொண்டர் அணி ஒன்றை உருவாக்க உள்ளதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன்போது தெரிவித்துள்ளார்.

கச்சதீவு அந்தோனியார் தேவாலய உற்சவத்திற்கான ஏற்பாடுகள் மற்றும் பக்தர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

# நடிகை ப்ரியாஜெயந்தி காலமானார்



இலங்கையில் தமிழ் சினிமாவிலும் மேடை நாடகங்களிலும் தொலைக்காட்சி நாடகங்களிலும் நடித்து பிரபல்யமான நடிகை பிரியா ஜெயந்தி காலமானார்.

இவருடைய பூதவுடல் பொரளை நீலா மலர் சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் கேரளத்தில் இருந்து இலங்கையில் குடியேறிய குடும்பம் ஒன்றில் கொழும்பு தெமட்டகொடையில் அப்புக்குட்டி, கல்யாணி ஆகியோருக்குப் பிறந்தவர் பிரியா ஜெயந்தி. இவருடன் ஓர் ஆண் சகோதரனும் ஏழு பெண்களும் கூடப் பிறந்தவர்கள். தந்தை ஓர் அரச சேவையாளர், நாடகங்களிலும் நடித்தவர். மாளிகாகந்தை தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்ற இவர் பின்னர் கொழும்பு கப்பித்தாவத்தை தொண்டர் பாடசாலையில் கல்வியைத் தொடர்ந்தார்.

இவர், இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதல் தமிழ்த் திரைப்படத்தில் கதாநாயகியாக நடித்த ஜெயகௌரியின் சகோதரியாவார்.

# ஆவணங்களைக் கோருகிறார் ஆணையாளர்

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உரிய புதிய வாக்களிப்பு தினம் நியமிக்கப்படாமல் தேர்தல் அறிக்கை, மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் மூலம் தமக்கு அனுப்பப்பட வேண்டும் என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்கவினால் அனைத்து பிரதி மற்றும் உதவி தேர்தல் ஆணையாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அறிவித்தல் தேர்தல் ஆணையாளர் நாயகத்தினால் நேற்று முன்தினம் அனைத்து மாவட்டப் பிரதி மற்றும் உதவி தேர்தல் ஆணையாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## இலங்கையின் கடனுதவிகளுக்கு...

சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மாவோ நிங், சர்வதேச இறையாண்மை பத்திரம் வைத்திருப்பவர்கள் மற்றும் பலதரப்பு கடன் வழங்குநர்கள் உட்பட வர்த்தகக் கடன் வழங்குநர்கள் இலங்கைக்கு அதிகபட்ச பங்களிப்புகளை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவர்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயல்முறைக்கு சீனா தொடர்ந்து ஆதரவளிக்கும்.இலங்கையின் கடன் சுமையை குறைப்பதற்கும் நிலையான அபிவிருத்தியை அடைவதற்கும் சாதகமான பங்கை வகிக்க, சர்வதேச நிதி நிறுவனங்களுடன் இணைந்து சீனா பணியாற்றும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஏற்றுமதி வருமானம்...

இந்தியாவுக்கான ஏற்றுமதி வருமானம் 69.58 மில்லியன் அமெரிக்க டொலராகவும் ஜேர்மனிக்கான ஏற்றுமதி வருமானம் 48.12 மில்லியன் அமெரிக்க டொலராகவும் அதிகரித்துள்ளதாக அச்சபை தெரிவித்துள்ளது.

அதனைவிட இத்தாலி, நெதர்லாந்து, கனடா, ஐக்கிய அரபு இராச்சியம், பெல்ஜியம், பிரான்ஸ், அவுஸ்திரேலியா, சீனா, ஜப்பான், பங்களாதேஷ் மற்றும் மெக்ஸிக்கோ உள்ளிட்ட நாடுகளுக்கும் இலங்கையின் உற்பத்திப்பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதாகவும் அந்த சபை தெரிவித்துள்ளது.

## பெரிய வெங்காயம், கிழங்கு...

சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்றைய தினம், 95 ரூபா என்ற மொத்த விலைக்கு பெரிய வெங்காயமும், ஒரு கிலோ உருளைக்கிழங்கு 130 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டதாக அச்சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த வாரத்தில் ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் விலை, புறக்கோட்டை சந்தையில் 130 ரூபாவாகக் காணப்பட்டதுடன், உருளைக்கிழங்கு ஒரு கிலோ 150 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது.

## உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில்...

Zoom தொழில்நுட்பத்தினூடாக நடைபெற்ற இந்த கலந்துரையாடலில், உரிய வகையில் நிதி கிடைக்காமையினால் உள்ளூராட்சித் தேர்தலுக்கான அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் ஏற்பட்டுள்ள தடைகள் தொடர்பில், மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் ஆணைக்குழுவிடம் எடுத்துரைத்துள்ளனர்.

## படுகொலை குற்றவாளிகள்...

பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட மேற்படி குற்றவாளிகளுக்கே கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி மகேஷ் வீரமன் நேற்று (02) மரணதண்டனை வழங்கி தீப்பளித்துள்ளார்.

பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல்செய்யப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள், முறைப்பாடுகள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில்,

மேற்படி வழக்கின் தீர்ப்பை நேற்று மேல் நீதிமன்ற நீதிபதி

வெளியிட்டு, குற்றவாளிகள் நால்வருக்கும் மரண தண்டனை வழங்கியுள்ளார்.

2003 ஆம் ஆண்டு ஜூன் (07) அல்லது அதனை அண்மித்த தினத்தில் இடம்பெற்ற மேற்படி கொலை சம்பவம் தொடர்பில், பிரதிவாதிகள் நால்வருக்கு எதிராக சட்டமா அதிபரினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மேற்படி குற்றவாளிகளில் ஒருவர் நீதிமன்றத்திடமிருந்து தப்பித்து வாழ்வதால், அவரை கைதுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறிப்பிட்டுள்ள நீதிபதி அதற்கான பிடியாணையையும் பிறப்பித்துள்ளார்.

## கச்சதீவு ஆலய திருவிழா...

செயலாளர் அ.சிவபாலசுந்தரன் நேற்று தெரிவித்தார். யாழ். மாவட்டச் செயலாளரது ஒருங்கிணைப்பில் யாழ். ஆயர் இல்லம், இலங்கை கடற்படை, நெடுந்தீவு பிரதேச செயலகம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட சகல திணைக்களங்களின் முழுமையான ஒத்துழைப்புடன் இன்று வெள்ளிக்கிழமை மற்றும் நாளை சனிக்கிழமை ஆகிய தினங்களில் விழாக்கள் நடைபெறுகின்றன.

கச்சதீவு உற்சவத்தில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கான இன்றைய தின இரவு உணவு, நாளைய தினத்துக்கான காலை உணவு மற்றும் மீள் பயணத்துக்கான சிற்றுண்டி என்பன வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை, இன்றைய தினம் காலை முதல் யாழ்ப்பாணம் குறிகாட்டுவான் பஸ் சேவைகளும், குறிகாட்டுவான் கச்சத்தீவு படகு சேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, இராமேஸ்வரத்திலிருந்து 72 படகுகளில் 2,000 பேர் கச்சதீவுக்கு இன்று காலை முதல் வரத் தொடங்கியுள்ளனர்.

கச்சத்தீவு திருவிழா ஆரம்பமாவதுடன் தமிழகத்தில் 04 நாட்கள் மீன் பிடிக்க தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

கச்சத்தீவு திருவிழாவுக்கு பக்தர்களை ஏற்றிச் செல்லும் படகுகளின் சோதனை, ஆவணங்கள் சரிபார்ப்பு நடைபெறுவதால் இராமேஸ்வரம் மீனவர்கள் 04 நாட்கள் கடலில் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

இம்முறை இந்தியாவிலிருந்து சுமார் 2,500 பக்தர்கள் கலந்து கொள்ள பெயர் பதிவு செய்துள்ளனர்.



வத்தளை நவீன உலக பெண்கள் அமைப்பு நடாத்திய பரிசளிப்பு விழா வத்தளை நகர சபை மண்டபத்தில் (2) நேற்று மாலை நடைபெற்றபோது அமைப்பின் தலைவி ரஹீமா அன்வர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் மற்றும் வத்தளை நகர சபை உறுப்பினர் சசிக்குமார் ஆகியோருக்கு விருது வழங்குவதை காணலாம்.

# யாழ். பல்கலை கலைப்பீடத்தில் இன்று 'தொழிற்சந்தை 2023'

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கான உள்ளகத் தொழில்சார் பயிற்சிகளை வழங்க முன்வரும் நிறுவனங்களை அடையாளம் காணும் நோக்குடனும், யாழ். பல்கலைக்கழகக் கலைப் பட்டதாரிகளுக்கான நிரந்தரமான மற்றும் தற்காலிக, முழுநேர மற்றும் பகுதிநேர வேலைவாய்ப்புக்களுக்கான வாய்ப்புக்களை அரச மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொடுக்கும் இலக்குடனும் முதற்தடவையாக 'தொழிற் சந்தை 2023' ('Career Fair 2023') (03) இன்று வெள்ளிக்கிழமை கலைப்பீடத்தில் நடைபெறவுள்ளது.

உலகவங்கியின் நிதியுதவியிலான 'மேன்மைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி ஊடாக உயர்கல்வியைத் துரித வளர்ச்சிக்குட் படுத்துதல்' திட்டத்தின் உதவியில் இத்தொழிற்சந்தை முன்னெடுக்கப்படவுள்ளது.

நாடு முழுவதும் 85ற்கும் அதிகமான நிறுவனங்கள் பங்கேற்கும் இத்தொழிற்சந்தையில் அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள், சபைகள், தனியார் வங்கிகள், நிதி நிறுவனங்கள், விருந்தோம்பல் துறையைச் சேர்ந்த நிறுவனங்கள், ஹோட்டல்கள், உயர்கல்வி நிறுவனங்கள், தனியார் பாடசாலைகள், உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் தொழிற்துறையினர் எனப் பல தரப்பினரும் கலந்துகொள்வது குறிப்பிடத்தக்கது.

'தொழிற் சந்தை 2023'இன் தொடக்கவிழாவில், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்துவைக்கின்றார்.

காலை 09 மணிக்கு ஆரம்பமாகும் இந் நிகழ்வில், கலைப்பீடத்தில் நான்காம் வருடம் மற்றும் மூன்றாம் வருட சிறப்புக்கலை மற்றும் பொதுக் கலை பயிலும் மாணவர்களும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிறப்புக்கலை, பொதுக்கலைப் பட்டங்கள் பெற்று, வேலைவாய்ப்புக்களுக்காகக் காத்திருக்கும் பட்டதாரிகளும் நேரடிப் பயனாளிகளாக இணைந்து கொள்ளவிருக்கின்றனர்.

## தேர்தலுக்கு தடையாகவுள்ள...

மனுவை தாக்கல் செய்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழு எதிர்வரும் (09) நடத்த திட்டமிட்டிருந்த உள்ளூராட்சித் தேர்தலுக்கு ஒத்துழைப்பு வழங்காது, அதனை சீர்குலைக்க நடவடிக்கை எடுத்த அரச அச்சகர், திறைசேரியின் செயலாளர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர், பொலிஸ் மாஅதிபர் உள்ளிட்ட அரச அதிகாரிகள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென்றும் அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்தத் தேவையான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருந்த போதும், வாக்குச்சீட்டு அச்சிடப்படாமை, அதற்கான நிதி ஒதுக்கப்படாமை உள்ளிட்ட காரணங்களால் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. இதுதொடர்பிலே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## கல்முனை மாநகர சபை...

சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் மேலும் தெரிவிக்கையில்,

கல்முனை மாநகர சபையின் வரிப்பணத்தில், இரு உத்தியோகத்தர்கள் மோசடியில் ஈடுபட்டுள்ளதாக முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. இவ்விருவரும் பதவியிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு எதிராக விரிவான விசாரணையை மேற்கொண்டு,கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பில் கல்முனை மாநகர முதல்வர் மற்றும் ஆணையாளருக்கு ஆலோசனை வழங்கி வருகிறேன்.

கிழக்கு மாகாண பிரதம செயலாளர், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், அம்பாரை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோருடனும் பேசப்பட்டுள்ளது.

மக்கள் வரிப்பணத்தில் இடம் பெற்ற இந்த மோசடி நடவடிக்கை கல்முனை மாநகர மக்கள் மத்தியில் கவலையையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான திருட்டு, மோசடிகளை மூடி மறைக்க, தானுட்பட, எந்த அரசியல் தலைவர்களும் அனுமதிக்க போவதில்லை எனன்றார்.

## சீன சுற்றுலாப் பயணிகள்...

சுற்றுலா பயணிகள் வந்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரியில் மாத்திரம் சுற்றுலா பயணிகள் மூலம் 162 மில்லியனுக்குமதிகமான அமெரிக்க டொலர்களை, வருமானமாக பெற முடிந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொவிட் 19 அச்சுறித்தலின் பின்னர் முதற்தடவையாக சீனச் சுற்றுலா பயணிகள் 117 பேர், நேற்று முன்தினம் நாட்டுக்கு வந்தனர். இலங்கைக்கு சொந்தமான விமானத்திலேயே, இவர்கள் வந்ததாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி சீன சுற்றுலாப் பயணிகளை வரவேற்பதற்காக அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ, வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, சீனத் தூதுவர் வீ சங் கொங் ஆகியோரும் விமான நிலையத்திற்கு சமுகமளித்திருந்தனர்.கடந்த மூன்று வருடங்களாக சீன உல்லாசப் பிரயாணிகளுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. இத்தடை, இம்மாதம் (01) முதல் நீக்கப்பட்டது.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ, முதற்கட்டமாக தற்போது சீன சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.விசேட விமானத்திலே இவர்கள் வந்துள்ளனர்.எதிர்வரும் ஏப்ரலில், வாரத்திற்கு ஒன்பது விமான சேவைகளை சீனாவின் மூன்று நகரங்களுக்கு

நடாத்தப்படவுள்ளது.செங்கெய், பீஜிங் மற்றும் கொன்ஷூ ஆகிய நகரங்களுக்கே இச்சேவைகள் நடாத்தப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## உரத்தை தட்டுப்பாடின்றி...

ஊடகவியலாளர் சந்திப்பொன்றிலே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். விவசாயத்துறை மேம்பாட்டுக்காக (2023) அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து இங்கு விளக்கமளிக்கப்பட்டது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் (01) நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் அமைச்சர் தெரிவித்ததாவது,

மூன்று போகங்களுக்குப் பிறகு இம்முறை டிரிபிள் பொஸ்பேட் உரத்தை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.இதை ஏற்றிய கப்பல்,எதிர்வரும் 15 – 20 ஆம் திகதிகளுக்குள் நாட்டுக்கு வரும்.கட்டணங்கள் அறவிடப்படாது விவசாயிகளுக்கு இது வழங்கப்படும் . விவசாயிகள், நாட்டுக்கு வழங்கிய உழைப்பு மற்றும் தியாகங்களை கௌரவிக்கவும், ஊக்கப்படுத்தவும் இவற்றை வழங்க உள்ளோம்.எதிர்வரும் சிறுபோகத்திற்கு மட்டுமன்றி, கடந்த பெரும்போகத்தில் பயிரிட்ட விவசாயிகளுக்கும் இவை வழங்கப்படும்.

யூரியா உரங்கள் இருப்பிலுள்ளன.இதனால்,இம்முறை சலுகையாக 10,000 ரூபாவுக்கு யூரியாவை வழங்க உள்ளோம்.

அத்துடன் கடந்த முறை 19,500 ரூபாவுக்கு வழங்கப்பட்ட உரம், இம்முறை 10,000 ரூபாவுக்கு வழங்கப்படவுள்ளது. அமைச்சரவை இதற்கு அங்கீகாரம் வழங்குமென எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## பசுமை வலுசக்தி பொருளாதாரத்துக்கு...

மின்னேரிய, வோல்டா ஒட்டோ டெக் இன்ஜினியரிங் நிறுவனத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று (02) கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

நாட்டின் நிலவும் எரிபொருள் நெருக்கடிக்குத் தீர்வாக மின்சார மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளுக்கான தேவை இக்காலத்தில் ஏற்பட்டுள்ளது.

ஒன்றிணைக்கப்படும் டிராக்டர்கள், மின்சார மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளை இன்று முதல் கொள்வனவு செய்வதற்கு வோல்டா ஒட்டோ டெக் இன்ஜினியரிங் நிறுவனத்தினால் வசதிகள் செய்யப் பட்டுள்ளது.

வோல்டா நிறுவனத்தின் திறமைகளை பார்வையிடக் கிடைத்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நிறுவனத்துக்கு அரசாங்கத்தினால் வழங்கக்கூடிய ஆதரவு தொடர்பில் ஆராய்ந்து வருகிறோம். பசுமை வலுசக்தி பொருளாதாரத்தை உருவாக்க எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையை நாம் பாராட்ட வேண்டும். இதுபோன்ற திட்டங்களை செயல்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை, பசுமை வலுசக்தி பொருளாதாரத்திற்கு மாற்ற அனைவரும் பாடுபட வேண்டும். இப்போது உலக நாடுகள் பசுமை வலுசக்தி பொருளாதாரத்தை நோக்கி நகர்கின்றன. இலங்கை என்ற வகையில் நாமும் அந்தப் பயணத்தை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்த ஐந்தாண்டுகளில், பசுமை வலுசக்தி பொருளாதாரத்தை நோக்கி நகர்வதன் மூலம் பல நன்மைகளை அடைய இலங்கைக்கு வாய்ப்புள்ளது. அதற்கு, சுயமாக முன்னேறும் இத்தகைய முதலீட்டாளர்களும், வர்த்தகர்களும் நாட்டுக்குத் தேவை என்றார்.

நீர்ப்பாசனம், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, இராஜாங்க அமைச்சர்களான திலும் அமுனுகம, சிறிபால கம்லத், பிரமித பண்டார தென்னகோன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசிரி சூரியாரச்சி, வோல்டா ஒட்டோ டெக் இன்ஜினியரிங் நிறுவனத்தின் தலைவர் ஜகத் மாகவிட உள்ளிட்ட பலர் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

தினகரன் Business



BMICH இல் diploma in Natural Therapy (இயற்கை மருத்துவ டிப்ளோமா) சான்றிதழ் 1000 பேருக்கு வழங்கி வைக்கப்பட்டது.GLOW இன் வர்த்தக நாம முகாமையாளர் ருக்ஷான் பண்டார இந்த நிகழ்வில் சிறந்த செயற்பாட்டாளருக்கான விருதை வழங்கினார்.

# SLT-MOBITEL இனால் மீரிகமவில் மர நடுகை

## புத்தக நன்கொடைத் திட்டங்கள் முன்னெடுப்பு

இளம் சந்ததியினரின் அறிவு விருத்திக்கு பங்களிப்பு வழங்குவது, சூழலைப் பாதுகாப்பது மற்றும் அனைவருக்கும் பாதுகாப்பான இலங்கையை கட்டியெழுப்புவது போன்றவற்றுக்கான தனது அர்ப்பணிப்பை மேலும் உறுதி செய்யும் வகையில், SLTMOBITEL தனது சூழல்சார் சமூக ஆளுகை (ESG) நிகழ்ச்சித் திட்டத்தை புத்தாண்டிலும் முன்னெடுத்திருந்தது. அதற்கமைய, மீரிகம, தவலம்பிட்டிய மகா வித்தியாலயத்தில் புத்தகங்கள் நன்கொடை மற்றும் இலுப்பை மர நடுகைத் திட்டம் ஆகியவற்றை முன்னெடுத்திருந்தது.

SLTMOBITEL இன் சந்தைப்படுத்தல் சேவைகள் பொது முகாமையாளர் அனுருத்த சூரியாரச்சி மற்றும் சில இதர ஊழியர்கள், பாடசாலையின் அதிபர் மற்றும் ஊழிய அங்கத்தவர்களுடன், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

SLTMOBITEL இன் "நாடு முழுவதிலும் சுவாசத்தையும், உரத்தையும் பயிரிடுவோம்" எனும் திட்டத்தின் 9ஆவது நடவடிக்கையாக மீரிகம பிரதேசத்தில் இலுப்பை மர நடுகைத் திட்டம் அமைந்திருந்தது.

# LOLC குழுமத்தினால் மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கல் வழங்கல்




LOLC குழுமம், நெருக்கடிக்குள்ளாக்கிய பொருளாதாரத்தில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வறுமையான மக்களுக்காக ஆக்கபூர்வமான பணியொன்றை முன்னெடுப்பதற்காக 'திவி சவிய' என்ற நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்தது. 'வாழ்வை வெற்றி கொள்வோம்' என்ற தொனிப்பொருளில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

25 மாவட்டங்களில் குறைந்த வருமானம் பெறும் ஒடுக்கப்பட்ட பல மில்லியன் மக்களின் பசியைப் போக்க மாபெரும் சக்தியாக இருந்த இத்திட்டம் 4 கட்டங்களாக நடைமுறைபடுத்தப்பட்டது.

இக்கருதிட்டத்தின் ஊடாக நாடு முழுவதும் 1-13 ஆம் வகுப்பு வரையிலான பாடசாலை மாணவர்களுக்கு ஆண்டுக்கு தேவையான அப்பியாசக் கொப்பிகள், பாடசாலை பைகள், தண்ணீர்ப் போத்தல்கள் மற்றும் பேனா, பென்சில்கள், வர்ண பெட்டிகள், கணித கருவி பெட்டிகள் போன்ற எழுதுபொருட்கள் தொடர்ச்சியான ஒழுங்கில் வழங்கப்படும். இத்திட்டத்தின் ஆரம்ப கட்டமாக, 100 மாணவர்களுக்கும் குறைந்த 2671 பாடசாலைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

வைபவரீதியான நிகழ்வில் LOLC ஹோல்டிங்ஸ் பிஎல்சியின் குழும் முகாமைத்துவப் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி கபில ஜயவர்தன,கல்வி அமைச்சின் செயலாளர் எம். என் ரனசிங்க ஆகியோர் இணைந்து புத்தகப் பொதிகளை கையளித்தனர்.

# சன்குயிக் ரெடிடு டிறிங்க் தொழிற்சாலை உத்தியோகபூர்வமாக திறந்து வைப்பு





சன்குயிக் லங்கா (பிரைவட்) லிமிடெட், மிகவும் விரும்பப்படும் சன்குயிக் பழங்கள் செறிவூட்டப்பட்ட, Sunquick BiBi அதன் வலுவான நிலையினை மேலும் உறுதிப்படுத்தும் வகையில், அதன் Sunquick BiBi பான உற்பத்திக்காக நவீன தொழில்நுட்பங்களுடன் அமைந்த அதன் தொழிற்சாலையினை 2023 பெப்ரவரி 23 ஆம் திகதி ஹொரணையில் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தது.

சிறப்பு நிகழ்வில் CORO A/S டென்மார்க், தலைவர் சோரன் ஹோல்ம் ஜென்சன் மற்றும் சன்குயிக் லங்கா தலைவர் ஹேமகா அமரசூரிய ஆகியோர் கலந்து கொண்டனர், மேலும் Sunquick Lanka மற்றும் Sunquick டென்மார்க், ஊடகங்கள் மற்றும் நலன் விரும்பிகள் வருகை தந்திருந்தனர்.

# யூனியன் வங்கி சவால்களுக்கு மத்தியிலும் 2022 நிதியாண்டில் வலுவான வருமான வளர்ச்சி





2022 ஆம் ஆண்டில் யூனியன் வங்கி தொடர்ச்சியாக மீட்சியாக திகழ்ந்ததுடன், உறுதியான மூலதன நிலையைக் கொண்டிருந்ததுடன், அதிகரித்த ஒட்டுமொத்த வருமானத்தைப் பதிவு செய்து, மேம்படுத்தப்பட்ட பிரதான வங்கியியல் வினைத்திறனை பதிவு செய்திருந்தது.

மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டில், வங்கியின் மொத்த வருமானம் 73% இனால் அதிகரித்து ரூ. 18,966 மில்லியனாகப் பதிவாகியிருந்தது.

கடுமையான இடர் மற்றும் மீட்சிக் கட்டமைப்பினூடாக தனது வியாபாரங்களை வங்கி நிர்வகித்திருந்தமையினூடாகவும், கவனமான முறையில் புதிய வியாபார வாய்ப்புகளைத் தெரிவு செய்திருந்தமையினூடாகவும், இந்த வளர்ச்சியைப் பதிவு செய்ய முடிந்திருந்தது.

தேறிய வட்டி வருமானம் (NII) 36.6% இனால் உயர்வடைந்து ரூ. 5,814 மில்லியனாகப் பதிவாகியிருந்தது. கடன் இலாகா மற்றும் திறைசேரி சொத்துக்களின் மீள்விலையிடலினூடாக கிடைத்திருந்த உயர்ந்த வருமதிகள் இதில் பங்களிப்புச் செய்திருந்தது. வட்டிசார் செலவீனங்களை முறையாக நிர்வகித்திருந்தமையினூடாக, தேறிய வட்டி எல்லைப் பெறுமதியை (NIM) 116 bps இனால் அதிகரித்துக் கொள்ள முடிந்தது. தேறிய கட்டண மற்றும் தரகு வருமானம் 32.8% இனால் அதிகரித்து ரூ 1,143 மில்லியனாக பதிவாகியிருந்தது. இதில், வியாபார வர்த்தகங்கள், வெளிநாட்டு பண அனுப்புகள், கடன் மற்றும் பற்று அட்டைகள் போன்றவற்றில் அதிகரித்த செயற்பாடுகள் பதிவாகியிருந்தன.

அந்நியச் செலாவணி வருமானம் மற்றும் ஆதாயத்தினூடாக இதர தொழிற்பாட்டு வருமானமும் 121% இனால் அதிகரித்திருந்தது.

பொருளாதாரச் சூழலினால் எழுந்திருந்த அழுத்தங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட கடன் பெறுநர்கள் தொடர்ச்சியாக எதிர்நோக்கியிருந்த அழுத்தங்களால் கடன்களை மீளச் செலுத்துவதில் எதிர்நோக்கியிருந்த சவால்கள் காரணமாக, வங்கி அதிகரித்த மதிப்பிறக்கங்களை ஒதுக்கீடு செய்ய நேரிட்டது.

இதனால் வங்கியின் இலாபகரத்தன்மையிலும் தாக்கம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வுக்குட்படுத்தப்பட்டிருந்த ஆண்டுக்கான மதிப்பிறக்கக் கட்டணம் ரூ. 2,556 மில்லியனாக காணப்பட்டது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 174% அதிகரிப்பாகும்.

# 2021 தேர்தலில் சீனாவின் தலையீடு பாதிப்பு ஏற்படவில்லை என்கிறார் கனடிய பிரதமர்

## முழு விசாரணை வேண்டுமென கோரிக்கை

கனடாவின் 2021 பொதுத் தேர்தலில் பழமைவாத கன்சர்வேட்டிவ் கட்சியை தோற்கடித்து தாராளவாத லிபரல் கட்சியை ஆட்சியில் அமர்த்தும் வகையில் சீனா இத் தேர்தலில் தலையீடு செய்திருந்தது என்று குட்ளாப் அண்ட் மெயில் பத்திரிகையை ஆதாரம் காட்டி ஸ்ட்ரெய்ட் டைம்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இச்செய்தி வெளியானதையடுத்து லிபரல் கட்சி பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோ, 2021 தேர்தல் முடிவுகளின் நேர்மையில் கனடிய மக்கள் முழு நம்பிக்கை கொள்ள முடியும் குளறுபடிகள் எதுவும் இல்லை என உறுதியளித்துள்ளார்.

நிதி அன்பளிப்பு, கனடாவில் பயிலும் சீன மாணவர்களை பிரசாரத்தில் ஈடுபடச் செய்தமை, கனடிய சட்டசபை உறுப்பினர்களை குறிவைத்து செல்வாக்கு செலுத்தியமை, மக்கள் அபிப்பிராயத்தில் மாற்றம் ஏற்படுத்தும் வகையில் செல்வாக்குப் பிரயோகம் எனப் பல வழிகளில் சீனா இத் தேர்தலில் தலையீடு செய்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும், வெளிநாடுகளின் தேர்தல்களில் சீனா தலையீடு செய்வது ஒன்றும் புதிய விஷயம் அல்ல என்றும், இதில் கனடா விதிவிலக்கு அல்ல என்றும் பிரதமர் ட்ரூடோ கூறியுள்ளதோடு 2019, 2021 தேர்தல் முடிவுகளில் எந்த மாற்றத்தையும் சீனத் தலையீடுகள் ஏற்படுத்தவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# சீனா அத்துமீறுவதாக பிலிப்பைன்ஸ் குற்றச்சாட்டு பிலிப்பைன்ஸ் தாக்கப்பட்டால் உதவிக்கு வருவோம்

## அமெரிக்கா அறிவிப்பு!

பிலிப்பைன்சின் மேற்குக் கடல் பிரதேசத்தில் அத்துமீறல்களில் ஈடுபட வேண்டாம் என்றும் இது இப்பகுதியின் அமைதியையும் உறுதிப்பாட்டையும் குலைக்கும் செயல் என்றும் பிலிப்பைனஸ் அரசு சீனாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இப்பகுதி கடற் பிரதேசத்தில் பிலிப்பைன்ஸ் கரையோர காவலர்கள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது சீன கடலோரக்காவல் படகு இராணுவ நடவடிக்கையில் பயன்படுத்தும் லேசர் ஒளியை பிலிப்பைன்ஸ் காவலர்கள் மீது இரண்டு தடவைகள் பாய்ச்சியதாகவும் இதனால் கண்கூசி பார்க்க முடியாமல் அவர்கள் தவிக்க நேர்ந்ததாகவும் பிலிப்பைன்ஸ் வெளிநாட்டு அமைச்சின் பேச்சாளர் திரேஸிதா தாஸா இச் சம்பவம் பற்றி தெரிவித்திருப்பதாக 'டெய்லி இன்குயரர்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதே சமயம் சீனா வெளியிட்டுள்ள அறிக்கையில், பிலிப்பைன்ஸ் ரோந்துக் கப்பல் தமது கடல் எல்லைக்குள் பிரவேசித்ததையடுத்தே அக் கப்பல் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்பதைக் கண்டறியவும், எல்லைப் பகுதியை தாண்டி வெளிச் செல்ல வழிகாட்டும் வகையிலும் லேசர் ஒளி பாய்ச்சப்பட்டதாகவும், லேசர் பாய்ச்சப்படுவதால் கப்பலுக்கோ அல்லது அதில் உள்ளவர்களுக்கோ ஊறு விளைவதில்லை எனவும் விளக்கம் தரப்பட்டுள்ளது.

இதே சமயம் சீன நடவடிக்கையை எதிர்த்து பிலிப்பைன்ஸ் அரசு இராஜதந்திர ரீதியான எதிர்ப்பை தெரிவித்துள்ளது.

# காணாமல்போன சீன தொழிலதிபர்; அவரது நிறுவனம் பங்குகள் வீழ்ச்சி

சீனாவின் முக்கிய வர்த்தக நிறுவனமான 'ரினைசன்ஸ் ஹோல்டிங்' கின் ஸ்தாபகரும் பெரு வர்த்தகருமான பாவோஃபான் இருக்குமிடம் தெரியவில்லை என்றும் அவர் காணாமல் போயிருப்பதையடுத்து அந் நிறுவன பங்குகள் வீழ்ச்சி அடைந்திருப்பதாகவும் அல்ஜசீரா செய்தி வெளியிட்டிருந்தது. சீனாவைத் தளமாகக் கொண்ட நிதித்துறை சார்ந்த செய்திகளை வெளியிடும் 'கௌசின்னை ஆதாரம் காட்டி இச்செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

தற்போது ஹொங்கொங்கில் உள்ள அந்நிறுவனம், இரண்டு வார தேடுதலின் பின்னர் அவர் இருக்குமிடம் தெரிய வந்திருப்பதாகவும் சீன அதிகாரிகளின் விசாரணைகளுக்கு ஃபாவோ ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் தகவல் தெரிவித்திருந்தாலும் அவர் எங்கே வைக்கப்பட்டுள்ளார் அவர் மீதான குற்றச்சாட்டுகள் யாவை என்பது போன்ற எந்த விவரத்தையும் அந் நிறுவனம் வெளியிடவில்லை.

கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியில் சீன வர்த்தக மற்றும் தொழில்துறை நிறுவன அதிபர்கள் அவ்வப்போது காணாமல் போவதும் சிறையில் அடைக்கப்படுவதும் சாதாரணம் எனத் தெரிவித்திருக்கும் ஒரு ஹொங்கொங் ஊடகவியலாளர்,

சீன ஜனாதிபதி மற்றும் கம்யூனிச கட்சிக்கு விரோதமான செயற்பாட்டில் ஈடுபடுவதாக சந்தேகிக்கப்படுவோர் மீது விசாரணை நடத்தி தண்டனை வழங்கப்படுவது சாதாரணம் என இவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# ஒரே நாளில் வந்த இந்து, இஸ்லாமிய விசேட தினங்கள்

## காஷ்மீரில் அமைதியாக அனுசரிப்பு

முகம்மது நபி (ஸல்) அவர்கள் சுவர்க்கம் சென்று வந்ததைக் குறிக்கும் ஷாப் ஈ மிராஜ் தினமும் சிவராத்திரியும் இம்முறை ஒரே தினத்தில் கொண்டாடப்பட்டதையும், இரு சமூகத்தவரும் இவற்றை மகிழ்ச்சியுடன் கொண்டாடி முகமன் கூறிக் கொண்டதையும் குறிப்பிட்டு இரு தரப்பு சமயத் தலைவர்கள் மத ஒற்றுமைக்கு இத்தினம் உதாரணமாகத் திகழ்ந்ததாக மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

மத வெறுப்புணர்வுகள் மிகுதியாகக் காணப்படக் கூடிய இடமாக காஷ்மீர் பள்ளத்தாக்கு குறிப்பிடப்படுவது வழக்கம் என்று இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். ஷாப் மிராஜூம் சிவராத்திரியும் ஒரே தினத்தில் வந்தபோது இங்கு வாழும் இரு மதத்தவர்களும் தத்தமது விசேட தினங்களை பக்திபூர்வமாக அனுசரித்து இரு மதத்தவர்களும் மதம் சார்ந்த வாழ்த்துகளை தமக்கிடையே தெரிவித்துக் கொண்டதாகவும் செய்து வெளியிட்டுள்ள ஊடகங்கள், சூழல் மற்றும் காலம் ஏற்படுத்தியிருக்கும் சிந்தனை மாற்றங்களை இது பிரதிபலித்துள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளன.

மத வெறுப்புணர்வுகளுக்கு பதிலாக வேற்றுமைக்கு இடையில் ஒற்றுமை, மனிதர் மீதான பாசம் போன்ற பண்புகளை காஷ்மீர் பள்ளத்தாக்கில் காண முடிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சாக்கே மது வடிசாலை பூட்டானில் அமைக்க இணக்கம்

## ஜப்பானிய – பூட்டானிய அதிகாரிகள் உடன்பாடு

ஜப்பானின் தேசிய மதுபானமாக விளங்கும் அரிசியில் இருந்து வடிக்கப்படும் 'சாக்கி' என்ற மதுவை பூட்டானில் தயாரிக்கவும், இது தொடர்பாக ஒரு வடிசாலையை அமைக்கவும் அதிகாரிகள் மட்ட பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்டுள்ளது.இந்தியாவில் உள்ள ஜப்பானிய தூதரகம் திம்புவில் ஜப்பான் பூட்டான் உணவு கலாசார பரிமாற்றம் என்ற பெயரில் ஒரு வர்த்தக மாநாட்டை நடத்தியது. பூட்டான் அரசு அதிகாரிகள், இரு நாடுகளைச் சேர்ந்த உணவு, ஹோட்டல் துறை சார்ந்த நிறுவனங்கள் இதில் கலந்து கொண்டனர். மாநாட்டில் கலந்து கொண்ட துசுஷிடா சாக்கே நிறுவன பிரதிநிதிகளுக்கும் பூட்டானிய அதிகாரிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையில், பூட்டான் அரிசியை பயன்படுத்தி சாக்கி தயாரிக்க உடன்பாடு எட்டப்பட்டதாக 'பூட்டான் லைவ்' என்ற செய்திச் சேவை தகவல் வெளியிட்டிருக்கிறது.

# செலிங்கோ ஜெனரல் காப்புறுதி, SLT மொபிடல் கைகோர்ப்பு

செலிங்கோ ஜெனரல் காப்புறுதி மற்றும் SLT மொபிடெல் இணைந்து SLT மொபிடல் வாடிக்கையாளர்களுக்கென தனித்துவமான காப்புறுதி நன்மைகள் அடங்கிய திட்டம் குறித்தான அறிவிப்பை அண்மையில் வெளியிட்டன.

குறித்த 'செலிங்கோ – 'SLT மொபிடெல் அனன்தய' என்ற புதிய காப்புறுதி திட்டத்தின் கீழ் SLT மொபிடல் வாடிக்கையாளர்களுக்கு தீவிர நோய்களுக்கான 500,000 ரூபா வரையான காப்புறுதி உரிமம் கிடைக்கப்பெறும். அத்துடன் விபத்தினால் ஏற்படும் மரணம் மற்றும் வாழ்நாள் அங்கவீனத்திற்கென 1,000,000 ரூபா வரையான காப்புறுதி கிடைக்கப்பெறும்.

SLT நிலையான இணைப்பு பாவனையாளர்கள் மற்றும் மொபிடல் பாவனையாளர்களுக்கு இந்த நன்மைகள் கிடைக்கப்பெறுவதுடன் அவர்களது மாதாந்த கட்டணப்பட்டியல் பெறுமதியின் ஐந்து மடங்குக்கு இணைவான வருடாந்த காப்பீட்டை பெறுவார்கள். உதாரணமாக,SLT வாடிக்கையாளர் ஒருவர் 2023 ஜனவரில் மாதாந்த கட்டணமாக 5,00 ரூபாவை செலுத்துவாராயின், அவர் 25,000 ரூபா பெறுமதியான காப்பீட்டிற்கு உரித்துப் பெறுவார்.

பெப்ரவரி மாதத்தில் 6,000 ரூபாவை செலுத்துவாராயின் அவர் 30,000 ரூபா பெறுமதியான காப்பீட்டிற்கு உரித்துப்பெறுவார். பெப்ரவரி மாத இறுதியில் அவரின் கட்டணம் மொத்தமாக 55,000 ரூபாவாக அதிகரிப்பின் அதேபோன்று கட்டணம் செலுத்துப்படும்.

முறைக்கமைய இந்த காப்பீட்டின் பெறுமதியும் அதிகரிக்கும். ஒவ்வொரு கட்டணப்பட்டியலை செலுத்தும் போதும் காப்பீடு வழங்கப்படுவதுடன் ஒரு வருடத்திற்கான காப்புறுதி கொள்கை பின்பற்றப்படுவதுடன் அதன் பெறுமதி ஒரு மில்லியனை எட்டும் வரை காப்பீடு நீடிக்கும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன்கிழமை 2023.03.01
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

| சீட்டிழுப்பு | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5046 | ரூ. 42,395,066.00 | D | 0 2 8 5 4 2 |
| தன நிதானய | 1076 | ரூ. 85,867,606.80 | H | 35 44 51 76 |
| ராசி சுப பலன் (Handahana) | 355 | ரூ. 2,689,982.40 | வெற்றி இலக்கினம்: மேஷம்; விசேட இலக்கினம்: மேஷம் | 13 31 45 58 |
| கொவிசெத (Govisetha) | 3288 | ரூ. 83,050,970.80 | T | 06 27 42 69 |
| மெகா பவர் | 1394 | அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 304,087,706.00; அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 | W; சுப்பர் இலக்கம் 05 | 11 51 62 70 |
| ஜாதிக சம்பத | 1501 | ரூ. 10,124,614.00 | வெற்றி இலக்கினம்: மிதுனம் | 2 0 9 1 8 9 |

# வெற்றிப் படிகளை நோக்கி தித்தவெல்கால அல்-ஹிக்மா முஸ்லிம் மகா வித்தியாலயம்

## 04 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் மாணவர்களின் பாவனைக்காக கையளிப்பு









வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் இப்பாகமுவ கல்வி வலயத்திற்குள் கனேவத்த கோட்டா கல்வி காரியாலயத்திற்கு உட்பட்ட இயற்கை எழில் நிறைந்த சூழலில் அமைந்துள்ள தித்தவெல்கால அல் ஹிக்மா முஸ்லிம் மகா வித்தியாலயம் எனும் நாமத்தை உடைய எமது பாடசாலைக்கு 2023 மார்ச் 4ஆம் திகதி வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பதிய வேண்டிய ஒரு திருநாளாகும்.

எமது பாடசாலை வரலாற்றில் நீண்ட கால கனவாகவும் தேவையாகவும் இருந்த இரண்டு மாடி கட்டடமானது மாணவர்களின் பாவனைக்காக கையளிக்கின்ற வைபவ ரீதியான இந்நாளில் அல்ஹிக்மா முஸ்லிம் மகா வித்தியாலயம் கடந்து வந்த பாதை பற்றி சில வரிகளை எழுதுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

1957 பெப்ரவரி 8ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட எமது பாடசாலையானது பல தடைகளையும் தாண்டி இன்று உயர்ந்து நிற்கின்றது என்றால் அவ்வளர்ச்சியின் பின்னால் பல நல்லுள்ளங்களின் கடின உழைப்பு உள்ளது என்பதை மறுத்தல் இயலாது. தித்தவெல்கால கிராமத்தில் பிறந்து வளர்ந்து ஆரம்பக் கல்வியை இப் பாடசாலையிலே தொடர்ந்த அல்ஹிக்மாவின் பழைய மாணவன் என்று கூறிக் கொள்வதில் அதிபர் மஸாஹிம் பெருமிதம் அடைகின்றார்.

1989 ஆம் ஆண்டு தொடக்கம் இப் பாடசாலையின் ஆசிரியராக பயணத்தை தொடர்ந்த அவர் மீண்டும் 2020 ஆம் ஆண்டு அதிபராக கடமையை ஏற்று வந்தபோது பாடசாலைக்காக எண்ணற்ற பொறுப்புகளையும் பாடசாலையை முன்னேற்றுவதற்கான பல செயற்பாடுகளுடன் கூடிய கனவுகளையும் சுமந்தவராகவே தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

நாட்டில் நிலவிய சீரற்ற நிலைமைகளினால் அதிபர் பதவிக் காலத்தை முழுமையாக பாடசாலைக்காக அர்ப்பணித்துக் கொள்வதில் சவாலை எதிர்கொண்டாலும் இன்று வரை அதிபர் மஸாஹிம், கிடைத்திருக்கும் இவ்வரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பாடசாலையை ஒரு பயனுறுதி மிக்க ஆக்கபூர்வமான நிறுவனமாக மாற்றுவதில் முழு முயற்சியுடன் செயற்பட்டு வருகின்றார். இவருடன் இணைந்து களத்தில் பயணிக்கும் பிரதி அதிபர் உள்ளிட்ட ஆசிரிய குழாமிற்கும் கல்வி சாரா ஊழியர்களுக்கும் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களுக்கும் பெற்றார்கள் மற்றும் அனைத்து நலன் விரும்பிகளுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

இவர் அதிபராக கடமை ஏற்ற நாள் தொடக்கம் இன்று வரை புலமை பரிசில் பரீட்சை, க.பொ.த.சாதாரண தர பரீட்சை மற்றும் க.பொ.த உயர்தர பரீட்சைகளில் சிறந்த பெறுபேற்றை மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் பொருட்டு தேவையான அனைத்து வளங்களையும் பெற்றுக்கொடுத்து வருகின்றோம். சிறந்த பெறுபேறுகளை புலமைப் பரிசில் பரீட்சை, கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சை என்பவற்றில் மாணவர்கள் அடைந்துள்ளதுடன் இவ்வருடம் கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சைக்கு கலைப் பிரிவில் எமது மாணவர்கள் தோற்றி உள்ளனர். மாணவர்கள் சிறந்த பெறுபேற்றை பெற்று பல்கலைக்கழகம் நுழைவர் என பாடசாலை சமூகம் எதிர்பார்க்கின்றது. பாடசாலைக்கான பௌதீக வளங்களை உரியவாறு பெற்று அதனை வினைத்திறனாக பயன்படுத்தல், ஒழுங்கமைக்கப்பட்ட நிர்வாக கட்டமைப்பு, தலைமைத்துவம், மனிதவள முகாமைத்துவம், ஒத்துழைப்பான பாடசாலை சமூகம் போன்றவற்றை கட்டி எழுப்பி சிறந்ததொரு முன்மாதிரியான பாடசாலையை உருவாக்க தியாகத்துடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றி வருகின்றேன். மேலும் எமது ஊர் மாணாக்களின் எதிர்காலம் சிறப்பானதாக அமைய வேண்டும் என்னும் எண்ணத்தில் கல்வி மாத்திரமன்றி கலை, கலாசாரம், ஆன்மீகம், பண்பாடு, ஆளுமை என சகல துறைகளுக்குள்ளும் எமது மாணவர் சமூகம் மேம்பட வேண்டி எம்மால் பல செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதுவரை எமது பாடசாலையின் வகுப்புகளுக்கான இடத் தேவையை பூர்த்தி செய்து தந்த சகலரையும் அன்புடன் நினைவு கூறுவதோடு கடல் தாண்டி எம் பாடசாலைக்காக பெறுமதியான கட்டட தொகுதியை அன்பளிப்பு செய்த மற்றும் அதனை பெற்றுத்தர பங்காற்றிய சகலரையும் மிகவும் நன்றியுடன் நினைவு கூறுகிறோம்.



அதிபர் அஷ்ஷெய்க்
எஸ்.எம்.எஸ். மஸாஹிம்
(நளீமி)

### அல் ஹிக்மாவின் வரலாற்றுப் பக்கத்திலிருந்து சில வரிகள்

தித்தவெல்கால கிராமத்தில் உள்ள பிள்ளைகள் கல்வி கற்பதற்காக நாம்பிரித்தவெவ மற்றும் ஹிரிபிடிய கிராம பாடசாலைகளுக்கு நடந்தே சென்று வந்துள்ளனர். இப் பாடசாலைக்கு செல்லும் பாதையானது கரடுமுரடானதாகவும் பற்றைக் காடுகளைக் கொண்டதாகவும் காணப்பட்டமையால் மாணவர்கள் பாரிய இடர்களை எதிர்கொண்டதுடன் மாணவர்கள் பாடசாலை செல்லும் வீதமும் குறைவடையலாயிற்று.

எமது ஊரின் கல்வி வளர்ச்சிக்கு இவ்விடயம் ஒரு தடையாக அமைந்து விடக்கூடாது எனும் எண்ணத்துடன் ஊரிலுள்ள சில நல்லுள்ளங்கள் இணைந்து எமது ஊருக்கென்று தனி பாடசாலை ஒன்றினை உருவாக்கும் முயற்சியில் களமிறங்கினர். இவர்களுள் மர்ஹூம் பக்கீர் பிச்சை முஹம்மது அபூபக்கர், மர்ஹூம் S.H. செய்னுலாப்தீன், மர்ஹூம் ஜுனைதீன், மர்ஹூம் N.M.முஹம்மது இஸ்மாயீல், மர்ஹூம் M.L.M. ஸலாஹுதீன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

பாடசாலைக்கான முதல் கட்டடத்தை கட்டும் பணியானது ஆரம்பிக்கப்பட்டது. ''கபுஹேன'' என அழைக்கப்படும் தற்போதைய பாடசாலைக் காணியில் கட்டப்பட்ட இக்கட்டடமானது ஓலையினால் வேயப்பட்டு இருந்ததுடன் இதனை கட்டி முடிக்க நீண்ட காலமும் கடும் உழைப்பும் தேவைப்பட்டது. இக் கட்டட நிர்மாணத்திற்கான பணிகள் அதிகாலை சுபஹ் தொழுகையை தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்டு நள்ளிரவு 12 மணி வரை தொடர்ந்துள்ளது. அன்று இந்நிர்மாணப் பணிக்கான சம்பளமாக ரூபாய் 25 சதம் வழங்கப்பட்டுள்ளது. எம் சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட இப்பணியானது எமது ஊரின் கல்வி வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்லாகும்.

இவ்வாறு ஊராரின் கடின உழைப்பினால் உருவாக்கப்பட்ட இக்கட்டடமானது ''தித்தவெல்கால அரசினர் முஸ்லிம் பாடசாலை'' என்று நாமத்துடன் 1957 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் நாள் அன்று முஸ்லிம் ஆண் மாணவர்கள் 23 பேருடனும் முஸ்லிம் பெண் மாணவிகள் 23 பேருடனும் ஆரம்பிக்கப்பட்டது. முதல் மாணவியாக சித்தி அஸீஸா உம்மா பாடசாலையில் இணைத்துக் கொள்ளப்பட்டார். இக்கலாசாலையின் முதல் தலைமை ஆசிரியராக (அதிபர்) S.H.சம்சுதீன் அவர்கள் இத்தினத்திலேயே தனது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார். கிராம வரலாற்றில் அன்றைய தினமானது கல்வி எனும் பாதைக்கு அடித்தளமிட்ட ஒரு திருநாளாகும்.

இதனை அடுத்து பாடசாலையின் முதல் ஆசிரியராக 1957ஆம் ஆண்டு மே 24ஆம் திகதியன்று எம்.எஸ்.சாகுல் ஹமீத் சிங்கள உதவி ஆசிரியராக நியமனம் பெற்று எமது ஊருக்கு வந்தார்.

மாணாக்கரின் அறிவை மேம்படுத்த கட்டப்பட்ட பாடசாலை எனும் அமைப்பானது தண்ணீர், மலசலகூட வசதி என எவ்வித அடிப்படை வசதியும் இன்றியே நீண்ட காலம் இயங்கியது. மாணவர்கள் தண்ணீர் எடுப்பதற்காக இன்றைய பள்ளிக் கிணற்றிற்கும் மஹயாய (மெண்டிஸ் வத்த) கிணற்றிற்கும் நடந்து சென்று வந்துள்ளனர்.

1978 ஆம் ஆண்டு நவம்பர் 23ஆம் திகதி மாலை இலங்கையில் ஏற்பட்ட கடும் புயல் மழை காரணமாக பாடசாலையின் பழைய கட்டடம் தரைமட்டமானது. இது எமது பாடசாலை வரலாற்றில் பாரியதொரு இழப்பாகும்.1978 டிசம்பர் 4ஆம் திகதியன்று '80 × 20' அளவு கொண்ட ஓலை கூரையுடன் கூடிய கட்டடமொன்றை ஊராரினதும் பாடசாலை சமூகத்தினதும் உழைப்புடனும் அன்றைய உணவு கூட்டுறவு அமைச்சர் S.B.ஹேரத்தின் உதவியுடனும் கட்டி முடிக்க முடிந்தது. இவ்வாறு தொடங்கி வைக்கப்பட்ட எமது பாடசாலையானது பல சவால்களையும் தடைகளையும் உடைத்தெறிந்து காலத்துடன் இணைந்தவாறு அதன் பணியையும் செவ்வனே நிறைவேற்றி வந்துள்ளது. கல்வி மாத்திரமன்றி ஏனைய பண்பாடு, கலை மற்றும் கலாசார ரீதியிலான செயற்பாடுகளிலும் மாணாக்கரை செதுக்குவதில் எம் பாடசாலையின் பங்களிப்பு அளப்பரியதாகும். பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து பாடசாலையின் வளர்ச்சிக்காக அயராது உழைத்த முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரினதும் ஒத்துழைப்புடன் இன்று அல்ஹிக்மா முஸ்லிம் மகா வித்தியாலயம் எனும் நாமத்துடன் விருட்சமாக எழுந்து நிற்கின்றது. பாடசாலை தற்போதைய அதிபராக A.S.M.மஸாஹிம் அவர்கள் 2020 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை கடமையாற்றி வருவதுடன் அவரது சேவை காலத்தில் அல்ஹிக்மா முஸ்லிம் மகா வித்தியாலயமானது கல்வி, கலை, கலாசாரம் மற்றும் பண்பாடு என அனைத்து துறைகளிலும் முன்னேற்றகரமான பாதையில் சென்று கொண்டிருக்கின்றது என்பதே குறிப்பிடத்தக்க விடயமாகும்.



தயாரிப்பு
எம். சதுர்டீன் (jp)
மாத்தளை சுழற்சி நிருபர்

## அல்-ஹிமா இஸ்லாமிய சேவை அமைப்பின் வாழ்த்துச் செய்தி



M.A.A.Noorulla
(Naleemi)B.A
HON. SECRETARY
AL HIMA ISLAMIC SERVICES
– SRI LANKA

அல்ஹிமா இஸ்லாமிய சேவை அமைப்பின் பங்களிப்பாக இன்று 04/03/2023 குவைத் நாட்டைச் சேர்ந்த பாதிமா அப்துல் வஹ்ஹாப் அல் ரிபாயி அவர்களது பெயரில், குருநாகல் மாவட்டத்தில் தித்தவெல்கால என்ற கிராமத்தில் அமைந்துள்ள அல் ஹிக்மா முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு 04 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் மாணவர்களின் பாவனைக்காக கையளிக்கப்படுகின்றது.

முஸ்லிம்கள் இந்த நாட்டில் ஆயிரம் வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்டவர்களாவர்.

இலங்கையில் ஏறத்தாள 900 ற்கு மேற்பட்ட பாடசாலைகள் முஸ்லிம் கிராமங்களில் வியாபித்துக் காணப்படுகின்றன. சில பாடசாலைகள் மூடப்படக் கூடிய அபாயத்திலும் இருக்கின்றன. முஸ்லிம் சமூகம் கல்வித்துறையில் மிகவும் பின் தங்கியிருப்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

குறிப்பாக வகுப்பறைகள் பற்றாக்குறை ஒரு பிரதான அம்சமாகும். நூல் நிலையம், விஞ்ஞான ஆய்வு கூடம், துறை சார்ந்த வகுப்பறைகள், தங்குமிட வசதிகள் போன்ற வளங்கள் முஸ்லிம் பாடசாலைகளில் மிகவும் அரிதாகும்.

2002 ஆம் ஆண்டு, கள் எலியவில் ஸ்தாபிக்கப்பட்ட எமது நிறுவனம் முஸ்லிம் சமூகத்தின் கல்வித் தரத்தை உயர்த்துவதை பிரதான நோக்காகக் கொண்டு செயற்படுகிறது.

இந்த திட்டத்திற்கான நிதியை குவைட் நாட்டைச் சேர்ந்த “ISLAMIC CARE SOCIETY“ ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டது. இலங்கையில் இயங்கும் குவைட் நாட்டிற்கான தூதுவர் H.E.MR.KHALAF M.M.BUDHAIR அவர்கள் இந்நிதியை பெற்றுத் தருவதில் பெறும் பங்காற்றினார். இத்திட்டம் ஆரம்பித்தது தொடக்கம் இதனை முழுமையாக நிறைவு பெறச் செய்வதற்கு முழுமையாக ஈடுபட்டு ஒத்துழைத்த பாடசாலை அதிபர் உட்பட அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கும் கஹட்டோவிட்டயைச் சேர்ந்த ஜனாப் அமீன், சகோதரர் பஹத் ஆகியோருக்கும் என் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.






# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

**I. கீழே உள்ள பந்தியை வாசித்து கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்குக.**

முற்றி விளைந்த நெற்கதிர்கள் மஞ்சள் துணி
விரித்தாற் போல் காட்சியளித்தது. அறுவடைக்காகச்
செல்லும் விவசாயிகள் அரிவாளுடன்
விரைந்து வேலைக்கு சென்றனர்.
வயல்களில் பறவைகளின் கீச்கீச் ஒலி
மெல்லிய இராகம் போல் கேட்டது.
இக்காட்சி மனதை மிகவும் கவர்ந்திழுத்தது.

1. இக்காட்சி ஒரு நாளின் எந்த வேளையில் இடம்பெறுகிறது?

   ………………………………………………………………………………………

2. இப்பந்தியிலுள்ள உவமைத்தொடர் ஒன்றினை குறிப்பிடுக.

   ………………………………………………………………………………………

3. இப்பந்தியிலுள்ள ஒலிக்குறிப்பு சொல் எது?

   ………………………………………………………………………………………

4. இதிலுள்ள பண்புப் பெயர் ஒன்றினை குறிப்பிடுக.

   ………………………………………………………………………………………

5. இங்குள்ள இடப்பெயர் ஒன்றினைத் தருக.

   ………………………………………………………………………………………

6. ஒத்த கருத்து தருக.

   i. வயல் - ……………………………  ii. பறவைகள் - ………………………...

**II. வெற்றிடத்திற்கு பொருத்தமான வினைச்சொல்லை எழுதுக.**

7. நாங்கள் தினமும் காலையில் உணவு ……………….. (உண்டோம் / உண்போம்)
8. தோட்டத்தில் பூக்கள் மலர்ந்து மணம் ……………………. (பரப்பின / பரப்பியது)
9. தம்பி பந்தை ஓடிச்சென்று …………………… (பிடித்தான் / பிடித்தாள்)
10. வயலில் நெல்முற்றி …………………….. (விளைந்தது / விளைந்தன)

**III.**

11. அழுத பிள்ளை பால் குடிக்கும் என்பதற்குப் பொருத்தமான வேறொரு பழமொழியைத் தெரிவு செய்து எழுதுக.

    ………………………………………………………………………………………

12. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. இப்பழமொழியின் கருத்தினைக் கூறுக.

    ………………………………………………………………………………………

13. விசாரணை முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது ………………………………

**IV. தரப்பட்ட சொற்களை கீழே கொடுக்கப்பட்ட கூற்றுக்கமைய வகைப்படுத்துக.**

(நீங்கள், வந்தேன், அவர்கள், பூ, விளையாடின)

14. தன்மை, ஒருமை, வினைச்சொல் - …………………………………………………
15. உயர்திணை, பன்மை, பெயர்ச்சொல் - ……………………………………………
16. அஃறிணை, பன்மை, பலவின்பால், வினைச்சொல் - ……………………………..
17. அஃறிணை, ஒருமை, பெயர்ச்சொல் - ………………………………………..….
18. உயர்திணை, முன்னிலை, பெயர்ச்சொல் - ……………………………………....
19. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.

    i. This is my book ………………………………………………………..……

    ii. I am drinking water - …………………………………………………...

20. கொடுக்கப்பட்டுள்ள படங்களின் சிங்களச் சொற்களை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.





i. ………………………………  ii. ……………………………….

**V.**


21 இக் கூட்டிலுள்ள எண்களை அவதானித்து கீழே கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

| | | |
|---|---|---|
| 64 | 37 | 28 |
| 48 | 31 | 62 |
| 89 | 42 | 58 |
| 16 | 78 | 61 |


i. இங்கு ஒரு தடவை மட்டும் பாவிக்கப்பட்டுள்ள இலக்கங்கள் எவை? …………….

ii. அதிக தடவை பாவிக்கப்பட்டுள்ள இலக்கம் எது? ………………………..………

iii. இலக்கம் 3 பாவிக்கப்பட்டுள்ள தடவைகள் எத்தனை? ……………………..….


22.  இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதியை பின்னமாக தருக.

    ……………………….

23. 

    = 55


    = ……………………..

24. 

    i. இவ்வுருவின் பெயர் என்ன? ……………………………....

    ii. இதிலுள்ள முகம் எத்தனை? ………………………………

25. இவ்வுருவிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?

    ……………………………………..


26. 250g பருப்பின் விலை ரூபாய் 220.00 எனில் 1kg 250g பருப்பின் விலையென்ன?

    ………………………………………………………………………………………

27. 3333 இதனை எழுத்தில் எழுதினால்

    ………………………………………………………………………………………

28. 60, 68, 64, 72, 68, …………, ………… எண்கோலத்தை பூரணப்படுத்துக.

29. 

    மரத்தை அடைய அணில் எத்தனை தடவை வடக்கு நோக்கி திரும்பியது?

    ………………………………………………………………………………..

**VI. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

30. இலவச பாடநூல்களைப் பாதுகாப்பது
    i. தேசியக் கடமைகளில் ஒன்று  ii. வகுப்பு கடமைகளில் ஒன்று
    iii. வீட்டுக் கடமைகளில் ஒன்று
31. கவ்வாத்து வெட்டப்படும் பயிர்களில் ஒன்று
    i. கத்தரி  ii. தக்காளி  iii. தேயிலை
32. பழங்களில் இருந்து கிடைக்கப்பெறும் சத்துக்களில் முக்கியமானது
    i. கல்சியம்  ii. விற்றமின்  iii. புரதம்
33. பறவையொன்று வானில் பறக்க உதவுவது
    i. கால்  ii. இறக்கை  iii. உடல்
34.  இவ்விலச்சினை குறிப்பது?
    i. கரப்பந்து  ii. ஒலிம்பிக்  iii. காற்பந்து
35. தானியங்களை வெயிலில் உலர வைப்பது ஏன்?
    i. அறுவடை செய்ய  ii. நோய்த் தொற்றுக்களை நீக்க
    iii. தானியங்களை நீண்ட நாள் பாதுகாக்க
36. கொழுகொம்பு என்பது
    i. கொடிகள் பற்றிப் படரும் தடி  ii. கொடித் தாவரங்கள்
    iii. ஒரு வகைப் பயிர்
37. பின்னவெல என்பது
    i. பறவைகள் சரணாலயம்  ii. யானைகள் சரணாலயம்
    iii. மலைகளிலொன்று
38. புற்று அமைப்பது
    i. கறையான்  ii. பாம்பு  iii. எலி
39. தாளம் எவ்வகையான கருவி
    i. நரம்புக்கருவி  ii. கஞ்சக்கருவி  iii. துளைக்கருவி
40. பொதி சுமக்கும் மிருகங்களில் ஒன்று
    i. கழுதை  ii. பசு  iii. ஆடு
41. நீர் மிகக் குறைவாகத் தேவைப்படும் தாவரம்
    i. கொஹில  ii. நாகதாளி  iii. தாமரை
42. சக்தியை தரும் உணவுகளில் ஒன்றல்லாதது
    i. பசளி  ii. பிட்டு  iii. சோறு
43. கிளைகளிலும் தண்டிலும் காய்கள் உண்டாகும் தாவரம்
    i. தென்னை  ii. பலா  iii. வாழை
44. வடமாகாணத்திலுள்ள மாவட்டங்களின் எண்ணிக்கையானது
    i. 3  ii. 4  iii. 5

(10 ஆம் பக்கம் பார்க்க)

09 ஆம் பக்கத் தொடர்

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

45. மின்குமிழை கண்டுபிடித்த பெருமைக்குரியவர்
i. தோமஸ் அல்வா எடிசன் ii. அலெக்சாண்டர் கிரகம்பெல்
iii. ஜோன் லொகி பெயர்ட்

46. வினாகிரி பெறப்படும் தாவரமானது
i. பனை ii. தென்னை iii. கரும்பு

47. மயங்கி விழுந்த ஒருவருக்கு செய்யக் கூடிய முதலுதவி அல்லாதது
i. குளிர்பானம் அருந்தக் கொடுத்தல் ii. இறுக்கமான ஆடைகளைத் தளர்த்தல்
iii. காற்றோட்டம் கிடைக்கச் செய்தல்

48. குழல்நேயப் பூச்சிக்கட்டுப்பாட்டுத் திரவம் அல்லாதது
i. வேப்பிலைச்சாறு ii. புகையிலை அவித்த நீர்
iii. யூரியா கரைத்த நீர்

49. ஈமெயில் என்பதன் தமிழ் வடிவம்
i. இணையம் ii. மின்னஞ்சல் iii. கணினி

50. பின்வருவனவற்றுள் தனி விளையாட்டாக அமைவது
i. கரப்பந்தாட்டம் ii. கிளித்தட்டு iii. நீளம்பாய்தல்

51. அல்பனா ஆக்கம் செய்யப் பயன்படுவது
i. பூக்கள் ii. இலைகள் iii. வித்துக்கள்

52. ஆரோக்கியமான வாழ்வுக்கு செய்யக்கூடியது
i. தியானம் ii. பொய் சொல்லுதல்
iii. இனிப்பு உணவு சாப்பிடுதல்

53. வயிற்றோட்ட நோயை ஏற்படுத்தும் நோய்க்காவி
i. எலி ii. நுளம்பு iii. வீட்டு ஈ

54. சுவாசித்தலுக்கும் எரிதலுக்கும் உதவும் வாயு
i. காபனீரொக்சைட்டு ii. ஒட்சிசன் iii. ஐதரசன்

55. தேனில் அமிழ்த்தி பாதுகாக்கும் உணவு
i. இறைச்சி ii. மீன் iii. மாம்பழம்

56. பொசன் பண்டிகை எம் மதத்தவர்களால் கொண்டாடப்படுகிறது
i. தமிழர்கள் ii. பௌத்தர்கள் iii. இஸ்லாமியர்கள்

57. கிரிக்கெட் விளையாட்டில் ஓர் அணியில் எத்தனை பேர் பங்குபற்றலாம்
i. 11 ii. 9 iii. 6

58. பாதையில் எப்போதும் நாம் எப்பக்கமாக பயணிக்க வேண்டும்
i. இடதுபுறம் ii. வலதுபுறம் iii. நடுவில்

59. நாம் காலை உணவாக கட்டாயமாக எடுக்க வேண்டியது
i. பான வகைகள் ii. தானியங்கள் iii. உடன் உணவுகள்

VII.
60. 'கடும் மழையின் பின் நாம் கட்டாயமாக கடைப்பிடிக்க வேண்டிய செயல்கள் எவை?' என்பதனை மூன்று வாக்கியங்களாக எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும். எழுவாய், பயனிலை, தொடர்பு சரியாக பேணப்பட வேண்டும்.

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

## கடந்த வார (24.02.2023) வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. 3 | 11. 2 | 21. 2 | 31. 2 |
| 2. 2 | 12. 3 | 22. 1 | 32. 3 |
| 3. 1 | 13. 3 | 23. 3 | 33. 1 |
| 4. 3 | 14. 1 | 24. 2 | 34. 2 |
| 5. 2 | 15. 3 | 25. 1 | 35. 1 |
| 6. 3 | 16. 2 | 26. 2 | 36. 1 |
| 7. 1 | 17. 1 | 27. 3 | 37. 3 |
| 8. 3 | 18. 1 | 28. 3 | 38. 1 |
| 9. 3 | 19. 2 | 29. 1 | 39. 2 |
| 10. 2 | 20. 2 | 30. 3 | 40. 3 |

# கிழக்கின் குரல்



## மட்டக்களப்பு இரவு ரயில் சிற்றுண்டிச்சாலையில் பாவனைக்குதவாத உணவுப் பண்டங்கள்

மட்டக்களப்பு குறூப் நிருபர்



மட்டக்களப்பு புகையிரத நிலையத்தில் கடுகதி பாடுமீன் புகையிரதம் தரித்துநின்ற வேளையில், அப்புகையிரதத்தின் சிற்றுண்டிச்சாலையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை (01) இரவு மேற்கொண்ட திடீர்ச் சோதனையின் போது, பாவனைக்கு உதவாத ஒருதொகை உணவுப் பொருட்களைக் கைப்பற்றியுள்ளனர்.

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கி நேற்றிரவு 8.15 மணிக்கு இந்தப் புகையிரதம் புறப்படவிருந்த நிலையிலேயே, மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி என். மாதவனின் பணிப்புரையின் பேரில் இந்தச் சோதனை மேற்கொள்ளப் பட்டது.

பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய இந்தச் சோதனையை மேற்கொண்டதாகவும் இதன்போது, பயணிகளுக்கு விற்பனை செய்வதற்கு தயாராக வைக்கப்பட்டிருந்த பணிஸ் உள்ளிட்ட உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டதாகவும், மட்டக்களப்பு மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகரான ரி.மிதுன்ராஜ் தெரிவித்தார்.

இந்த உணவுப் பொருட்களில் கரப்பான் பூச்சிகள், எறும்புகள் காணப்பட்ட நிலையிலேயே இந்த உணவுப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், அவர் தெரிவித்தார்.

இந்தச் சோதனையின் பின்னர் புகையிரதம் கொழும்பு நோக்கிப் புறப்பட்டதாகவும், அவர் தெரிவித்தார்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட உணவுப் பொருட்கள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் பாரப்படுத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, புகையிரத சிற்றுண்டிச் சாலை நடத்துநர் மீது எதிர்வரும் 9ஆம் திகதி வழக்கு விசாரணை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பொத்துவில் வைத்தியசாலைக்கு மருந்துப்பொருட்கள் கையளிப்பு



பாலமுனை விசேட நிருபர்

பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் அவசரத் தேவை கருதி ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருட்களையும் மருந்துப் பொருட்களையும் பொத்துவில் மத்திய கல்லூரியின் 2003ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரணதரப் பிரிவு மாணவர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை (01) வழங்கி வைத்தனர்.

மேற்படி வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர், வைத்தியர் எம்.ஐ.எம்.றகீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பொத்துவில் மத்திய கல்லூரியின் 2003ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரணதரப் பிரிவு மாணவர்கள் சார்பாகக் கலந்துகொண்ட வைத்தியர் எஸ்.எச்.எம். யசீர் இவற்றைக் கையளித்தார்.

இந்த உதவியை வழங்கிய மேற்படி பாடசாலையின் பழைய மாணவர்களுக்கு, பொத்துவில் ஆதார வைத்தியசாலை நிர்வாகத்தினர் நன்றி தெரிவித்துள்ளனர்.

இதன்போது, வைத்திய நிபுணர் கே.கமலதீபன், மருந்தாளர் எம்.ஏ.ஏ.றபாயுல், மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர் எம்.ஏ.நயீம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## இலுப்பைக்குளம் பிரதேசத்தில் இளைப்பாறும் கட்டடம் திறப்பு

முள்ளிப்பொத்தானை குறூப், திராய்க்கேணி தினகரன் நிருபர்கள்

திருகோணமலை மாவட்டத்தின் இலுப்பைக்குள பிரதேசத்தைச் சேர்ந்த சமுர்த்திப் பயனாளிகளின் நன்மை கருதி 4 இலட்சம் ரூபா நிதியில் நிர்மாணிக்கப்பட்ட இளைப்பாறும் கட்டடம் கடந்த செவ்வாய்க்கிழமை (28) திறந்து வைக்கப்பட்டது.

சமூக சேவையாளர் சரவணமுத்து யோகநாயகத்தின் நான்காவது ஆண்டு நிறைவையொட்டி, இக்கட்டடம் பொதுமக்களின் பாவனைக்குக் கையளிக்கப்பட்டது.

'காப்போம்' அமைப்பின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கு.பிரதீப்கரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர், வைத்தியக் கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, கட்டடத்தை திறந்து வைத்தார்.

இலுப்பைக்குளம் பிரதேசத்தில் சுமார் 2,000 சமுர்த்திப் பயனாளிகள் உள்ளனர்.

## புனித அல்குர்ஆனை மனனம் செய்த மாணவனுக்கு பரிசு



அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

புனித அல்குர்ஆனை மனனம் செய்வோரை ஊக்குவிக்கும் நிகழ்வு, அக்கரைப்பற்று தத்பீகுஷ் ஷரீஆ அரபுக் கல்லூரியில் அதிபர் மௌலவி அப்துல் அஸீஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விசேட அதிதியாக அக்கரைப்பற்று தத்பீகுஷ் ஷரீஆ அரபுக் கல்லூரியின் ஸ்தாபகர் அஷ்ஷேக் எம்.ஐ.அன்ஸார் கலந்துகொண்டதுடன், மாணவர் ஒருவருக்கு அவர் பரிசு வழங்கி வைத்தார்.

## தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி



கடந்த 2022ஆம் ஆண்டு நடைபெற்ற தரம்05 புலமைப்பரிசில் பரீட்சையில் அக்கரைப்பற்று ஆயிஷா முஸ்லிம் மகளிர் வித்தியாலய மாணவியான எம்.எச்.ஷபாக்கா 155 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளார்.

அவர் தனது ஆரம்பக் கல்வியைஆண்டு03 வரை ஆங்கில மொழியில் கற்றதுடன், இம்மாணவி, அக்கரைப்பற்று 02ஐச் சேர்ந்த முஹம்மது ஹிஷாம், பாத்திமா முஷர்றபா தம்பதியினரின் புதல்வியாவார்.

## ஊழலில் சம்பந்தப்பட்டோருக்கு உரிய தண்டனை வழங்கப்படும்

### கல்முனை மாநகர ஆணையாளர்

கல்முனை மத்திய தினகரன் நிருபர்



கல்முனை மாநகரசபையில் இடம்பெற்ற ஊழல் நடவடிக்கையில் சம்பந்தப்பட்டவர்களை உரிய முறையில் விசாரித்து, குற்றம் நிரூபிக்கப்படும் பட்சத்தில் அவர்களுக்கு உரிய தண்டனையைப் பெற்றுக்கொடுப்பதற்கு கல்முனை மாநகரசபை தயாராகவுள்ளதாக, கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தெரிவித்தார்.

இவ்விசாரணைக்காக உதவி ஆணையாளர், கணக்காளர், பொறியியலாளர், பிரதம இலிகிதர் ஆகியோர் அடங்கிய குழுவை நியமித்துள்ளதாகவும் சட்ட நடவடிக்கைக்கான விடயம் இடம்பெறுவதாகவும், அவர் தெரிவித்தார்.

கல்முனை மாநகர ஆணையாளரை, கல்முனையன்ஸ் போரம் அமைப்பின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் முபாரிஸ் எம்.ஹனிபா தலைமையிலான குழுவினரும் கல்முனைப் பிரதேச சமூகச் செயற்பாட்டாளர்களும் நேற்று முன்தினம் புதன்கிழமை (01) சந்தித்ததுடன், மகஜரையும் கையளித்தனர். இதன் போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர்,

"கல்முனை மாநகரசபையில் சுமார் 78 இலட்சம் ரூபா ஊழல் இடம்பெற்றுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதுடன், அப்பெறுமதி 1.9 கோடி ரூபா இருக்கலாமென அறிக்கை கிடைத்துள்ளது. அப்பெறுமதியானது கணினி தரவு உட்புகுத்துகையின் போது ஏற்பட்ட வலுத்தொகைச் செலவையும் சேர்ந்திருக்கலாம்" என்றார்.

"எப்படியாயினும், பாரிய நிதி மோசடி இடம்பெற்றுள்ளமை உறுதியாகியுள்ளதுடன், அது தொடர்பாக விசாரணை மேற்கொள்ள உயர்மட்ட அதிகாரிகளின் உதவியை நாடியுள்ளோம். இவ்விடயம் தொடர்பாக கணினி தொழில்நுட்ப வல்லுநர்கள் அடங்கிய குழுவை விசாரணைக்கு நியமிக்குமாறு உள்ளூராட்சித் திணைக்களத்திடம் கோரியுள்ளோம். அத்துடன், இது தொடர்பாக கல்முனை பொலிஸில் கடந்த 20ஆம் திகதியும் அம்பாறை விசேட குற்றத்தடுப்புப் பிரிவில் 25ஆம் திகதியும் முறைப்பாடு செய்துள்ளோம். சட்ட நடவடிக்கைக்குத் தேவையான சகல ஆவணங்களையும் பொலிஸார் கோரினால் வழங்குவதற்குத் தயாராகவுள்ளோம்" எனவும் அவர் தெரிவித்தார்.



# வலுவூட்டல் கற்பித்தலுக்கு பெரும் பங்காற்றிவரும்

## கௌரவ கலாநிதி யூ.எம்.பாசில்

ஹைரா தனியார் கூட்டு நிறுவனத்தின் தலைவர் கௌரவ கலாநிதி யூ. எம். பாசில் வலுவூட்டல் கற்பித்தலில் 2007 இல் இருந்து இற்றவரையிலும் நூற்றுக்கு மேற்பட்ட வலுவூட்டல் கருத்தரங்குகளை நடத்தியுள்ளார்.

இவர் இக்கல்வியை முதன் முதலில் மலேசியா சென்று கற்றுள்ளார். அத்தோடு அந்நாட்டு வர்த்தக அமைப்போடு சேர்ந்து செயற்பட்டு வருகிறார். 2006 இல் சிங்கப்பூரில் உள்ள உலக பிரபல்யமான வளவாளர் டொனி ரொபின்ஸ் அவர்களிடமும் கற்றுள்ளார்.

கண்டி, மடவளை பஸார் ஹைரா தனியார் கூட்டு நிறுவனத்தின் தலைவர் கௌரவக் கலாநிதி யூ. எம். பாசில் கோழிப் பண்ணை தொழில் பேட்டையில் சுமார் 30 வருடங்களாக தனியானதொரு இடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளார். பள்ளிப் பருவத்தில் இருந்து கோழி வளர்ப்பு மற்றும் தொழிற்துறையிலும் பண்ணையிலும் ஈடுபாடு காட்டத் தொடங்கியவர். மூன்று தசாப்த காலமாக கோழி வளர்ப்புத் துறையின் வளர்ச்சிக்கு உரம் சேர்த்த கலாநிதி பாசில் அக்காலத்திற்குள் நூற்றுக்கணக்கான வலுவூட்டல் பயிற்சிப் பட்டறைகளையும் பல சமூக அமைப்புக்களையும் ஆற்றி வரும் ஒருவர். இவை அனைத்தும் அவரது வினைத்திறன்மிக்க வர்த்தக நடவடிக்கைகளையும் அவர் கல்வி மீது கொண்டுள்ள ஆற்றலையும் புலப்படுத்தி நிற்கின்றன.

அகில இலங்கை சமூக கலாசார சுற்றுச் சூழல் அதிகார சபையினால் இம்முறை கௌரவ கலாநிதி பட்டம் வழங்கி வைக்கின்ற நிகழ்வில் கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் உப தலைவரும் கூட. இவர் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.

### உங்களுடைய ஆரம்ப வாழ்க்கை குறித்து...?

எனது தந்தை உவைஸ். தாய் குர்ரத்துல் அய்ன், ஆரம்பம் முதல் இடைக்காலம் வரையிலும் மடவளை மதீனா தேசிய பாடசாலையில் கல்வி கற்றேன். அதன் பின்பு திறந்த பல்கலைக்கழகத்தில் தகவல் தொடர்பு சாதன பொறியியல் துறையிலும் கற்கை நெறியைத் தொடர்ந்தேன்.

### கோழிப் பண்ணை தொழில்துறை ஆரம்பித்தல் தொடர்பில்?

வீட்டில் எனது சகோதரர் அவர்களினால் ஆரம்பித்து கைவிடப்பட்ட நிலையில் இருந்து கோழிப் பண்ணையை பகுதி நேரத் தொழிலாகச் செய்யலாம் என்ற ஒரு எண்ணம் தோன்றியது. ஆதலால் 1991 இல் ரூபா 6000 முதலீடு செய்து 100 கோழிக் குஞ்சுகளை வாங்கி வளர்க்க ஆரம்பித்தேன். அது காலம் செல்லச் செல்ல கோழிப்பண்ணைத் தொழில் அபிவிருத்தி கண்டு வந்தது. முதலில் மடவளையில் ஒரு கோழிக் கடையைத் திறந்தேன். அதன் பின்பு கண்டியிலும் ஒரு சில கடைகளைத் திறந்தேன். பின்பு மாத்தளையிலும் ஆரம்பித்தேன். இப்படிப் பரந்த மட்டத்தில் கிளைகளை திறந்து வியாபாரத்தை முன்னெடுத்தேன். தற்போது சுமார் 15 கடைகள் வரையிலும் செய்து கொண்டிருக்கின்றோம். இதில் கூடுதல் கவனம் செலுத்தியமையால் படிக்கக் கூடிய சூழல் படிப்படியாக குறைந்து வந்தது. என்றாலும் படிப்போடு உள்ள உறவை நான் கைவிடவில்லை.எனக்குத் தேடிப் படிக்க வேண்டும் என்ற அவா இருந்தது.

### உங்களுக்கு வலுவூட்டல் கல்வியை கற்றுக் கொள்வதற்கான ஆர்வம் எவ்வாறு ஏற்பட்டது ?

2001 இல் அமெரிக்காவில் இருந்து ஸ்டீபன் கவி என்பவர் இலங்கைக்கு வருகை தந்தார். இவர் மிகப் பிரபல்யமானவர். இவருடைய கற்பித்தலில் 'ஏழு பழக்க வழக்கப் பண்புகள்' என்ற விடயம் அதிகம் தாக்கம் செலுத்தின. அந்த நேரத்தில் 20,700 ரூபா கட்டணம் செலுத்திப் படித்தேன். அதற்கு எனது நண்பர் மன்சில் அழைத்துச் சென்றார்.அப்பொழுது நான் செலுத்திய கட்டணம் பெரிய தொகை. கற்பிப்பதன் ஊடாகக் கற்றுக் கொள்ளுங்கள். இது இஸ்லாத்தில் உள்ள விடயம்தான். இதைப் படித்த போது நிறையப் படிக்க வேண்டும் என்ற ஓர் ஆர்வம் ஏற்பட்டது.

இப்படி எங்கெல்லாம் விழிப்புணர்வூட்டல்கள் நடைபெறுகின்றதோ அங்கெல்லாம் சென்று படிப்பேன். இந்தியாவில் கலைஞர் தொலைக்காட்சியில் தோன்றி ஆலோசனை வழங்கும் சந்திரசேகரன் என்பவர் கொழும்புக்கு வந்தார். அவர் மக்களை விழிப்புணர்வூட்டும் விடயத்தில் வித்தியாசமான முறையில் கற்பித்தார். அவர் கற்பித்தல் முறை எனக்கு நன்றாகப் பிடித்து விட்டது. காணொளி, புகைப்படம் ஊடாக கற்பித்தார். அதன் பின்பு அவரை கண்டியில் புனித திரித்துவக் கல்லூரி, அக்குறணை அல் அஸ்ஹர், மடவளை மதீனா போன்ற பல பாடசாலைகளுக்கு அழைத்துச் சென்று இந்த விழிப்புணர்வூட்டல் நடவடிக்கைகளில் ஈடுபட்டேன். அவர் இடைக்கிடையே இலங்கை வருவார். 2008 இல் புனித திரித்துவக் கல்லூரியில் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கினை நடத்தினேன். நான் கற்றதை மற்றவர்களுக்குப் போதிக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. ஆதலால் இந்த விழிப்புணர்வூட்டல் துறையைத் தேர்ந்தெடுத்து எடுத்து நானும் செயற்பட ஆரம்பித்தேன். அத்துடன் வளவாளர்களுடன் கற்றுக் கொண்ட அறிவுரைகளை என்னுடைய தொழில் முயற்சிகளில் பயன்படுத்தினேன்.

### இதன் மூலம் நீங்கள் அடைந்த பயன்கள் யாவை?

இந்தியா டில்லியில் இருந்து வி. கே. கந்தல்வால் என்பவரை என்னுடைய கம்பனிக்கு ஆலோசகராக இணைத்துக் கொண்டேன். இக்கால கட்டத்தில் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை, சேம்பர் ஒவ் கொமஸ், ரொட்ரிக் கழகம், கோழி வளர்ப்பு பண்ணையாளர் சங்கம், கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கம் மற்றும் பி. என். ஐ போன்ற பல சிவில் சமூக அமைப்புக்களில் இணைந்து செயலாற்றத் தொடங்கினேன். இதற்குக் காரணம் வளவாளர்களுடைய ஆலோசனையே ஆகும். அங்கு என்ன நடைபெறுகிறது என்பதை அறிந்து கற்றுக் கொள்ளத்தான் குறித்த சிவில் சமூக அமைப்புக்களில் இணைந்தேன்.

சந்திரசேகரன் என்ற வளவாளருடைய விழிப்புணர்வூட்டல் நிகழ்வு இந்தியாவிலுள்ள கலைஞர் தொலைக்காட்சியில் தொடர்ந்து ஒளிபரப்பப்படும். அதனை நாங்கள் தொடர்ந்து தவறாமல் பார்த்து வந்தோம். அவர் 2009 இல் மரணம் எய்து விட்டார்.

நான் கற்றுக் கொண்டவற்றை முதன் முதலாக மாவனல்லையைச் சேர்ந்த ஒரு குழுவினருக்கு கற்பிக்க முனைந்தேன். பீகாஸ் கல்வி நிலையத்தின் பணிப்பாளர் மற்றும் அங்கு சமூகப் பணிபுரிகின்றவர்களை கெகிராவை பகுதியில் உள்ள ஒரு வாவிக்கு அருகாமையில் அழைத்துச் இந்த செயலமர்வை மேற்கொண்டேன். அதன் பின்பு மடவளை மதீனா தேசிய பாடசாலை, அக்குறணை அல் அஸ்ஹர் தேசிய பாடசாலை, மாத்தளை சாஹிரா தேசிய பாடசாலை, கண்டி புனித திரித்துவக் கல்லூரி, கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரி, மாவனல்லை பதுரிய்யா கல்லூரி, கண்டி விவேகானந்தாக் கல்லூரி, பேராதனை இந்துக் கல்லூரி, மாத்தளை சாஹிரா எனப் பல பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வூட்டல் கருத்தரங்குகளை நடத்தி வந்தேன்.

இவ்வாறு இந்த செயற்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் போது அரச நிறுவனங்களிலும் விழிப்புணர்வூட்டல் நிகழ்வுகளை நடத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. அதாவது கன்னொருவவையில் சிங்கள மொழியில் ஒரு விழிப்புணர்வூட்டல் கருத்தரங்கு ஒன்றை செய்தேன்.

அதில் சிங்கள வைத்தியர் அஜித் மற்றும் மற்றுமொரு பெண் வைத்திய அதிகாரி சுபஷினி ஆகிய இருவரும் சிங்கள மொழிகளில் இத்திட்டத்தை மேற்கொள்ள வழிகாட்டல்களைச் செய்தார்கள். அதன் பின்பு அரச நிறுவனங்களில் தொடர்ந்து வலுவூட்டல் கருத்தரங்குகளை நடத்தி வந்தேன்.

கண்டியைப் பொறுத்தவரையில் சிங்கள மொழியில் பேராசிரியர்கள் உட்பட குறிப்பிடத்தக்க பல வளவாளர்கள் பணியாற்றி வருகின்றார்கள். அவர்கள் அரச ஊழியர்கள் பாடசாலை மாணவ மாணவிகள், ஆசிரியர்கள் என வலுவூட்டல் செயலமர்வுகளை நடத்தி வருகிறார்கள். இருந்த போதிலும் ஒரு தடவை அரச நிறுவனம் ஒன்றில் ஏழு நாள் வதிவிட வலுவூட்டல் செயலமர்வு நடைபெற்றது. அதில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் உட்பட எட்டு வளவாளர்கள் கலந்து கொண்டனர். அதில் நான் நான்காவது நிலையில் உள்ள ஒருவனாகத் தெரிவு செய்யப்பட்டு பணியாற்றக் கிடைத்தமை எனது வலுவூட்டல் கற்பித்தலுக்கு எனக்கு கிடைத்த பெரும் அங்கீகாரமாகக் கருதுகின்றேன்.

### நீங்கள் எவ்வாறான இடங்களில் வலுவூட்டல் நிகழ்வுகளை நடத்தியுள்ளீர்கள்?

ரொட்ரிக் கழகத்தின் அனுசரணையுடன் வத்தேகம வைத்தியசாலை, பொலிஸ் நிலையங்கள், மாவனல்லை தொழில் நுட்ப கல்லூரி, தேசிய அபிவிருத்தி மிருக வளர்ப்பு சபை, நாவலப்பிட்டிய பிரதேச சபை, குண்டசாலை விவாசாயக் கல்லூரி என இவ்வாறு பல இடங்களிலும் சிங்கள மொழிகளிலும் வலுவூட்டல் செயலமர்வுகளை நடத்தி வருகின்றேன்.

ஒரு பரந்துபட்ட அடிப்படையில் கொழும்பு சாஹிராக் கல்லூரி, கொழும்பு ஹிக்மா கல்லூரி, கொழும்பு ஹிஜ்ரா மகா வித்தியாலயம், கிழக்கு மாகாணத்தில் கிண்ணியா, ஏறாவூர், பொத்துவில், கல்முனை போன்ற பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்குச் சென்று வலுவூட்டல் கருத்தரங்குகளை நடத்தியுள்ளேன். அரச நிறுவனங்கள், பாடசாலைகள், அரபுக் கல்லூரிகள் போன்ற இடங்களில் இந்த வலுவூட்டல் கருத்தரங்குகளை இலவசமாகவே செய்து வந்துள்ளேன். எனினும் தனியார் நிறுவனங்களில் மட்டும் பணம் அறவிடுகின்றேன்.

2007 இல் இருந்து இற்றை வரையிலும் நூற்றுக்கு மேற்பட்ட வலுவூட்டல் கருத்தரங்குகள் நடத்தியுள்ளேன். அதில் பேராதனை, தென்கிழக்குப் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாணவர் மாணவிகள், மாவனல்லை ஆயிஷா சித்தீக்கா மகளிர் அரபுக் கல்லூரி, உடத்தலவின்னை அரபுக் கல்லூரி, கண்டி இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயம், குருநாகல் முஸ்லிம் வர்த்தக சங்கம் எனப் பலவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

என்னுடைய துறை வியாபாரமாக இருந்தாலும் கல்வியோடு தொடர்புபட்டு இருப்பதனால் ஒரு வளவாளராகவும் இந்த பணியைச் செய்து கொண்டு வருகின்றேன்.

### இந்த வலுவூட்டல் கல்வியை வெளிநாடுகளிலும் கற்றுக் கொண்டீர்கள்?

ஆம். இக்கல்வியை முதன்முதலில் மலேசியா சென்று கற்றேன். அத்தோடு அந்நாட்டு வர்த்தக அமைப்போடு சேர்ந்து செயற்பட்டு வருகின்றேன். 2006 இல் சிங்கப்பூர் சென்று உலகத்திலே உள்ள பிரபல்யமான வளவாளர் டொனி ரொபின்ஸ் அவர்களிடமும் கற்றேன். அங்கு நடைபெற்ற பயிற்சியின் போது நெருப்புத் தணல் மேலால் நடக்க வைத்தார்.

அப்பொழுது அவரிடம் 12000 பேர் இந்தப் பயிற்சியைப் பெற்றனர். ஒருவர் தலா சிங்கப்பூர் டொலர் 1000 பணம் செலுத்தி இந்தப் பயிற்சியை மேற்கொண்டனர். சேம்பர் ஒவ் கொமர்சல் மூலம் அமெரிக்காவிலும் ஒரு பயிற்சி செயலமர்வில் கலந்து கொண்டேன். சிறு மத்திய தர வர்த்தகம் தொடர்பிலான 21 நாள் வதிவிட செயலமர்வு இது. இதன் மூலம் அதிகளவிலான அறிவு கிடைக்கப்பெற்றது. ஹொலன் நாட்டில் கோழிப் பண்ணை வளர்ப்புத் தொடர்பான செயலமர்வு நடைபெற்றது. இது அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வெளிநாட்டு விஜயம். இவை தவிர துருக்கி, தாய்லாந்து, வியட்நாம், சீனா, துபாய், சவூதி அரேபியா, இந்தோனேசியா போன்ற நாடுகளுக்கும் விஜயம் செய்துள்ளேன். இத்தகைய வெளிநாட்டுப் பயணங்கள் மூலமும் நிறைய அறிவுகளைப் பெற்றுக் கொண்டேன். இப்படிக் கற்றுக் கொண்டதை அடுத்தவர்களுக்கு வழங்கி வருகின்றேன்.

### மேலும் ஏதும் உண்டா?

இல்லை. இது போக இலக்கிய மாநாடுகளில் கலந்து கொண்டிருக்கின்றேன். மலேசியா மற்றும் இந்தியா காயல்பட்டிணம் போன்ற இடங்களில் நடைபெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாடுகளில் கலந்து கொண்டு சிறப்பித்திருக்கின்றேன். பிரான்ஸில் நடைபெற்ற உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் மாநாடு, ஜேர்மன், சுவிஸ் போன்ற நாடுகளுக்கு இலக்கியத்தில் மீது கொண்டுள்ள ஆர்வம் காரணமாக இந்நாடுகளுக்குச் செல்ல எனக்கு வாய்ப்பு கிட்டியமை குறிப்பிடத்தக்கது. எங்கு போனாலும் ஏதாவது ஒன்றைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் தான் என்னுடைய எந்தப் பயணமும் அமைந்திருக்கும்.

### சமூகப் பணிகள் தொடர்பில்?

இந்தப் பணியை நான் ஒரு சமூக சேவைப் பணியாகக் கருதியே செயற்பட்டு வருகின்றேன். மாணவர்கள் மத்தியில் உள்ள திறமைகளை தட்டி எழுப்புகின்ற பணியினையே ஒரு சமூக சேவையாகச் செய்து வருகின்றேன். ஒரு விதைக்குள் மரம் இருப்பது போன்று ஒரு மனிதனுக்குள் ஒரு திறமை இருக்கிறது. அதனைத் தட்டி எழுப்புவதுதான் என்னுடைய பணியாகும். நான் பணம் கொடுத்துப் படித்ததை பாடசாலைப் பிள்ளைகளுக்கு இலவசமாக கற்பிக்கின்றேன். இவையே எனது முழு நேர சமூகப் பணியாகும்.

இவை தவிர சமூகப் பணிகளில் ஈடுபடும் அமைப்புகளில் இணைந்து செயற்பட்டு வருகின்றேன். அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் உப தலைவராக இருக்கின்றேன். கண்டி ரொட்ரிக் கழகத்தின் அங்கத்தவர் இப்படி பல சிவில் சமூக அமைப்புக்களில் இருந்து வருகின்றேன். அவர்கள் திட்டமிட்டு ஆற்றுகின்ற ஒவ்வொரு சமூகப் பணிகளிலும் நானும் ஒரு பங்குதாரராக இருந்து இதுவரையிலும் நிறையப் சமூகப் பணிகள் புரிந்து வந்துள்ளேன்.













எனது சொந்த ஊரான மடவளையிலுள்ள பல அமைப்புக்களுடன் இணைந்து பங்காற்றியுள்ளேன் என்று சொல்ல முடியும்.

### நீங்கள் வர்த்தக ரீதியாகப் பெற்றுக் கொண்ட சாதனைகள்?

2002 இல் நியூட்டினா அமெரிக்கன் கம்பனியினால் விருது வழங்கப்பட்டது. 2004 இல் தொழில் முயற்சியாளர்களுக்கான விருது – வர்த்தக சம்மேளன அமைப்பினால் வழங்கப்பட்டது. 2008 இல் இரு நட்சத்திர சின்னங்களைக் கொண்ட மத்திய மாகாண கைத்தொழில் அமைச்சினால் விருது வழங்கப்பட்டது. 2009 இல் மூன்று நட்சத்திர சின்னங்களைக் கொண்ட மத்திய மாகாண கைத்தொழில் அமைச்சினால் விருது வழங்கப்பட்டது. 2010 இல் வர்த்தகம் மற்றும் சகவாழ்வுக்கான விருது இது ஏசியன் பவுண்டேசன் என்ற அமைப்பினால் வழங்கப்பட்டது.

2009 இல் தேசமான்ய, தேசகீர்த்தி விருது 2023 இல் தேசமான்ய இப்படி பல விருதுகளும் சான்றிதழ்களும் பட்டங்களும் கிடைக்கப்பெற்றன. இது என்னுடைய பணிகளுக்கு கிடைத்த அங்கீகாரம் ஆகும்.

### நீங்கள் எதிர்நோக்கிய சவால்கள்?

எங்களுடைய சந்தை வாய்ப்புக்கு ஏற்ப உற்பத்திகள் போதாது. 50 ஏக்கர் காணி நிலப்பரப்பில்; கோழிப் பண்ணை உற்பத்திக்கான தொழில் பேட்டை ஒன்றை நிர்மாணித்தோம். 2017 இல் தொழில் பேட்டையை நிர்மாணித்து முடிவடைந்த கால கட்டத்தில் 2018 இல் கண்டி திகன கலவரம் நடந்தது. 2019 இல் அதனைத் தொடர்ந்து உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் நடந்தது, 2020 இல் அதனைத் தொடர்ந்து கொரோனா தொற்று நோய் காரணமாக பலத்த சவால்களை எதிர்நோக்கியுள்ளோம். இன்று பொருளாதார நெருக்கடியான கால கட்டத்தில் பல சவால்களுக்கு மத்தியில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றோம்.

எனினும் இந்த சவால்கள் எல்லோருக்கும் உள்ளவையே. இன்று அவற்றிற்கு முகம் கொடுத்துக் கொண்டு செயற்பட்டுச் செல்லுகின்றோம். எறும்பு புற்றுக்களை எவ்வளவு உடைத்தாலும் அது திரும்பத் திரும்பக் கட்டுவது போன்று எங்களுடைய முயற்சியை மேற்கொண்டு வருகின்றோம். நாங்கள் நேர்மையாக முயற்சிகள் செய்தால் எந்த வகையிலாவது உயர் இடைத்தை அடைய முடியும். 2019க்கு முன் 290 பேர் வேலை செய்தார்கள். கோழிப் பண்ணையில் 300 பேர் வேலை செய்தார். மொத்தமாக 550 குடும்பத்தைச் சேர்ந்த நபர்கள் வேலை செய்தார்கள். தற்போது நேரடியாக 200 பேரும் கோழிப் பண்ணையில் சுமார் 200 பேரும் தொழில் புரிகின்றனர் சுமார் 400 குடும்பங்கள் வாழுகின்றனர். 1991 இல் இந்தத் தொழில் பேட்டையை ஆரம்பித்தேன். சுமார் 30 வருடங்கள் ஆகின்றன.

அவை மட்டுமல்ல எங்களுடைய கோழிப் பண்ணையில் கற்றுக் கொள்வதற்காக பேராதனை பல்கலைக்கழக மிருக வைத்தியப் பிரிவு, குண்டசாலை விவசாயக் கல்லூரி, கன்னொருவ விவசாய ஆராய்ச்சி நிலையங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் சமூகமளித்து ஆறு மாதம் பயிற்சியைப் பெற்றுக் கொள்வார்கள்.

இவ்வாறு 1000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிற்சியைப் பெற்று வெளியேறியுள்ளார்கள் என்கின்ற மனத் திருப்தி இருக்கிறது. தனியார் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் இந்தக் கம்பனியின் நிர்வாகம் தொடர்பாக கற்றுக் கொள்வதற்காகவும் வருகை தந்து பயிற்சியைப் பெற்று வெளியே செல்வார்கள். நாங்கள் கஷ்டம் பார்க்காமல் இந்தப் பணியைச் செய்து வருகின்றோம்.

நேர்காணல்
இக்பால் அலி

# விலைமனுக்கோரல்

**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு**

இலங்கை நிலஅளவைத் திணைக்களம்

**1998ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க காணி உரித்துப் பதிவுச் சட்டம் மற்றும் 2002ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க நிலஅளவைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் கடத்திரள் அளவைகள் மேற்கொண்டு வரைபடங்களையும், கிடைப்படங்களையும் தயாரித்தல் 2023**

**விலைமனு இலக்கம் - SD/I/2023**

01. இலங்கை நிலஅளவைத் திணைக்களம் சார்பாக நிலஅளவையாளர் நாயகத்தால் 1998 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க காணி உரித்துப் பதிவுச்சட்டம் மற்றும் 2002ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க நிலஅளவைச்சட்டம் ஆகியவற்றின் கீழ் அளவைகள் மேற்கொண்டு கடத்திரள் வரைபடங்களையும், கிடைப்படங்களையும் தயாரிப்பதற்கான விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்காக நாட்டின் சகல பதிவுசெய்யப்பட்ட உத்தரவு பெற்ற நிலஅளவையாளர்களுக்கும் அழைப்பு விடப்படுகிறது.

02. விலைமனுக் கோரல் தேசிய போட்டித்தன்மைமிக்க விலைமனுக்கோரும் நடைமுறைக்கமைய மேற்கொள்ளப்படும்.

03. ஆர்வம் காண்பிக்கும் விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரலின் கேள்விப்பத்திரம், கேள்வி நிபந்தனைகள் மற்றும், விபரக்கூற்றுகள், தொடர்புடைய ஏனைய ஆவணங்கள் முதலியவற்றை www.survey.gov.lk எனும் திணைக்கள இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.

04. கேள்விப்பத்திரம் அனுப்பும்போது இலங்கைத் தீவின் கீழ் 5ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள மாவட்டங்களுக்காக மீளச் செலுத்தப்படாத கட்டணமாக ரூ.500/= தொகையை நாட்டிலுள்ள எந்தவொரு மாவட்ட/மாகாண நிலஅளவை அலுவலகத்தில், தியதலாவை நிலஅளவை மற்றும் படமாக்கல் நிறுவனத்தில் அல்லது நிலஅளவையாளர் நாயகம் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதியை அதனுடன் இணைத்தனுப்புதல் வேண்டும். ஒரு விலைமனுதாரருக்கு ஆகக்கூடியது ஐந்து மாவட்டங்களுக்கு மாத்திரம் வெவ்வேறாக விலைமனுக்களைச் சமர்ப்பிக்க முடிவதுடன், அவற்றுக்காக வெவ்வேறு கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

05. கேள்விப்பத்திரம் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை, காலி, மாத்தறை, ஹம்பந்தோட்ட, குருநாகல், புத்தளம், கண்டி, மாத்தளை, நுவரெலியா, அனுராதபுரம், பொலன்னருவை, மொனாரகலை, யாழ்ப்பாணம் மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களுக்காக சமர்ப்பிக்கலாம் அத்துடன் அனுராதபுரம், பொலன்னருவை, நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களுக்கு அதிக முன்னுரிமை வழங்கப்படும்.

06. விலைமனுப் பிணைக்கட்டணம் ரூபா அறுபதாயிரம் (ரூ.60,000.00) ஆகும்.

07. உரிய படிவத்துக்கமைய முறைப்படி பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்களை 2023.03.24 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகப் பதிவஞ்சலில் அனுப்பவோ அல்லது பெறுகைகள் மற்றும் வழங்கல்கள் கிளையில் வைக்கப்பட்டுள்ள குறித்த கேள்விப்பத்திரப் பெட்டியில் போடவோ முடியும். கேள்விப்பத்திரங்கள் உள்ளடக்கப்பட்ட முத்திரையிடப்பட்ட கடித உறையின் இடது மேல் மூலையில் "............................மாவட்டத்தின் கடத்திரள் வரைபடங்கள் தயாரிப்பதற்கான விலைமனு" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் அத்தினமே மு.ப.10.05 க்குத் திறக்கப்படும்.

08. கேள்விப்பத்திரங்களை அனுப்பவேண்டிய முகவரி: சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகர், பெறுகைகள் மற்றும் வழங்கல்கள் கிளை, நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், இல: 150, கிருல வீதி, கொழும்பு 05.

09. தாமதமாய்க் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

**நிலஅளவையாளர் நாயகம்,**
**நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம்,**
**இல: 150,**
**பெர்னாட் சொயிசா வீதி (கிருல வீதி),**
**கொழும்பு 05.**

# வரையறுக்கப்பட்ட சீநோர் சிறுவனம்

# பதவி வெற்றிடங்கள்

**- அமைப்பின் தன்மை -**

1967ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனமானது, கடற்றொழில் அமைச்சின் கீழ் நிருவகிக்கப்படும் கடற்றொழில் சிறிய கப்பல்கள், உல்லாசக் கப்பல்கள் மற்றும் கடற்றொழில் கப்பல்களை உற்பத்தி செய்யும் ஒரே அரச கம்பனியாகும்.

வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளிற்காக தகைமையுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. நிதியியல் முகாமையாளர் (MM 1-1)**

- **அடிப்படைத் தகைமைகள்** : **வெளிவாரி விண்ணப்பதாரர்களிற்கான கல்வித் தகைமைகள்,** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் வர்த்தகவியல் அல்லது முகாமைத்துவம் தொடர்பான பட்டமொன்று மற்றும் பட்டம் பெற்றதன் பின்னர் குறித்த துறையில் 03 வருட கால அனுபவம்.
  அல்லது
  பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றில் இடைநிலை மத்திய பரீட்சையில் சித்தி அல்லது உயர் தேசிய கணக்காளர் டிப்ளோமா (HNDA) சித்தி மற்றும் HNDA இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்ததன் பின்னர் 03 ஆண்டு காலம் கணக்கியல் துறையில் அனுபவம் பெற்றிருத்தல்.
  **உள்ளக விண்ணப்பதாரர்களிற்கான கல்வித் தகைமைகள்:-**
  கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகுதியின் கணக்கியல் துறையில் முதல் தரத்தில் 05 ஆண்டுகால திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூரணப்படுத்தி இருத்தல்.
- வயது : 22 வருடங்களிற்குக் குறையாமலும் 35 வருடங்களிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர் களிற்கான வயதுக்கட்டுப்பாடு இல்லை
- சம்பள அளவுத்திட்டம் : MM 1-1 2016 ரூபா 53,175/- 10x1,375/- 15x1,910/- + 95,575/-
  (முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இல. 02/2016 இன் பிரகாரம்)
- கொடுப்பனவுகள் : மாதாந்த போக்குவரத்துக் கொடுப்பனவுகள், தொடர்பாடல் விலைப்பட்டியல்களை செலுத்துதல், முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கை இல. 05/2017 இன் பிரகாரம் தொழில்சார் கொடுப்பனவு, திறைசேரி அனுமதித்த வாழ்க்கைச் செலவுப்படி

அரச சேவையில் ஏற்கனவே பணியாற்றும் விண்ணப்பதாரர்கள், தம் விண்ணப்பப் படிவங்களை குறித்த திணைக்களப் பிரதானியின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

சுயமாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள், இவ் அறிவித்தலின் 14 நாட்களிற்குள் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத்தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

**தலைவர்**
**வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனம்**
**இல. 335 (90)**
**டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு-10**

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk

**கடற்றொழில் அமைச்சு**

**இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை**

NAQDA

# விலைமனுக்கோரல்

## பெறுகை அறிவித்தல்

01. இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் (மைனர்) பின்வரும் பொருட்களை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| ஒப்பந்த இலக்கம் மற்றும் பெயர் | மனுப் பாதுகாப்பு தொகை (SLR) மற்றும் செல்லுடியாகும் காலம் | மீளச் செலுத்தப்படாத கட்டண பெறுமதி (SLR) | மனு ஆவணங்கள் வழங்கப்படும் மற்றும் மூடப்படும் திகதி / நேரம் | மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் மூடப்படும் திகதி / நேரம் |
|---|---|---|---|---|
| NQ/DPC/2023/NCB/G/05 பொலித்தீன் கொள்முதல் (Procurement of Polythene) (LLDPE) | 170,000.00 (2023.07.23 வரை) | ரூ.3,000.00 | 2023.03.23 பி.ப.3.00 | 2023.03.24 பி.ப.2.00 |

02. தகுதியான மனுதாரர்கள் மேலதிக தகவல்களை (**www.naqda.gov.lk**) மூலமாக பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
**திணைக்களத்தின் கொள்முதல் குழு - (மைனர்)**
**இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை,**
இல 41/1, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்த, பத்தரமுல்ல.
**2023.03.03**

# இலங்கை வங்கி

## ஏல விற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 22 ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.**

## 1. கடன் தொடர்பு இலக்கம்: 80867961

இல.147/19, ஜே.பி. வீதி, புத்தளம் என்ற முகவரியைச் சேர்ந்த திரு. அப்துல் வஹாப் அப்துல் லதீப் (றைஷா குழுமத்தின் பங்காளர்) ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 06.12.2019 ஆம் திகதிய 2153 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 25.11.2019 ஆம் திகதி தினமின, டெய்லி நியூஸ், தினகரன் ஆகிய நாளிதழ்களிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய முதல் நிலுவையையும் விற்பனைத் திகதி வரை செலத்த வேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் அறவிடத்தக்க செலவுகளையும் பணங்களையும் அறவிடும் பொருட்டு கீழே அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.50/3 விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த ரீ அன்ட் எச் ஒகஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரி. துசித்த கருணாரத்ன அவர்கள் 22.03.2023 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பாரென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

### மேற்குறிப்பிட்ட அட்டவணை

1. நில அளவையாளர் நாயகம் தயாரித்து தன் பொறுப்பில் வைத்துள்ள PU4726ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இல. 1 என விபரிக்கப்பட்டுள்ள அரச காணியின் பாகம் வடமேல் மாகாணம் புத்தளம் மாவட்டம் புத்தளம் பற்று வடக்கு புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 606 மானதீவு கிராம சேவகர் பிரிவிலுள்ள இஸ்மாயில்புரம் என்ற கிராமத்தில் அமைந்துள்ளது. குறித்த காணித்துண்டானது வடக்கில் முள்ளுவெளி அரச காணியையும் கிழக்கில் முள்ளுவெளி அரச காணியையும் (RDA) வீதியையும் தெற்கில் முள்ளுவெளி அரச காணியையும் மேற்கில் முள்ளுவெளி அரச காணியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. பூச்சியம் தசம் எட்டு ஏழு இரண்டு எட்டு ஹெக்ரயர் (0.8728 ஹெக்ரயர்) பரப்பளவையும் அதனகத்துக் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி புத்தளம் காணிப் பதிவகத்தில் பக்கம் A/PUTH/04/93 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

உரிமம் பெற்ற நில அளவையாளர் வி. விக்னேஸ்வரன் தயாரித்த 2011.06.10ஆந் திகதிய 5855ஆம் இலக்க மிக அண்மைய வரைபடத்தில் தற்போது காணித்துண்டு இல. 1 என விபரிக்கப்பட்டுள்ள மேற்குறித்த காணியானது வடமேல் மாகாணம் புத்தளம் மாவட்டம் புத்தளம் பற்று வடக்கு புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 606 மானதீவு கிராம சேவகர் பிரிவிலுள்ள இஸ்மாயில்புரம் என்ற கிராமத்தில் அமைந்துள்ளது. குறித்த காணித்துண்டானது வடகிழக்கில் அரச காணியையும் (ஏ.டபிள்யு. அப்துல் லதீப் என்பவரால் செப்பனிடப்பட்ட மிகைக் காணி) தென்கிழக்கில் புத்தளம் - மன்னார் (RDA) வீதியையும் தென்மேற்கில் முள்ளுவெளி கால்வாய்க்கான ஒதுக்கத்தையும் அரச காணியையும் வடமேற்கில் முள்ளுவெளி கால்வாய்க்கான ஒதுக்கத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ளதோடு இரண்டு ஏக்கர்கள் மற்றும் இருபத்தைந்து தசம் ஒரு பேர்ச்சுகள் (A2.R0.P25.1) பரப்பளவையும் அதனகத்துக் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ளது.

### ஒதுக்கங்கள்

1. இக் காணியில் அல்லது காணியின் மேல் காணப்படும் அனைத்துக் கனிமங்களுக்குமான (இவ்வுறுதியில் பெறுமதிமிக்கவை என உள்ளடக்கப்படும்) உரித்தும் அத்தகைய கனிமங்களை அகழ்வதற்கான, தேடுவதற்கான, அங்கு வேலை செய்வதற்கான, எடுத்துச் செல்வதற்கான உரிமையும் அரசுக்கே உரியது.
2. காணி உரிமையாளருக்கு காணி மீதுள்ள உரித்தானது இவ்வுறுதியின் திகதியில் இக்காணி மீது தற்போது காணப்படும் எந்தவொரு வழி ,வாய்க்கால் உரிமைக்கும் உட்பட்டதாகும்.

### நிபந்தனைகள்

1. உரிமையாளர், 0.0375 ஹெக்ரயர்/ஏக்கர்கள் மேட்டுநிலம் ஹெக்ரயர்/ஏக்கர்கள் நீர்ப்பாசனக் காணி என்ற பெயரில் இங்கு குறித்துரைக்கப்பட்டுள்ள உப பிரிவின் அலகைவிடக் குறைவான பரப்பளவுடைய காணியின் பிரிக்கப்பட்டவொரு பாகத்தை கையுதிர்க்கப்படலாகாது.
2. உரிமையாளர், இங்கு 1/23 என பெயர் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த அலகிலும் குறைவான காணியின் பிரிக்கப்படாதவொரு பாகத்தை கையுதிர்க்கப்படலாகாது.
3. நிபந்தனை 01இல் குறித்துரைக்கப்பட்ட உப பிரிவை விடக் குறைவான பரப்பளவுடைய காணியின் பிரிக்கப்பட்டவொரு பாகத்திற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக இருத்தலாகாது.
4. நிபந்தனை 02 இல் குறித்துரைக்கப்பட்ட ஆகக் குறைந்த அலகிலும் குறைவான காணியின் பிரிக்கப்படாதவொரு பாகத்திற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக இருத்தலாகாது.
5. காணியோ அதன் எந்தவொரு பகுதியோ கட்டுமான காலத்தில் ஏற்கனவே கட்டப்பட்ட அல்லது இதன்பிறகு கட்டப்படவுள்ள நீர்ப்பாசன வேலையின் மூலம் நீர்ப்பாசனம் செய்யக்கூடியதாக இருந்தால் அல்லது இதன்பிறகு நீர்ப்பாசனம் செய்யக்கூடிதாக மாறினால் நீர்ப்பாசனம் செய்யக்கூடிய பகுதி தொடர்பில் நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டத்தில் (அத்தியாயம் 453) கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் வரும் எந்தவொரு விதிக்கும் உரிமையாளர் இணங்க வேண்டும்.
6. அரசாங்க அதிபரிடமிருந்து எழுத்துமூல அனுமதியையும் உரிய அதிகார சபையிடமிருந்து உரிமம் ஒன்றையும் பெற்றுக் கொண்டாலே ஒழிய, காணியில் அல்லது காணியின் மேல் காணப்படும் கனிமங்களை உரிமையாளர் அகழவோ தேடவோ எடுக்கவோ உரிமை கொண்டாடவோ விற்கவோ வேறு விதத்தில் கையுதிர்க்கவோ கூடாது.
7. பிரதேச செயலாளரின் எழுத்துமூல முன்னனுமதி இன்றி காணியோ அதன் ஏதேனும் பாகமோ கையுதிர்க்கப்படலாகாது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி
இலங்கை வங்கி
திரு.யு.எஸ்.எஸ். பெனான்டோ
புத்தளக் கிளை முகாமையாளர்

மேற்குறித்த ஆதனம்/ஆதனங்கள் தொடர்பான உரித்துறுதியையும் ஏனைய தொடர்புபட்ட ஆவணங்களையும் பரிசீலிக்க ஏலதாரர்களுக்கு அனுமதி உண்டு. அப்பரிசீலனைகளை இலங்கை வங்கி (புத்தளம் கிளை) முகாமையாளர் ஊடாக மேற்கொள்ளலாம். தொலைபேசி இலக்கம்: 032 222 4945.


1975 BOC CALL CENTRE www.boc.lk

A (Ika) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.


இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to, classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 | 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service

# சிறு விளம்பரம்






128

டயர்கள், டியூப்புகள்

விற்பனைக்கு



122

மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்

விற்பனைக்கு

WP YR-8214 Bajaj, 2011, WP QG-7740 Bajaj, 2006, UP ABL-2449 B a jaj, 2 016, WP HM- 6 698 B a-jaj, 2 003, threewheel கூடிய விலைக் கோ ரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 013742

டயரடியூப கொழுமபு 14 இல் மிகவும் சலுகை விலையில் உத்தரவா தத்துடன் சகல டயர்க ள், போத்லிப்ட் டய ர்கள் மற்றும் காற்று 60 oX9.700X12 28 X9X15. 25 0X15 ஆர்பிடெக் 70 oX16.750X16 90 0X20, 1000X20, இல .155 கிரவுன் டயர் கொழும்பு 14. 07 73134060. 010355

Repeat Your ad For Better Offers


## வெற்றுப் பாத்திரம் விலை கோரி விற்பனை செய்தல்

## இலங்கை தேசிய வைத்தியசாலை

**இலங்கை தேசிய வைத்தியசாலையில் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வெற்று பிளாஸ்டிக் கேன் (10L,5L) விற்பனை செய்வதற்கான விலை கோரல் 2023ஆம் ஆண்டு**

கொழும்பு 10 இலங்கை தேசிய வைத்தியசாலையில் சேருகின்ற மேற்படி உருப்படியை 2023.03.31 முதல் 2024.03.30 வரை ஒரு வருட காலத்திற்குள் விற்பனை செய்வதற்காக 2023.03.22 மு.ப. 10.00 வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன. அத்தினத்திற்கு முன் வார நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 2.00 வரை தேசிய வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு மீளளிக்கப்படாத ரூ. 1500.00 தொகையைச் செலுத்தி வழங்கல்கள் பிரிவில் தேவையான விண்ணப்பம் மற்றும் நிபந்தனையுடனான விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். (இது சம்பந்தமாக 011-2691111 நீடிப்பு 2722 திரு. அகலங்கவை அழைத்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்).

**வைத்திய நிபுணர், டபிள்யூ. கே. விக்ரமசிங்ஹ,**
**பிரதிப் பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை.**

வனசீவராசி மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

## தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களம்

### சிறுவர்களின் விளையாட்டு இடப்பரப்புக்களுக்காக சிறுபிள்ளைகள் விளையாட்டுப் பொருட்களுக்கான வழங்கல், நிறுவுதல் மற்றும் சேவை வழங்குநர்

1. சிறுவர்களின் விளையாட்டு இடப்பரப்புக்களுக்காக சிறுபிள்ளைகள் விளையாட்டு பொருட்களுக்கான வழங்கல், நிறுவுதல் மற்றும் சேவை வழங்குநர் ஆகியவற்றிற்கான தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்கள திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. **2023 மார்ச் 03 ஆம் திகதியிலிருந்து 2023 மார்ச் 22 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும்** வேலை நாட்களில் விலைமனுக்கோரல் ஆவணத்திலுள்ள ஒவ்வொரு அமைவிடத்திற்கும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 2,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், தெஹிவளை, அனகாரிக்க தர்மபால மாவத்தை, தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
4. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கம் ஆகியன தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிடப்பட்டு **2023 மார்ச் 23 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு** அல்லது அதற்கு முன்னராக தெஹிவளை, அனகாரிக்க தர்மபால மாவத்தை, தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

| அமைவிடம் | விலைமனுப்பிணை (ரூபாவில்) | விலைமனுப்பிணையின் செல்லுபடியாகும் காலப்பகுதி | ஒப்பந்தக் காலப்பகுதி | விலைமனு முன்னோடிக் கூட்டம் |
|---|---|---|---|---|
| தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை | 125,000 | 2023.07.18 ஆம் திகதியன்று வரையும் | 01 வருடம் | 2023.03.10 ஆம் திகதியன்று |
| பின்னவல மிருகக்காட்சிச்சாலை | 50,000 | 2023.07.18 ஆம் திகதியன்று வரையும | 02 வருடங்கள் | 2023.03.13 ஆம் திகதியன்று |
| சுவாரி பூங்கா | 50,000 | 2023.07.18 ஆம் திகதியன்று வரையும | 02 வருடங்கள் | 2023.03.14 ஆம் திகதியன்று |

5. மேலதிக விபரங்களுக்கு, 011-2710807 என்ற தொலைபேசியூடாகவும் 011-2731851 என்ற தொலைநகலூடாகவும் தயவு செய்து தெஹிவளை, அனகாரிக்க தர்மபால மாவத்தை, தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய மிருகக்காட்சிச்சாலை திணைக்களம்,**
**அனகாரிக்க தர்மபால மாவத்தை,**
**தெஹிவளை.**

## கேள்வி அறிவித்தல்

## நுவரெலியா பிரதேச சபை

நுவரெலியா பிரதேச சபைக்கு சொந்தமான வருடாந்த கேள்வி விற்பனைக்கு ஒதுக்கப்பட்ட சொத்துகள் **2023.04.01ம் திகதி முதல் 2023.12.31 திகதி வரையான** காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக 02 பிரதிகளை கொண்ட முத்திரையிடப்பட்ட கேள்வி விண்ணப்ப படிவங்கள் 2023.03.22ம் திகதி மு.ப 10.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வி விண்ணப்ப படிவம் மற்றும் அது தொடர்பான நிபந்தனைகள் அடங்கிய படிவத்தினை **2023.03.02ம் திகதி மு.ப.9.00 மணி தொடக்கம் 2023.03.22ம் திகதி பி.ப. 03.00 மணி வரையான அலுவலக நேரத்தில்** தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டினை சமர்ப்பித்து தமது அடையாளத்தினை உறுதி செய்த பின்னர் நுவரெலியா பிரதேச சபையின் நானுஓயா பிரதான காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்வி விண்ணப்ப படிவங்கள் பெற்றுக் கொள்வதற்கான காலம் **2023.03.23ம் திகதி மு.ப.10.00 மணியுடன் நிறைவடையும்.** 2023.03.23 ம் திகதி மு.ப. 10.30 மணிக்கு நுவரெலியா பிரதேச சபையின் பிரதான காரியாலயத்தில் கேள்வி விண்ணப்ப படிவங்கள் திறக்கப்படும். அந்த சந்தர்ப்பத்தில் கேள்வி கோருபவர் அல்லது கேள்வி கோருபவரினால் எழுத்து மூலமாக அதிகாரமளிக்கப்பட்ட முகவர் ஒருவர் பங்கு பற்ற முடியும்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்வி விண்ணப்பப் படிவங்கள் பதிவுத் தபாலில் அல்லது நுவரெலியா பிரதேச சபையின் **செயலாளர் அவர்களின் அறையில்** வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுவதனூடாக கேள்வி கோர முடியும்.

கேள்வி விண்ணப்பப் படிவம் இடப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி கோரலுக்கான உரிய தலைப்பினை தெளிவாக குறிப்பிடுவது அவசியம் என்பதுடன் **அசல் விண்ணப்பப் பத்திரம் மற்றும் நகல் விண்ணப்பப் பத்திரம்** ஆகியவற்றுக்கு தனித்தனியாக இரண்டு தபாலுறைகள் இடப்பட வேண்டும்.

தமது அடையாளத்தினை உறுதி செய்த பின்னர் மற்றும் இங்கு உப அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு கேள்வி விண்ணப்பங்களுக்கான கட்டணங்கள் மற்றும் மீள செலுத்தப்படும் பிணை வைப்புத் தொகையினை செலுத்திய பின்னர் கேள்வி விண்ணப்பப் படிவத்தினை பெற்றுக் கொள்ள முடியும்.

கேள்வி விண்ணப்பப் படிவக் கட்டணம் மற்றும் கேள்வி கோரும் கேள்வித் தொகை தொடர்பாக அரசினால் விதிக்கப்படும் வரித் தொகையினையும் செலுத்துதல் வேண்டும்.

குறைந்தபட்ச கேள்வி தொகையை விட குறைவான தொகையை கேள்வித் தொகையாக குறிப்பிடும் கேள்வி தாரர்களின் மற்றும் கேள்வி விண்ணப்பப் படிவத்தினை பெற்றுக் கொண்டு விண்ணப்பப் படிவத்தினை சமர்ப்பிக்காத கேள்வித் தாரர்களின் மீள செலுத்தப்படும் பிணை வைப்புத் தொகைகள் சபை வசமாக்கப்படும்.

விண்ணப்பிக்கப்படும் கேள்வி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் குழுவின் தீர்மானமாகும்.

கேள்வி விண்ணப்பங்கள் திறக்கப்பட்டதன் பின்னர் தேர்வுசெய்யப்படும் கேள்விதாரரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள **கேள்வித் தொகையில் 50% னை பிணை வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும்** என்பதுடன் அந்த சந்தர்ப்பத்தில் குறித்த தொகையினை செலுத்த தவறும் பட்சத்தில் அந்த கேள்வி விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

இந்த வைப்புத் தொகைக்கு மேலதிகமாக இது தொடர்புடைய 03 மாத காலத்திற்கான பிணையாக சொத்து பத்திரம் ஒன்று சபையில் வைக்க வேண்டும்.

மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் நுவரெலியா பிரதேச சபையின் கணக்கு பிரிவில் பெற்றுக் கொள்ள முடியும். தொலைபேசி இலக்கம் - 052 22 29822

**வேலு யோகராஜ்,**
**தலைவர்**
**நுவரெலியா பிரதேச சபை**
2023.02.28

**உப அட்டவணை**

| தொடர் இல. | விபரம் | கேள்வி விண்ணப்ப படிவக் கட்டணம் | மீள செலுத்தப்படும் பிணை வைப்புத் தொகை (ரூபா) | குறைந்த ஏலத்தொகை ரூபா. |
|---|---|---|---|---|
| 01 | நானுஓயா நகர மாட்டிறைச்சி கடையறை | 2,500.00 | 100,000.00 | 1,670,042.00 |
| 02 | நானுஓயா நகர கோழி இறைச்சி கடையறை | 2,500.00 | 50,000.00 | 473,715.00 |
| 03 | நானுஓயா நகர ஆட்டிறைச்சி கடையறை | 2,500.00 | 50,000.00 | 340,373.00 |
| 04 | கந்தப்பளை நகர கோழி இறைச்சி கடையறை | 2,500.00 | 100,000.00 | 1,403,325.00 |
| 05 | கந்தப்பளை நகர மீன் விற்பனை பலகை | 2,500.00 | 100,000.00 | 1,026,795.00 |
| 06 | மீப்பிளிமான நகர மீன் விற்பனை பலகை | 2,500.00 | 25,000.00 | 82,500.00 |
| 07 | நானுஓயா மாட்டு கொல்களம் நடாத்திச் செல்லுதல் | 2,500.00 | 100,000.00 | 1,617,000.00 |
| 08 | கந்தப்பளை வாராந்த சந்தை கட்டணம் வசூலித்தல் | 2,500.00 | 25,000.00 | 505,050.00 |
| 09 | கந்தப்பளை வாராந்த சந்தை கட்டணம் வசூலித்தல் | 2,500.00 | 25,000.00 | 221,760.00 |
| 10 | கந்தப்பளை வாகன தரிப்பிட கட்டணம் வசூலித்தல் | 2,500.00 | 25,000.00 | 110,250.00 |
| 11 | கந்தேஎல வாகன தரிப்பிட கட்டணம் வசூலித்தல் | 2,500.00 | 25,000.00 | 29,150.00 |

# பெறுகை அறிவித்தல்

## அபேக்ஷா வைத்தியசாலை - மஹரகம - இலங்கை

### 2023 ஆம் ஆண்டில் வைத்தியசாலையில் சேகரமாகும் சிதைவடையும் கழிவுகள்/கலப்பு கழிவுகள் (சிதைவடையாதவை) அகற்றிக் கொள்வதற்காக ஒப்பந்தக்காரரொருவரை நியமிப்பதற்கான கேள்வி கோரல்

மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பிராந்தியப் பெறுகைக்குழுவின் தலைவரினால் கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தகைமையுள்ள நிறுவனங்களிடமிருந்து 2023.03.17 அன்று மு.ப.10.00 வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விகள் மூடப்பட்டதும் உடனடியாக அவை, மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பணிப்பாளரின் அலுவலகத்தில் திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் கேள்விதாரரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளித்திருக்கலாம்.

மேற்படி முகவரியின் தாபனப்பிரிவில் 2023.03.16 வரை வாரவேலை நாட்களில் மு.ப.9.00 மற்றும் பி.ப.2.30 இற்கிடைப்பட்ட காலப்பிரிவில் கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கேள்விதாரர்கள் தம் விண்ணப்பக்கடிதம் மற்றும் கேள்விக்கட்டணம் கணக்காளரிடம் செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

| தொடர் இலக்கம் | கருமம் | தகவுத்திறன் | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 01 | 2023 ஆம் ஆண்டில் மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையில் சேகரமாகும் சிதைவடையும் கழிவுகள்/கலப்பு கழிவுகள் (சிதைவடையாதவை) அகற்றிக் கொள்வதற்காக ஒப்பந்தக்காரரொருவரை நியமித்தல் | அரச வைத்தியசாலை யொன்றில் குறைந்தபட்சம் கழிவகற்றல் தொடர்பாக 03 வருடகால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். | ரூபா. 500.00 |

மஹரகம, அபேக்ஷா வைத்தியசாலையின் பணிப்பாளரிடம் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இலக்கம் : 011-2840233. இலவசமாக கேள்விப்படிவங்களை பரிசீலனை செய்துகொள்ளலாம். கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும்.

**தலைவர்**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**அபேக்ஷா வைத்தியசாலை**
**மஹரகம**

# கொழும்பு மாநகர சபை

## விலைக்கோரல்/ கேள்விகளுக்கான அழைப்பு

தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் பொருட்கள்/ சேவை வழங்கல்களுக்காக பொறியிடப்பட்ட கேள்விகள் கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் அழைக்கப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இல. | விபரம் | கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்களின் தகைமை | மீளளிக்கப் படாத கேள்வி / விலைமனு ஆவணக் கட்டணம் | விலைமனு முறி / பிணை பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|---|
| 1. | CPD15/550/2023 | மேற்கத்திய மருந்துகளுக்கான பெறுகை | வர்த்தகப் பதிவுடன் இந்த வகையான வழங்கல்கள்/ சேவைகளில் அனுபவத்தை பெற்ற வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்கள் | ரூபா 5,750.00 | 400,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 2. | CPD17/2985/2022 | பிரேம் சகிதம் D I கலி மூடிகளை வழங்குவதற்கான கேள்வி (மீள் - கேள்வி) | | ரூபா 5,750.00 | 500,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 3. | CPD14/0595/2023 | 200,000 kg 60/70 பிட்டுமன் (de-canned/ converted)) வழங்குதல், விநியோகித்தல் மற்றும் இறக்குதலுக்கான விலைக்கோரல் | | ரூபா 5,750.00 | 550,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) **இரண்டு முறைகளில்** பெற்றுக்கொள்ளலாம்.
**முறை 01 - கொழும்பு மாநகர சபையின்** இணையதளத்திலிருந்து **(www.colombo.mc.gov.lk)** தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

i. மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.
அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் **மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு** வரவு வைக்கலாம்.
ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

- **வட்டார அலுவலகம் 04,** இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06.
- **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,** மாளிகாகந்த, கொழும்பு 10.

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

**முறை 02 -** நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணக் கட்டணத்தை **2023-03-22ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும்** நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி **மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மத்திய பெறுகை திணைக்கள அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**

ஆ. விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்கள் **2023 மார்ச் 22ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்குப்** பின் வழங்கப்படமாட்டாது / இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியாது.

இ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை கேள்விமனுக்கள்/ விலைமனுக்கள் மூடப்படும் திகதியிருந்து **150 நாட்கள்** வரை செல்லுபடியாதல் வேண்டும். **விலைமனு முறி/ பிணை 2023.08.19ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2023.07.21ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.**

ஈ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் **கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2023 மார்ச் 23ஆம் திகதி மு.ப. 10.00 மணி** அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

உ. **2023 மார்ச் 23ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு** கேள்வி/ விலைமனு ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் கேள்வி/ விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் கேள்வி/ விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனுக்கள் மூடப்படும். கேள்வி/விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர். 0112- 686389, 0112-686369, 0112-662329 என்ற தொலைபேசி இலக்கங்களில் தலைமை கணக்காளர் (பெறுகை) அவர்களிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஊ. 5.0 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட கேள்வி/ விலைமனுக்களைக் கொண்ட கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்திற்கு அமைய பொது ஒப்பந்தப் பதிவுடன் பதிவு செய்த பின் PCA (3) ஆவணத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்,**
**கொழும்பு மாநகர சபை.**

## கைத்தொழில் அமைச்சு

# சிவப்பு களிமண் கூரை ஓடு உற்பத்திக்காக இலங்கை தரச் சான்றிதழை (SLS) பெற்றுக்கொள்வதற்காக அரசாங்கத்தின் நிவாரணம்

சிவப்பு களிமண் கூரை ஓடு உற்பத்திக்கு வெளிநாட்டு சந்தைக்கு பிரவேசிக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கில் அந்த உற்பத்திகளின் குணாம்சத் தன்மையை மேம்படுத்துவதற்காக இலங்கை தரச் சான்றிதழைப் (SLS) பெற்றுக்கொள்வதற்கு அந்தத் துறையில் ஈடுபட்டுள்ள கைத்தொழிலாளர்களுக்கு விசேட அனுசரணையை வழங்குவதற்கு கைத்தொழில் அமைச்சு திட்டமிட்டுள்ளது.

நேர்முகத் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் 30 கைத்தொழிலாளர்களுக்கு SLS சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான அடிப்படை சான்றுப்படுத்தல் கட்டணத்தின் 50% ஒரு நிறுவனத்திற்கு அதிகூடிய தொகையாக 150,000.00 ரூபாவை அமைச்சினால் ஏற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்கும் கைத்தொழிலாளர்கள் இதற்குச் செலவாகும் ஏனைய செலவுகளை (கைத்தொழிலை நவீனமயப்படுத்துவதற்கான செலவு) ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொள்வதற்கு உத்தேசிப்பதாயின் பின்வரும் Google Link ஊடாக 2023 மார்ச் 17ஆம் திகதி அல்லது அதற்கு முன் விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்படுகின்றது.


https://shorturl.at/GPQU7

**மேலதிக விபரங்களுக்கு:**

**பணிப்பாளர்,**
**அபிவிருத்திப் பிரிவு II**
**கைத்தொழில் அமைச்சு,**
**இல. 73/1, காலி வீதி, கொழும்பு-03.**

**தொலைபேசி:** 0112333312
**தொலைநகல்:** 0112432250
**மின்னஞ்சல்:** sectordivision2@gmail.com

**செயலாளர்,**
**கைத்தொழில் அமைச்சு,**
**இல. 73/1, காலி வீதி, கொழும்பு-03**




## பெறுகை அறிவித்தல்

### கருவலகஸ்வெவ பிரதேச சபை

கருவலகஸ்வெவ பிரதேச சபைக்குரித்தான ஆதனங்களின் விற்பனை உரிமையை 2023ஆம் வருடத்தின் ஏப்ரல் மாதம் 01ஆம் திகதி முதல் டிசம்பர் 31ஆம் திகதி வரையான காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக 2023-03-03ஆம் திகதி முதல் 2023-03-23ஆம் திகதி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இது தொடர்பான மேலதிக விபரங்களை பின்வரும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு அல்லது மின்னஞ்சல் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி இல - 032-2267917
மின்னஞ்சல் முகவரி - karuwalagaswewaps@gmail.com

**தலைவர்,**
**கருவலகஸ்வெவ பிரதேச சபை.**

### விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

## பெறுகை அறிவித்தல்

**விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மற்றும் இணைந்த நிறுவனங்களின் பாதுகாப்புச் சேவையை பெற்றுக்கொள்ளல் மற்றும் சுத்திகரிப்புச் சேவையை வழங்குவதற்காக விலைமனுக்கோரல் - 2023/2024**

**பாதுகாப்புச் சேவைக்கான ஒப்பந்த இல : MOYS/PCM/07/04/SEC . SERVICE - 2023**
**சுத்திகரிப்புச் சேவைக்கான ஒப்பந்த இல : MOYS/PCM/CLEANING**

விளையாட்டு , இளைஞர் விவகார அமைச்சு மற்றும் அதனோடு இணைந்த கீழ்க்காணும் நிறுவனங்களுக்கு பாதுகாப்புச் சேவையை வழங்குதல் மற்றும் சுத்திகரிப்புச் சேவையை வழங்குவதற்காக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சார்பாக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு பெறுகைக் குழுவின் தலைவரால் தகைமையுள்ள நிறுவனங்களிலிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் வேறுவேறாகக் கோரப்படுகின்றன.

I. விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சு - இல -09, பிலிப் குணவர்தன மாவத்த, கொழும்பு - 07.
II. நுவரெலியா விளையாட்டு இல்லம் - இல-119/64/, குதிரைத்திடல் வீதி, நுவரெலியா
III. தேசிய விளையாட்டு சபை - இல.33, சுதந்திர சதுக்கம், கொழும்பு - 07
IV தியகம சர்வதேச விளையாட்டு கட்டிடத்தொகுதி - தியகம, ஹோமாகம
V. விளையாட்டுடன் சம்பந்தப்பட்ட தவறுகளை தவிர்க்கும் விசேட விசாரணைப் பிரிவு - (சுத்திகரிப்பு சேவைக்காக மட்டும்)

02. மேற்படி ஒவ்வொரு பெறுகைக்கும் வேறுவேறாக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கணக்காளர் (கொடுப்பனவுகள் இடம் மீளளிக்கப்படாத ரூ-1000.00 வீதம் காசு செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை பெறுகை பிரிவிற்கு சமர்ப்பித்து, 2023.03.07 முதல் 2023.03.27 வரை (மு.ப.9.00 முதல் பி.ப.3.00) குறித்த கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

03. குறித்த மாதிரிப்பத்திரத்தில் சமர்ப்பிக்க வேண்டிய விலைமனுக்களை, "மூலப்பிரதி" மற்றும் "நகல்பிரதி" என இரு பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அக் கேள்விப் பத்திரங்கள் 2023.03.28 மு.ப.11.00 வரை ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படும் கேள்விப் பத்திரங்கள், தலைவர், அமைச்சு பெறுகைக்குழு, விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சு, பிலிப் குணவர்தன மாவத்த, கொழும்பு - 07 என்ற முகவரிக்கு அத்தினத்திற்கு முன் அனுப்புதல் வேண்டும். கையோடு கொண்டுவந்து ஒப்படைக்கும் கேள்விப் பத்திரங்கள் அமைச்சின் மூன்றாம் மாடியில் பெறுகைப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

04. கேள்விப்பத்திரங்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பாதுகாப்பு சேவையை நடத்திச் செல்லல் 2023/2024 இற்கான விலைமனுக்கள்" அல்லது சுத்திகரிப்பு சேவையை வழங்குதல் - 2023/2024 இற்கான விலைமனுக்கள்" என்று குறிப்பிடுதல் வேண்டும். பெறுகைகள் இரண்டுக்கும் சம்பந்தமான கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவது 2023.03.28 மு.ப.11.05 ஆவதுடன், அத்தினம் உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு அவ்வேளையில் சமுகமளிக்கவும்.

"கேள்விகள் திறக்கப்படும் தினம் முதல் 77 நாட்கள் கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும்".

| ஒப்பந்த இலக்கம் | பெறுகையின் பெயர் | கேள்விப் பிணை | கேள்விப் பிணைக் காலம் |
|---|---|---|---|
| MOYS/ PCM/07/04/SEC. SERVICE - 2023 | விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மற்றும் இணைந்த நிறுவனங்களின் பாதுகாப்புச் சேவையை பெற்றுக்கொள்ளல் | ரூ. 150,000.00 | 2023.07.10 |
| MOYS/PCM/ CLEANING | விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மற்றும் இணைந்த நிறுவனங்களில் சுத்திகரிப்பு சேவையைப் பெற்றுக்கொள்ளல் | ரூ. 150,000.00 | 2023.07.10 |

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக்குழு,**
**விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,**
**இல.09, பிலிப் குணவர்தன மாவத்த, கொழும்பு - 07**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## இலங்கை போக்குவரத்து சபைக்கு டாட்டா இயந்திரங்களுக்கான உதிரிப் பாகங்கள் மற்றும் கியர் பெட்டிகள் மற்றும் பில்டர்கள் மற்றும் Fuel Injection பம்பிகளுக்கான உதிரிப் பாகங்களை வழங்குவதற்கான விலைமனுக்கள்

01. இங்கே கீழே விபரிக்கப்பட்டவாறு 30 நாட்கள் கடன் அடிப்படையில் இபோச இற்கு டாட்டா இயந்திரங்களுக்கான உதிரிப் பாகங்கள் மற்றும் கியர் பெட்டிகள் மற்றும் பில்டர்கள் மற்றும் Fuel Injection பம்பிகளுக்கான உதிரிப் பாகங்களை வழங்குவதற்காக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார். 2023.03.03 ஆம் திகதியிலிருந்து 2023.03.23 ஆம் திகதி வரையும் அலுவலக நேரங்கள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு பெறுகைக்கு உரித்தான மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், கொழும்பு-05, கிருளவீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபை, பெறுகைப் பிரிவு, பிரதான பெறுகை முகாமையாளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.

| Procurement No. | Description | Non-refundable Bid Fee (Rs) | Bids shall be valid till | Bid Security (Rs) | Bid Security shall be valid till | Pre-bid meeting at SLTB Procurement Section, 200, Kirula Road, Colombo-5. | Bid Closing/Opening at Accounts Division, Ministry of Transport & Highways, 07 Floor, "Sethsiripaya", Stage II, Battaramulla |
|---|---|---|---|---|---|---|---|
| SMOT/04/11/ SLTB/02 | Supply of Spare Parts for Tata Engines & Gear Boxes for SLTB | 25,000.00 | 24.06.2023 | For bids offering Spare Parts to a total value of 100mn or less – 1.0Mn. 100mn to 20mn – 2.0Mn. Over 200mn – 3.0Mn | 24.07.2023 | At 10.00 a.m. on 13.03.2023 | At 2.00 p.m. on 24.03.2023 |
| SMOT/04/11/ SLTB/11 | Bid for Supply of Filters and Spare Parts for Fuel Injection Pumps for SLTB | 35,000.00 | 24.06.2023 | For Lot 1 – 3.0mn For Lot 2 – 1.0mn For Lot 1 & 2 – 4.0mn | 24.07.2023 | At10.30 a.m. on 13.03.2023 | At 3.00 p.m. on 24.03.2023 |

02. வெளிநாட்டு உற்பத்தியாளர்களின் ஏகநியமிக்கப்பட்ட உள்ளூர் பிரதிநிதிகள்/தரஅங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பதிவு பெற்ற உள்ளூர் உற்பத்தியாளர்கள் மாத்திரமே விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்காக தகுதியை பெற்றுக் கொள்வர்.

03. உற்பத்தியாளர்களின் அதிகாரம் மற்றும் உரித்தான வெளிநாட்டு உற்பத்தியாளர்களின் நேரடியான இறக்குமதிக்கான ஆதாரமில்லாத முன்வைப்புக்கள் பரிசீலனை செய்யப்படமாட்டாது.

04. உள்ளூர் முன்னுரிமையானது விலைமனுவொன்றின் மதிப்பீட்டு காரணியாக இருத்தல் வேண்டும்.

05. (அ) எந்தவொரு விலைமனுதாரரின் முகவராக, உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிட்டவராக அல்லது அவரின்

சார்பாக செயற்படுவராகவிருப்பின் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னராக 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்கசட்ட பொது ஒப்பந்தங்களுக்கமைவாக இலங்கை பொது ஒப்பந்தங்களின் பதிவாளருடன் அவ்வாறான நபர் பதிவு செய்தல் வேண்டும். விலைமனுவுடன் பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான சான்றிதழின் மூலப்பிரதியை சமர்ப்பிப்பதற்கு தவறும் விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தில் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறு விலைமனுக்களை சமர்ப்பித்த பின்னரும் பெறுகையின் முன்னரும் உடனடியாக விலைமனுதாரர்கள் தம்மை பதிவு செய்தல் வேண்டும். அவ்வாறு உரித்தான பெறுகை குழுவிற்கு பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு விலைமனுதாரருக்கும் பெறுகையானது வழங்கப்படமாட்டாது.

06. சமர்ப்பிக்கப்பட்ட விலைகளானது ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும் திகதியிலிருந்து 2023.12.31 ஆம் திகதி வரையுமான காலப்பகுதிக்கு நிலையாகவிருத்தல் வேண்டும்.

07. விலைமனுக்கள் மேலே குறிப்பிட்டுள்ள பெறுமதிக்கானதும் செல்லுபடியாகும் காலத்திற்கு அமைவானதுமானதும் இலங்கை மத்திய வங்கியினால் அல்லது இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் பதிவுபெற்ற அங்கீகரிக்கப்பட்ட பதிவு பெற்ற வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டதும் இபோச இன் முதல் எழுத்து மூலமான விண்ணப்பத்திலேயே திருப்பப்படாததும் நிபந்தனையற்றதுமான உத்தரவாத அடிப்படையில் அமைந்த விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். தேவைப்படுத்தப்பட்டவாறு செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்படாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.

08. விலைமனுக்கள் மேலே குறிப்பிட்டுள்ளவாறான உரித்தான விலைமனுக்களுக்கான மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக மேலேயுள்ள முகவரியில் கிடைக்கும் வகையில் இரு பிரதிகளில் பத்தரமுல்ல,II ஆம் கட்டம், ''செத்சிரிபாய'', 07 ஆம் மாடி, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கணக்கிடல் பிரிவில் இந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில்/தூதஞ்சல் சேவையில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுவை அடக்கியுள்ள முத்திரையிடப்பட்ட தபாலுறையின் இடது பக்கமேல் மூலையில் பெறுகையின் உரித்தான விளக்கம் குறிப்பிடப்படல் வேண்டும்.

09. பத்தரமுல்ல, II ஆம் கட்டம், ''செத்சிரிபாய'', 07 ஆம் மாடி, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கணக்கிடல் பிரிவில் விலைமனுக்கள் அவைகளை மூடியபின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**அமைச்சுபெறுகைக் குழு,**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
**07 ஆம் மாடி, ''செத்சிரிபாய'',II ஆம் கட்டம்,**
**பத்தரமுல்ல.**

**விசாரணைகள்:** **பிரதான பெறுகை முகாமையாளர், இபோச பெறுகைப் பிரிவு.**
**தொலைபேசி: 011 7706110, 0771056204. தொலைபேசி/தொலைநகல்: 011 2588457**

## அற்றோணி அதிகாரத்தை ரத்து செய்தல்

217 Morningside Avenue, Scarborough, Ontario, Canada, AM1E3E4 இல் வசிக்கும் நான், உதயகுமார் சிங்காரவேலு (கடவுச்சீட்டு : A 3951433), இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் மக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பதாவது 09/02/2022 திகதியுடன் என்னால் விசேட அற்றோணி தத்துவப் பத்திரம் மூலம் சிவலிங்கம் இலட்சுமியம்மாளுக்கு (தே.அ.அ.இல.608462473வி) வழங்கப் பட்ட விசேட அற்றோணி தத்துவ பத்திரம் இன்று முதல் இரத்து செய்யப் பட்டுள்ளது.

**உதயகுமார் சிங்காரவேலு**
**28.02.2023**

### பெயர் மாற்றம்

கொழும்பு -10, மாளிகாகந்த வீதி, இல.75/29 ஐச் சேர்ந்த தங்கராஜ் காத்திக்ராஜ் ஆகிய நான் புனித இஸ்லாம் மதத்தை தழுவி எனது பெயரை அப்துல் அஸீஸ் என மாற்றம் செய்துள்ளேன் எனவும், இனிமேல் சகல ஆவண ங்களிலும் புதிய பெயரையே பாவிப்பேன் எனவும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும், மக்களுக்கும் அறியத் தருகிறேன்.

**அப்துல் அஸீஸ்**

### பெயர் மாற்றம்

கண்டி மாவட்டத்தில் மேல்மாகாணம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கம்பளை, பல்லேவெல இல. 62 எனும் விலாசத்தில் வசிக்கும் அந்தோனி கவிதாமலர் ஆகிய நான், இஸ்லாம் மதத்தை சார்ந்தவர் என்ற வகையில் இனிவரும் காலங்களில் எனது பெயர் ஜெமிலா பாத்திமா என பயன்படுத்துவதாக இலங்கை சோசலிச அரசிற்கு அறியதருகின்றேன்.

## அறிவித்தல்

வயம்ப குருநாகல் கும்புக்கெட்டே தித்தவெல்லவில் வசிக்கும் சுமித் செனவிரத்ன (195434505105) ஆகிய நான் அம்மாவட்டத்தின் நிக்கதளுபொத்த கொதலகெம்பாவயில் வசிக்கும் அஸ்ஸெல்ல தேவகே நந்தன சுமித் குமார (941732677V) சார்பாக செயற்படும் 1112 அட்டோர்ணி அதிகார ஒப்பந்தத்தை (NW YF-2198 எனும் பஜாஜ் முச்சக்கரவண்டி) ஒப்பந்த மீறல் காரணமாக 2023.03.03 முதல் இரத்துச் செய்வதற்கு இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் இலங்கை வாழ் மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**- சுமித் செனவிரத்ன -**

## அபிவிருத்தி லொத்தர் சபை

### நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

### விலைமனுக்களுக்கான அழைத்தல்

### லொத்தர் சீட்டு பொதிகளை விநியோகிப்பதற்காக தூதஞ்சல் சேவையை பெற்றுக் கொள்ளல்

**Bid No.: DLB/PRO/2023/08**

அபிவிருத்தி லொத்தர் சபைக்காக லொத்தர் சீட்டு பொதிகளை விநியோகிப்பதற்காக தூதஞ்சல் சேவையை பெற்றுக் கொள்வதற்காக ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து அபிவிருத்தி லொத்தர் சபையின் சார்பாக கீழ் மட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

02. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறைக்கமைவாக நடாத்தப்படும்.

03. 2023.03.03 ஆம் திகதியிலிருந்து 2023.03.24 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான 2,300 ரூபா மற்றும் பெசேவ ஆகியவற்றை செலுத்திய பின்னர், கொழும்பு-02, டொக்டர் கொல்வின் ஆர் த சில்வா மாவத்தை (யூனியன் பிளேஸ்), 356 ஆம் இலக்கத்திலுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவிற்கு வழங்குநரினால் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை பரீட்சித்து அத்துடன் கொள்வனவும் செய்யலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

04. விலைமனுக்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் பிரகாரம் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

05. விலைமனுக்கோரல் ஆவணங்களில் தேவைப்படுத்தப்பட்டவாறான விபரமான அனைத்து தகவலையும் விலைமனுதாரர் வழங்கல் வேண்டும்.

06. விலைமனு நிபந்தனைகளின் பிரகாரம், விலைமனுக்கள் இரு பிரதிகளில் அவற்றை அடக்கியுள்ள தபாலுறைகளின் இடது பக்க மேல் மூலையில் **'Obtaining of Courier Service for the distribution of lottery ticket parcels'** என குறிப்பிடப்பட்டு 2023.03.27 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு பிந்தாமல் வந்தடையும் வகையில் தலைவர், கீழ் மட்ட பெறுகைக் குழு, அபிவிருத்தி லொத்தர் சபை, 356, டொக்டர் கொல்வின் ஆர் த சில்வா மாவத்தை, கொழும்பு-02 என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதன் பின்னர் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

07. விலைமனுக்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலேயுள்ள முகவரியிலுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2023.03.27 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு மூடப்பட்டு மூடும் நேரத்தின் பின்னர் விரைவாகவே அவைகள் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**கீழ்மட்ட பெறுகைக் குழு,**
**அபிவிருத்தி லொத்தர் சபை,**
**356, டொக்டர் கொல்வின் ஆர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-02.**
**தொலைபேசி: 011 4824824**

**www.dlb.lk**
**03.03.2023**

## பெறுகை அறிவித்தல்

### மாகாண சுகாதார சேவைத் திணைக்களம் - வட மத்திய மாகாணம்

### டயர் மற்றும் பற்றரி கொள்வனவு செய்தல் – 2023

மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் கீழ் காணப்படும் அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை பிரதேச சுகாதார சேவைப் பிரிவிற்குச் சொந்தமான வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் பாவிக்கப்படும் வாகனங்களுக்குத் தேவையான கீழ்க்காணும் பொருட்களை வழங்குவதற்காக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரான என்னால் 2023.03.24 பி.ப. 02.00 வரை தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொடர் இல | கேள்வி கோரல் இலக்கம் | உருப்படி | அளவு | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம் (ரூ) | கேள்வியுடன் சமர்ப்பிக்க வேண்டிய மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட 105 நாட்கள் செர்லுபடியாகும் கேள்வி பிணை பெறுமதி (ரூ) |
|---|---|---|---|---|---|
| 01 | PDHS/ F4/2023/P/02 (டயர்) | Van (Dual Purpose) 185x14 (8 Ply) | 32 | 5,000.00 | 200,000.00 |
| | | Van (Dual Purpose) 195x15 (8 Ply) | 224 | | |
| | | Cab 4WD 215x75x15 (4-5 Ply) | 20 | | |
| | | Ambulance 215x65x16 (8 Ply) | 80 | | |
| | | 4WD Cab 225x75x16 (4-5 Ply) | 08 | | |
| | | Ambulance 235x65x16 (08 Ply) | 280 | | |
| | | Cab 4WD 255x70x15 (5-6 Ply) | 24 | | |
| | | Cab 4WD 265x70x16 (4-5 Ply) | 20 | | |
| | | Lorry 750x16 (12 Ply) | 22 | | |
| | | Cab 4WD 265x65x17 (4-6 Ply) | 20 | | |
| | | Cab 4WD 235X75x15(4-6 Ply) | 20 | | |
| | | Cab 4WD 215x70x16 (4-6 Ply) | 04 | | |
| | | Cab 4WD 265x60x18 (4-6 Ply) | 20 | | |
| | | Van (Dual Purpose)185x65x14 (4-5 Ply) | 04 | | |
| | | Cab 4WD 225x70x16 (4-5 Ply) | 04 | | |
| | | Mini Van 145x12 (8 Ply) | 04 | | |
| | | Van (Dual Purpose)185x70x14 | 14 | | |
| | | Cab 4WD 205x75x15 | 12 | | |
| | | Cab 4WD 255x70x16 | 04 | | |
| | | Lorry 700x16 (12 Ply) | 08 | | |
| 02 | PDHS/ F4/2023/P/04 (பற்றரி) | 70AH-NS70-95D | 05 | 3,000.00 | 90,000.00 |
| | | 70AH-N-70-95D | 20 | | |
| | | 80AH-12V-(750-SAE/EN) | 20 | | |
| | | 90AH-105D | 30 | | |
| | | 92AH 12V(850A-EN/SAE/GS) | 06 | | |
| | | 150AH | 01 | | |
| | | 120AH | 02 | | |
| | | 45A | 01 | | |
| | | 65A | 04 | | |
| | | 90A Left | 04 | | |

03. தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாத கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணத்தை வட மத்திய மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு செலுத்திய பின்னர் கேள்வி ஆவணங்களை அநுராதபுரம், வட மத்திய மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் 2023.03.03 முதல் 2023.03.23 வரை அலுவலக நேரங்கள் (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை) பெற்றுக்கொள்ள முடிவதுடன், அங்கு கட்டணங்கள் செலுத்தாமலேயே குறித்த பெறுகை ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம். மேலதிக தகவல்களை 025-2050718/ 0252223790 இலக்கங்களை அழைத்து பெற்றுக்கொள்ள முடிவதுடன் மாகாண சுகாதார சேவைத் திணைக்கள உத்தியோக பூர்வ இணையதளமான pdhsncp மூலமும் இவ் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

04. கேள்வி நிபந்தனைகளுக்கு அமைவாக முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை 2023.03.24 பி.ப. 2.00 இற்கு முன்பு இடைக்குமாறு தலைவர், மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர், மாகாண சுகாதார சேவைத் திணைக்களம், பண்டாரநாயக்க மாவத்த, அநுராதபுரம். என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள் கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டு வந்து உள்ளிடலாம்.

05. கேள்விகள் இரு பிரதிகளுடன் பூர்த்தி செய்யப்படல் வேண்டும் அத்துடன், மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வேறு வேறாக வேறு வேறு கடித உறைகளில் இட்டு அக்கடித உறைகள் இரண்டையும் மீண்டும் ஒரு உறையில் உள்ளிடல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'கேள்வி கோரல் இலக்கம்' வேறு வேறாக குறிப்பிடப்பட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

06. 2023.03.24 பி.ப. 2.00 இற்கு கேள்வி ஆவணப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன், அவை திறக்கப்படுவதுடன், அவ் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவர்களது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம்.

07. கேள்விப் பிணை முறி மத்திய வங்கியில் பதிவு செய்த அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியலிருந்து பெற்றுக்கொண்ட 2023.03.24 முதல் 105 நாட்கள் (2023.03.24 முதல் 2023.07.07 வரை) செல்லுபடியாகும் வங்கிப் பிணை மூலம் அல்லது மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் குறித்த தொகையை வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

08. இப் பெறுகை பற்றிய மாகாண சுகாதார சேவைத் திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்/ மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்,**
**மாகாண சுகாதார சேவைத் திணைக்களம், வ.ம.மா.**
**பண்டார நாயக்க மாவத்த,**
**அநுராதபுரம்.**
**2023.03.01**

## பொதுசன கருத்துகளுக்கான இலங்கை கட்டளைகள் மற்றும் திருத்த வரைவு

1) நீட்டக்கூடிய கட்டுகளுக்கான இலங்கை கட்டளை விவரக்குறிப்பு வரைவு
பகுதி 1: நெய்த மற்றும் பாவு பின்னப்பட்ட கட்டு – ஒட்டும் தன்மையற்றது
(DSLS .............: ................)

2) கருப்பட்டிக்கான இலங்கை கட்டளை விவரக்குறிப்பு வரைவு.
பகுதி 1: கித்துல் கருப்பட்டி
(DSLS .............: ................)

3) மெத்தை மற்றும் குஷன்களுக்கான நெகிழ்வுத் தன்மையுடைய பொலியூரெதீன் நுரைக்கான இலங்கை கட்டளை விவரக்குறிப்பு வரைவு (முதல் மீளாய்வு)
(DSLS 1335:....................)

4) SLS 729 இற்கு திருத்த வரைவு இல.: 03: ready - to - serve fruit drinks இற்கான விவரக்குறிப்பு 2010

5) இலங்கை கட்டளை வரைவு - பொம்மைகளின் பாதுகாப்பு
(DSLS:...................: ........) (ISO 8124-2: 2014)

6) இலங்கை கட்டளை வரைவு - பொம்மைகளின் பாதுகாப்பு
பகுதி 10: இரசாயனம் மற்றும் அது தொடர்பான செயற்பாடுகளுக்கான பரிசோதனை தொகுதிகள்
(DSLS:...................: ........) (ISO 8124-10: 2019)

7) இலங்கை கட்டளை வரைவு - பொம்மைகளின் பாதுகாப்பு
பகுதி 11: பரிசோதனை தொகுதிகள் தவிர இரசாயன பொம்மைகள் (தொகுதிகள்)
(DSLS:...................: ........) (ISO 8124-11: 2019)

8) இலங்கை கட்டளை வரைவு – உணவு பாதுகாப்பு மீதான முற்படு தேவை திட்டங்கள்
பகுதி 5: போக்குவரத்து மற்றும் களஞ்சியம்
(DSLS:...................: ........) (ISO 22002-5: 2019)

9) இலங்கை கட்டளை வரைவு – சுற்றுச்சூழல் - மண்ணில் உள்ள கதிரியக்க அளவீடு
பகுதி 2: மாதிரி மூலோபாயம், மாதிரி மற்றும் மாதிரிகளின் முன் பரிகரண தேர்வுக்கான வழிகாட்டல்
(DSLS:...................: ........) (ISO 18589-2: 2022)

10) நீரில் கரையும் உரங்களுக்கான இலங்கை கட்டளை விவரக்குறிப்பு வரைவு
(DSLS:...................: ........) (ISO 18645: 2016)

11) கூட்டு உரங்களுக்கான இலங்கை கட்டளை விவரக்குறிப்பு வரைவு
(DSLS:...................: ........) (ISO 22862: 2021)

12) இலங்கை கட்டளை வரைவு – உணவு சோதனை மற்றும் கட்டுப்பாடுகளின் முறையுடன் தொடர்பில் உள்ள எனாமல் பூசிய பொருட்களில் இருந்து விடுவிக்கும் - கண்ணாடி மற்றும் பீங்கான் எனாமல்கள்
(DSLS:...................: ........) (ISO 4531: 2022)

13) இலங்கை கட்டளை வரைவு – ஈயம் மற்றும் கடமியம் வெளியீடு – உணவுடன் தொடர்புள்ள மற்பாண்ட பாத்திரம், கண்ணாடி – மற்பாண்ட பாத்திரம் மற்றும் கண்ணாடி இரவு விருந்து பாத்திரம்
பகுதி 2: அனுமதிக்கப்பட்ட வரம்புகள்
(DSLS:...................: ........) (ISO 6486-2: 1999)

14) இலங்கை கட்டளை வரைவு – மக்கக்கூடிய தொழிற்துறை அறுந்தும் உறிஞ்சு குழாய்கள் – பிளாஸ்டிக்
(DSLS:...................: ........) (ISO 5424: 2022)

15) இலங்கை கட்டளை வரைவு – ஈயம் மற்றும் கடமியம் விடுவிப்பு – உணவுடன் தொடர்புள்ள மற்பாண்ட சமையல் பாத்திரம்
பகுதி 2: அனுமதிக்கப்பட்ட வரம்புகள்
(DSLS:...................: ........) (ISO 8391-2: 1986)

16) இலங்கை கட்டளை வரைவு – ஈயம் மற்றும் கடமியம் விடுவிப்பு – உணவுடன் தொடர்புள்ள கண்ணாடி வெற்றுப் பாத்திரம்
பகுதி 2: அனுமதிக்கப்பட்ட வரம்புகள்
(DSLS:...................: ........) (ISO 7086-2: 2020

17) இலங்கை கட்டளை வரைவு – ஒரே மாதிரியான பொருட்களின் அளவை ஆராய்வதற்காக சோதனை ரீதியாக தீர்மானிக்கப்பட்ட தொடர்புடைய உணர்திறன் காரணிகளைப் பயன்படுத்துவதற்கு வழிகாட்டல் - மேற்பரப்பு இரசாயன பகுப்பாய்வு - Auger electron spectroscopy மற்றும் X-ray photoelectron spectroscopy
(DSLS:...................: ........) (ISO 18118: 2015)

மேலுள்ள கட்டளைகள் வரைவில் பொதுசனங்கள் மற்றும் ஏனைய ஆர்வமுடைய தரப்புகளிடம் இருந்து இலங்கை கட்டளைகள் நிறுவனம் கருத்துகளை கோருகிறது.

இந்த கட்டளைகள்/ திருத்தங்கள் வரைவு இறுதி செய்யப்படுவதற்கு முன் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் தொடர்புடைய குழுக்கள் மூலம் கிடைக்கப்பெறும் கருத்துகள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.

மேலுள்ள 1) தொடக்கம் 04) வரையான கட்டளைகள்/ திருத்தங்கள் வரைவின் பிரதிகளை SLSI இன் விஞ்ஞானத் தரப்படுத்தல் பிரிவு அல்லது ஆவணப்படுத்தல் மற்றும் தகவல் பிரிவில் இருந்து பெற முடியும் என்பதோடு www.slsi.lk என்ற இணையதளத்தில் இருந்து இலவசமாக தரவிறக்கம் செய்யவும் முடியும். கட்டளைகள் வரைவு 5) தொடக்கம் 17) வரை SLSI நூலகத்தில் இருந்து கொள்வனவு செய்ய முடியும்.

2023-05-03 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கருத்துகள் எனக்கு கிடைத்தல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை கட்டளைகள் நிறுவனம்,**
**இல. 17, விக்டோரியா பிளேஸ்,**
**எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08,**
**தொ.: 011 – 2671567 – 72**
**தொலைநகல்: 011 — 2671579**
**மின்னஞ்சல்: dg@slsi.lk,**
**இணையதளம்: www.slsi.lk**
**Facebook: https://www.facebook.com/officialSLSI**

### இலங்கை கட்டளைகள் நிறுவனம்

தொழில்நுட்ப அமைச்சு

# இலங்கைக்கு எதிரான 13 பேர் கொண்ட நியூசிலாந்து டெஸ்ட் குழாம் அறிவிப்பு

## இங்கிலாந்தை எதிர்த்தாடிய அணியில் மாற்றமில்லை



இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 1–1 என சமன் செய்த அதே 13 பேர் கொண்ட நியூசிலாந்து குழாம் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கும் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இங்கிலாந்துக்கு எதிராக வெலிங்டனில் கடந்த செவ்வாய்க்கிழமை முடிவுற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி ஒரு ஓட்ட வித்தியாசத்தில் வெற்றியீட்டிருந்தது.

இந்நிலையில் இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகளை கொண்ட டெஸ்ட் தொடர் வரும் மார்ச் 9ஆம் திகதி கிறிஸ்சேர்ச்சில் ஆரம்பமாகவுள்ளது. இதில் பங்கேற்பதற்காக இலங்கை அணி ஏற்கனவே நியூசிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது.

இதில் அடுத்தடுத்து இரண்டு இன்னிங்ஸ்களில் ஒற்றை இலக்கங்களை மாத்திரம் பெற்ற வில் யங் நியூசிலாந்து குழாத்தில் இடம்பெற்றுள்ளார். எனினும் டொம் லதம், டெவோன் கொன்வோய் மற்றும் டொம் பிளன்டல் உடன் முன்னாள் தலைவர் கேன் வில்லியம்சன் துடுப்பாட்ட வரிசையை பலப்படுத்துபவர்களாக உள்ளனர்.

அணித் தலைவர் டிம் செளதியுடன் மட் ஹென்ரி மற்றும் அனுபவ வீரர் நீல் வக்னர் பந்துவீச்சில் பலம்சேர்க்கின்றனர். இதில் கொன்வோய் மற்றும் ஹென்ரி இருவரும் சிறு காயத்தில் இருந்து மீண்டு வருகின்றனர். எனினும் இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்டுக்கு இருவரும் உடல் தகுதி பெறுவார்கள் என்று எதிர்பார்ப்பதாக நியூசிலாந்து பயிற்சியாளர் கரி ஸ்டீல் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

எனினும் காயத்திற்கு உள்ளான வேகப்பந்துவீச்சாளர் கைல் ஜேமிசன், அறிமுக வேகப்பந்து வீச்சாளர் ஜேகோப் டேபி மற்றும் சுழல்பந்துவீச்சாளர் இஸ் ஷோதி ஆகியோர் இலங்கை அணியுடனான டெஸ்ட் தொடரில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

2021 ஆம் ஆண்டு இடம்பெற்ற முதல் டெஸ்ட் சம்பியன்சிப் பட்டத்தை வென்ற நியூசிலாந்து கிண்ணத்தை தக்கவைக்கும் வாய்ப்பை ஏற்கனவே இழந்துள்ளது. எனினும் இந்த சம்பியன்சிப் இறுதிப் போட்டிக்கு இலங்கை அணி தகுதி பெறுவதற்கு நியூசிலாந்துடனான தொடர் தீர்க்கமாக உள்ளது. இலங்கை அணி நியூசிலாந்து டெஸ்ட் தொடரை முழுமையாக வென்று இந்திய மற்றும் அவுஸ்திரேலியாவுக்கு இடையே தற்போது நடைபெற்றுவரும் டெஸ்ட் தொடரில் தனக்கு சாதகமாக முடிவு கிடைத்தால் இலங்கைக்கு உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டிக்கு முன்னேற முடியும்.

எனினும் இங்கிலாந்துக்கு எதிரான இண்டாவது டெஸ்டில் இரண்டாவது இன்னிங்ஸை பலோ ஓன் செய்த சூழலில் அதில் வெற்றி பெற்ற உத்வேகத்துடனேயே நியூசிலாந்து இலங்கை அணியை எதிர்கொள்ளவுள்ளது.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் கேன் வில்லியம்சன் சதம் பெற்று சோபித்ததோடு விக்கெட் காப்பாளர் டொம் பிளன்டல் துடுப்பாட்டம் மற்றும் விக்கெட் காப்பில் சிறப்பாக செயற்பட்டார். எனினும் தேசிய அணி ஒப்பந்தத்தில் இருந்து ட்ரென்ட் போல்ட் விலகத் தீர்மானித்தது மற்றும் கைல் ஜமிசன் தொடர்ந்து உபாதைக்கு உள்ளான நிலையில் நியூசிலாந்து பந்துவீச்சு சற்று பலவீனமாக உள்ளது.

நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்டுக்கு முன்னர் திமுத் கருணாரத்ன தலைமையிலான இலங்கை அணி நாளை (04) கிறிஸ்சேர்ச்சில் நியூசிலாந்து பதினொருவர் அணியுடன் இரண்டு நாள் பயிற்சிப் போட்டியில் ஆடவுள்ளது.

**நியூசிலாந்து குழாம்:** டிம் செளதி (தலைவர்), டொம் பிளன்டல் (விக்கெட் காப்பாளர்), கேன் வில்லியம்சன், நீல் வக்னர், மட் ஹென்ரி, டெவோன் கொன்வோய், டொம் லதம், பிளயர் டிக்னர், ஹென்ரி நிகொல்ஸ், ஸ்கொட் குகுலைன், மைக்கல் பிரேஸ்வெல், வில் யங், டரில் மிட்சல்.

# சிறைச்சாலை மல்யுத்தம்: மட்டக்களப்பு அணி முதலிடம்

காரைதீவு குறூப் நிருபர்



இலங்கை சிறைச்சாலைகளுக்கு இடையில் இடம்பெற்ற மல்யுத்த போட்டியில் தேசியரீதியில் மட்டக்களப்பு அணி முதல் இடம் பெற்றது.

அகில இலங்கை சிறைச்சாலைகளுக்கு இடையில் இடம்பெற்ற மல்யுத்த போட்டி அண்மையில் பொலநறுவை றோயல் கல்லூரியில் இடம்பெற்றது. இப் போட்டியில் மட்டக்களப்பு சிறைச்சாலையை சேர்ந்த அணி 9 தங்கம், 1 வெள்ளி மற்றும் 4 வெண்கல பதக்கங்களை பெற்றது. இதில் காரைதீவைச்சேர்ந்த அ. பிறேமகாந்தன் 97–125 கிலோ எடைப் பிரிவில் தங்க பதக்கமும் அஜித் 64–71 எடைப் பிரிவில் வெண்கல பதக்கமும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.



இலங்கை பாடசாலை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் 16 அணிகள் கலந்துகொண்ட சமபோஷ வெற்றிக் கிண்ணப் போட்டியில் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற மருதமுனை அல்– மனார் மத்திய கல்லூரி மாணவர்கள் கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தினால் கௌரவிக்கப்பட்டபோது பிடிக்கப்பட்ட படத்தினை காணலாம்.
(படம்: பெரியநீலாவணை தினகரன் நிருபர்)

# ஜி.எஸ்.கே அணி சம்பியன்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்



அனுராதபுரம் ஹெலம்பகஸ்வெவ பவர் ஹிட்டர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கம்பிரிகஸ்வெவ ஜி.எஸ்.கே விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் பவர் ஹிட்டர்ஸ் கழகத்தின் தலைவர் எப். முன்திர் தலைமையில் ஹெலம்பகஸ்வெவ வித்தியாலய மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது. இறுதிப் போட்டியில் கம்பிரிகஸ்வெவ. ஜி.எஸ்.கே விளையாட்டு கழகம் அளுத்கம எம்.சி.சி விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தியது.

# முதலிடத்தில் அஷ்வின்




சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் டெஸ்ட் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சனை பின்தள்ளி இந்திய சுழற்பந்து வீச்சாளர் ரவிசந்திரன் அஷ்வின் முதலிடத்திற்கு முன்னேற்றம் கண்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஆறு விக்கெட்டுகளை வீழ்த்தியதை அடுத்தே அஷ்வின் முதலிடத்திற்கு முன்னேறியதோடு நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி தோற்ற நிலையிலேயே அன்டர்சன் இரண்டாவது இடத்திற்கு தள்ளப்பட்டார்.

36 வயதான அஷ்வின் 2015 ஆம் ஆண்டு தரவரிசையில் முதல் முறை முதலிடத்திற்கு முன்னேறிய பின்னர் அந்த இடத்திற்கு பல தடவைகள் வந்துள்ளார்.

# உலகக் கிண்ணத்தில் அதிக கோல் பெற்றவர் காலமானார்



ஒற்றை உலகக் கிண்ணத் தொடரில் அதிக கோல் பெற்று சாதனை படைத்த பிரான்ஸ் முன்னாள் கால்பந்து வீரர் ஜஸ்ட் பொன்டைன் தனது 89ஆவது வயதில் கடந்த புதன்கிழமை (01) காலமானார்.

1958 ஆம் ஆண்டு சுவீடனில் நடந்த உலகக் கிண்ணப் போட்டியில் பொன்டைன் பிரான்ஸ் அணிக்காக ஆறு போட்டிகளில் பெற்ற 13 கோல்கள் என்ற சாதனை இன்றுவரை முறியடிக்கப்படாமல் உள்ளது.

இதன்மூலம் அவர் உலகக் கிண்ணத்தில் அதிக கோல் பெற்றவர் வரிசையில் ஆர்ஜன்டீனாவின் லியோனல் மெஸ்ஸியுடன் நான்காவது (13) இடத்தை பகிர்ந்துகொண்டுள்ளார். மெஸ்ஸி இந்த கோல்களை பெற 26 போட்டிகளில் ஆடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரான்ஸ் அணிக்காக 21 போட்டிகளில் மாத்திரமே ஆடிய பொன்டைன் 30 கோல்களை பெற்றார்.

# டுபாய் பாரா மெய்வல்லுனர்: இலங்கைக்கு 4 பதக்கங்கள்




டுபாயில் நடைபெற்ற 14ஆவது பஸ்ஸா டுபாய் கிராண்ட் பிரிக்ஸ் மெய்வல்லுனர் போட்டியில் இலங்கை பாரா அணி வீரர்கள் நான்கு பதக்கங்களை வென்றுள்ளனர்.

இதில் ஆண்களுக்கான ரீ47 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குகொண்ட மதுரங்க சுபசிங்கவும், ஆண்களுக்கான ரீ42 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குகொண்ட அனில் பிரசன்னவும் தங்கப் பதக்கங்களை சுவீகரித்தனர்.

ஆண்களுக்கான ரீ44 100 மீற்றர் போட்டியில் இலங்கை சார்பில் களமிறங்கிய நுவன் இந்திக வெள்ளிப் பதக்கத்தை வென்றார். அதேபோன்று, ஆண்களுக்கான ரீ46 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குகொண்ட பிரதீப் சோமசிறி வெண்கலப் பதக்கத்தை வென்றமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச செய்திகள்

## பலஸ்தீனர் சுட்டுக்கொலை



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேல் இராணுவம் புதனன்று (01) நடத்திய சுற்றிவளைப்பு தேடுதலில் பலஸ்தீனர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். அமெரிக்க இஸ்ரேலியர் ஒருவர் கடந்த திங்களன்று சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்டே இந்தத் தேடுதல் இடம்பெற்றுள்ளது.

ஜெரிகோவுக்கு அருகில் இருக்கும் அகபாத் ஜப்ர் அகதி முகாமுக்குள் நுழைந்ததை அடுத்து தப்பிச்செல்ல முயன்ற இருவர் மீது படையினர் சூடு நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது. இதன் போது இஸ்ரேல் இராணுவம் நால்வரை கைது செய்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான 22 வயது மஹமூத் ஜமால் ஹசன் ஹம்தான் என்பவர் உயிரிழந்ததாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பிராந்தியத்தில் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில் இந்த ஆண்டு ஆரம்பம் தொடக்கம் 64 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மாணவிகளை இலக்குவைத்து

## ஈரானில் தொடரும் விச வாயு தாக்குதலால் பெரும் பரபரப்பு



ஈரானில் மற்றொரு விச வாயு தாக்குதல் அலையால் 26 பாடசாலைகளைச் சேர்ந்த பல டஜன் பெண்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான தாக்குதல்களால் கடந்த நவம்பர் தொடக்கம் 1,000க்கும் அதிகமான மாணவிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் சுவாச பிரச்சினைகள், குமட்டல், தலைசுற்று மற்றும் சோர்வினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மகளிர் பாடசாலைகளை மூடும் முயற்சியாகவே இவ்வாறு திட்டமிட்ட விச வாயு தாக்குதல் இடம்பெறுவதாக பெரும்பாலானோர் சந்தேகிக்கின்றனர். எனினும் இதனை ஒரு திட்டமிட்ட தாக்குதலாக அரசு இன்னும் உறுதி செய்யவில்லை.

இந்த நஞ்சூட்டல் சம்பவங்களின் மூல காரணியை கண்டுபிடிக்க ஜனாதிபதியால் தாம் நியமிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்ட உள்துறை அமைச்சர் அஹமது வாஹிதி, இது தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டதாக வெளியான செய்தியை பொய் என மறுத்தார்.

புதிய விசவாயு தாக்குதல் ஐந்து நகரங்களைச் சேர்ந்த குறைந்தது 26 பாடசாலைகளில் இடம்பெற்றிருப்பதாக உள்ளூர் ஊடகங்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் டெஹ்ரான், வடமேற்கு நகரான அர்தாபில் மற்றும் மேற்கு நகரான கெர்மன்ஷாவில் உள்ள பாடசாலைகளுக்கு அம்புலன்ஸ் வண்டிகள் விரைந்திருப்பதோடு மருத்துவமனைகளில் மாணவிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஷியா புனித நகரான குவாமில் முதலில் இடம் பெற்ற இந்த விசமூட்டல் சம்பவங்கள் அதிகரித்திருக்கும் நிலையில் அரசு மீதான மக்களின் அழுத்தமும் அதிகரித்துள்ளது.

### ஆஸி. காலனித்துவத்தை எதிர்த்த:

## பழங்குடியினரின் ஈட்டிகளை திருப்பி அளிக்க இணக்கம்



பிரிட்டிஷ் நாடுகாண் பயணியான ஜேம்ஸ் குக் 1770 ஆம் ஆண்டு முதல் முறை அவுஸ்திரேலியாவை அடைந்தபோது வீசப்பட்ட பழங்குடி மக்களின் ஈட்டிகள் சிட்னியில் உள்ள பழங்குடி மக்களின் சந்ததியினரிடம் திருப்பி அளிக்கப்படவுள்ளது.

அவுஸ்திரேலியாவில் முதல் காலனித்துவ குடியேற்றம் இடம்பெற்றபோது வீசப்பட்டதாக கூறப்படும் பல டஜன் ஈட்டிகளில் தற்போது நான்கு ஈட்டிகளே எஞ்சியிருப்பதாக நம்பப்படுகிறது.

அவை இங்கிலாந்தின் கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் வைக்கப்பட்டுள்ளன. பழங்குடி மக்கள் கடந்த 20 ஆண்டுகளாக மேற்கொண்ட பிரசாரத்தை அடுத்து அந்த ஈட்டிகளை திரும்ப அளிக்க கேம்ப்ரிட்ஜின் திரித்துவக் கல்லூரி இணங்கியுள்ளது.

மாலுமியான குக் சிட்னியின் தெற்கில் உள்ள பொடனி பே கடற்கரையிலேயே முதல் முறை தரை இறங்கினார். அவரது வருகையை இரு பழங்குடி உறுப்பினர்கள் எதிர்த்தனர்.

குக்கின் வருகை அவுஸ்திரேலிய நவீன வரலாற்றின் ஆரம்பம் என்று பெரும்பாலான அவுஸ்திரேலியர்கள் நம்புகின்றனர்.

## அமெரிக்க டொலருக்கு மாறும் லெபனானின் பேரங்காடிகள்



லெபனானில் அரசு அனுமதித்ததை அடுத்து பேரங்காடிகள் பலவீனம் அடைந்துள்ள உள்நாட்டு நாணயத்திற்கு பதில் பொருட்களை அமெரிக்க டொலரில் விலையிட ஆரம்பித்துள்ளன. 2019 தொடக்கம் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் லெபனான் மக்கள் தொகையில் 80 வீதத்திற்கு மேற்பட்டவர்கள் வறுமையில் வாடுவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. நாளுக்கு நாள் வீழ்ச்சி கண்டுவரும் உள்நாட்டு நாணயம் கடந்த புதன்கிழமையாகும்போது டொலருக்கு நிகராக 90,000 பௌண்ட்களாக இருந்தது. இதுவே ஜனவரி பிற்பகுதியில் 60,000 பௌண்ட்களாக பதிவாகி இருந்தது. இந்நிலையில் டொலரில் விளையிடப்பட்டிருக்கும் பொருட்களை வாடிக்கையாளர்கள் டொலர் கொடுத்து அல்லது அன்றைய தினத்திற்கான பரிமாற்ற வீதத்தின் அடிப்படையில் உள்நாட்டு நாணயத்தைக் கொடுத்து வாங்க முடியும்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மார்ச் மாதம் 3ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.